644

644

ஸ்ரீ கரபாத்திர

# சிவப்பிரகாச சுவாமிகள்

## சரித்திரம்.

வே. மோ. ஆ.

கா. சிவானந்த யதீந்திரர்.

Δ2,7K
N34
68889




மஹான் ஸ்ரீகரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள்.

வியாசர்பாடி, சென்னை.

ஸ்ரீ கரபாத்திர

# சிவப்பிரகாச சுவாமிகள்

சரித்திரம்.

ஓம்.

கரபாத்திர

# ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

## சரித்திரம்.


வேத மொழிபெயர்ப்பாசிரியர்

காசிவாசி சிவானந்த யதீந்திர சுவாமிகளால்

இயற்றப்பட்டு,



பல அன்பர்களின் பொருளுதவியால்

பதிப்பித்தது.

திருவொற்றியூரான்

வேத மொழிபெயர்ப்புக் காரியாலய வெளியீடு.

1934.


காபி ரைட் ]

[ விலை அணா 12.

PRINTED AT THE
EVEREADY PRESS,
CHOOLAI - MADRAS.

# FOREWORD.

BELIEF in the Divine Existence is an inheritance of the Hindu from ancient times and he holds, with the advance of philosophic thinking that God has a dual existence, Suguna and Nirguna, the manifest and the unmanifest; that the several forms of the belief as personal, impersonal, personal-impersonal, represent the state of manifestation and that the form of belief representative the absolute is its unmanifest state. This Divine Principle, universal in its presence, is believed to pervade the human organism and have its being beyond the plane of sense-perception, and in its realisation a highly developed soul or Guru is needed to enable the aspirant to transcend the sense limitations. Our land is fertile in such spiritual teachers and they appear oftentimes in obedience to the Divine plan to awaken and uplift the country by arousing salutary moral forces.

Swami Karapathra Sivaprakasa with whose life this work is concerned was one such spiritual teacher with a character the aggregate of all moral virtues but that which particularly distinguished him was his mildness and sweetness of temper. His renunciation was of a genuine type, the outcome of internal peace and enlightenment. He used to emphasise that a person who took this step without self

realisation could not be on firm foundation. He was marked by great love and ambition to enlighten people and attracted large numbers from the rich and the poor, from the learned and the ignorant, each and all he readily heard and councelled. He was affable and courteous in the highest degree. His adoptation was remarkable. His teachings were weighed and imparted to suit the capacity of the devotee. Great was his compassion for the poor and suffering and he gave them comforting suggestions and advice. His delight was unbounded on hearing charitable deeds of nobly inspired men. His friendly spirit towards those that had tasted the sweetness of the soul and immense joy at the sight of those that manifested a burning desire for its realisation, all these bespeak the glory of the sage. By the test of such genuine virtues and the significant mark of the spirit of the Greatest Benefactor it manifestly appeared how perfectly the master was disengaged from the lower self.

He taught the students to experiment and to practise. If one did not possess the aptitude to visualise the field beyond the gross and subtle entities of the organism, the master would give suggestions for elementary practices. These consisted in concentrating on an object with or without syllabic accompaniment in or outside the body. When one becomes

successful, one is led into higher practices. The teachings of the Swami varied between these limits. From personal experience of the Swami and his incidental utterances now and again the belief forces itself on my mind that he must have worked his way methodically along lines of philosophical, moral and psychical preparation for higher life.

A deep sense of love and appreciation for Swami Karapathra Sivaprakasa inspired the author Kasivasa Swami Sivananda Yatheendra, in this laudable undertaking. Altho meagrely equipped, he has done his best to render the biography very inspiring and useful. Materials furnishd from various sources, i.e. Votaries, friends and relatives form the basis for this work. The author spared no pains in judiciously shaping it. Narration is vivid and unimpeachably faithful. Timely quotations render its impressive and instructive. In his sincere endeavour to disseminate the knowledge of Karapathra Sivaprakasa Swami's life and to secure to posterity its lasting remembrance, the author has laid us under a deep debt of gratitude.

Let me close this humble foreword, which I have ventured at the request of the author, expressing my deep gratitude for Swami Karapathra Sivaprakasa whose memory I cherish with great respect and in return for whose unbounded goodness I can do no better than endeavour to be worthy of his teachings.

DR. M. RAJABAHDUR.

ஓம்.

கரபாத்திர ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

# தேசிகமணிப்பத்து.

---

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

அன்னையே யருளா லயமதா யடியா
ரகத்துளே யறிவுரு வாகி
முன்னமா மறையும் மோனமாய் மொழிந்த
முடிவிலாப் பரம்பொரு டன்னை
பன்னுசீர் வியாசர் பாடியில் வளரும்
பரமனே பாத்திரக் கரத்தோய்
என்னைநீ யாள்வாய் சிவப்பிர காச
விறைவநற் றேசிக மணியே. (1)

கருணையோ ருருவாய்க் கலியினி லெழுந்து
கலங்கிய வுலகதைக் காத்த
அருளினர் கலியே யன்னையிற் சிறந்த
வன்புளா யடைந்தவர்க் கென்றும்
இருளுரு வியாசர் பாடியி லெழுந்த
விரவியே யென்னுயிர்க் குயிரே
கருவெடா தெனையாள் சிவப்பிர காச
கற்பக தேசிக மணியே. (2)

மட்டிலாப் புகழ்கொள் மாதவ ரேத்தும்
மாசிலா மரகத மலையே
பட்டினத் தடிபோற் பற்றெலாந் துறந்த
பரமனே பக்குவ மில்லார்க்

## தேசிக மணிப்பத்து.

கெட்டிடா வியாசர் பாடியி லமர்ந்த
வின்பமே யிழிவுளே னெனுங்கை
விட்டிடா தெனையாள் சிவப்பிர காச
வித்தக தேசிக மணியே. (3)

கல்லினி லமர்ந்து கல்லினும் வலிய
கல்மனந் தன்னையுங் கரைத்தோர்
சொல்லினு லறியாச் சொரூபமே காட்டுந்
தூயனே மாமறை போற்றும்
அல்லிநீர் வியாசர் பாடியில் வாழு
மருளுரு வாகிய வரசே
இல்லினில் விழாதாள் சிவப்பிர காச
வேந்தலே தேசிக மணியே. (4)

தவமெலாந் திரண்ட தண்ணருட் பிழம்பே
தனிச்சிவ ஞானமாங் கனியே
பவம்வரா தகன்றூர் பரவிடும் பாத
பணிபவ ரருந்திடும் பாகே
உவமையார் வியாசர் பாடியி லொளிரு
முயர்குருக் கோட்டமீ தோங்குஞ்
சிவமதே யாய சிவப்பிர காசச்
செல்வமே தேசிக மணியே. (5)

அடுத்திலேன் முறையாய்க் குருவையு மவர்தாட்
கரும்பணி யாற்றிலேன் பற்றை
விடுத்திலே னடியார் கூட்டமே விழையேன்
விமலநற் பத்தியே யில்லான்
தொடுத்தசீர் வியாசர் பாடியில் வாழுஞ்
சுயம்புவே சுத்தநன் மனத்தோ
டுடுத்திலேன் காவி யாள்சிவ வொளியா
ருத்தம தேசிக மணியே. (6)

## தேசிக மணிப்பத்து.

குணமிலேன் கோடி குற்றமே நிறைந்தோன்
குறியுள வுண்மைஞா னத்தின்
மணமிலேன் கொடிய மனத்தனேன் புலித்தோல்
மறைத்திவண் மேய்ந்திடு பசுயான்
பணவரா வியாசர் பாடியை யாண்ட
பதவுணர் வகத்தினிற் பெற்று
கணமுமே வாழேன் காத்திடு சிவப்பிர
காசனே தேசிக மணியே. (7)

உருவினால் விராக முளத்தினால் ஞான
முறையினாற் கருணையு முதவி
இருவினை யகற்றி யிருநில மாண்ட
விறைவனே யென்னிரு கண்ணே
திருவளர் வியாசர் பாடியில் விளங்குஞ்
செல்வமே சீருடைத் தேவே
அருளினி லெனையாள் சிவப்பிர காச
வத்தனே தேசிக மணியே. (8)

வந்துனை யடைந்தார் மாயவாழ் வதனில்
வாஞ்சையும் மனைமுதற் சூழும்
பந்துவில் விழைவும் மண்ணினிற் பரிவும்
பல்பொரு ளிச்சையு மகற்றி
உந்துநல் வியாசர் பாடியை மேவி
யுனதடி தொழார்களோ வருளிற்
சந்ததம் விளங்குஞ் சிவப்பிர காச
சற்குரு தேசிக மணியே. (9)

தேசிக மணிப்பத்து.

கண்படிற் பாவங் கருத்துறில் வீடு
கனிவுடன் பணிசெயி லின்பம்
பண்பட போற்றிற் பரகதி யிறையாய்ப்
பாவனை கொளவெலா மளிக்கும்
அண்ணறன் வியாசர் பாடியி லமர்ந்த
வருட்கட லாகிய வன்னாய்
திண்ணிதி லெனையாள் சிவப்பிர காச
சிற்கன தேசிக மணியே. (10)




வேதமொழி பெயர்ப்பாசிரியராகிய

இந்நூலாசிரியர்.

ஓம்.

பரமகுரவே நம:.

# முகவுரை.

எல்லாம் வல்ல இறைவனை மறுக்கின்றவரும், அவ் விறைவனது அருட் டிருமேனிகொண் டெழுந்தருளுகின்ற குருவை மறுக்கின்றிலர் என்பது துணிபே.

எங்கும் நிறைந்துள்ள கந்தழிக் கடவுள் நமது உள்ளத் தின்கண் ணிருந்தும் ஒளித்தனர்.

அவ் விறைவனர், சுந்தரப் பெருமானுரைத் தடுத்தாட் கொண்டது போன்று,

"தொண்டரைத் தாமே தூய கதியினிற் சேர்ப்பன்"

என்ற மூதுரைப்படி தாமே வந்து ஆட்கொள்ளும் அருட் டிறத்தரே யாயினும், குரு வடிவா யுருக்கொண்டு பக்குவ ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிப்ப ரென்பதே எல்லாச் சமயத் தவர்களாலும் உடன்படத் தக்கதாம்.

அக் குரவர்கள், சீடர்களின் பக்குவ தாரதன்மியத்தால், போதகர், வேதகர், நிசிதர், காமியர், சூசகர், வாசகர், காரகர், விகிதர் என எண்வகைப்படுவர்.

நமது கரபாத்திர சிவப்பிரகாச வள்ளலார், இக் குரவர் களிற் சிறந்த உண்மை ஞானத்தை யுவந்தருளும் விகிதகுரு வென்பது யாம் உள்ளவா றுணர்வோம்.

நமது உள்ளத்தின்கண் ஒளித்திருக்கின்ற பரமான்மா வின் கள்ளத்தைத் தவிர்த்துக் காட்டி யருளுகின்ற அருட்

டிருமேனி யென்னும் ஆசிரிய வடிவக் கடவுளின் உருவமே அருவத்தினுஞ் சிறப்புடைத்தா மென்பது எல்லா நூல்களின் உட்கிடை.

நமது தமிழ்நாடு ஏனைய நாட்டை நோக்கக் கற்றல் கேட்டலுடைய சான்றோர்களின் உண்மைச் சரிதங் கொண்டே பெருஞ் சிறப்புடைத்தென்பது உற்று நோக்குவார்க்குத் தெற்றென விளங்கும்.

தற்காலத்தில், ஆங்காங்கு சென்று, பிரசங்கித்து, பல வகை நற்கருமங்களில் ஈடுபடன் முதலிய செய்கை யுடையாரே உலகிற்குப் பேருதவி செய்கின்ற பெரியார் என்னும் ஒரு கிளர்ச்சி நிகழ்வதிலும், இருந்து காட்டி உலகை யீடேற்றுகின்றவரே முற்றும் பெரியார் என்பது பெருநூல்களுக்கும் பண்டைப் பெரியார் மரபுக்கும் ஒத்ததா மென்பது எமது கருத்து.

ஆதலின், பல பெரியார்களின் சரிதங்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றனவா மாயினும், பட்டினத்தடிகள்போல் முற்றத் துறந்து, திருமேனியாலும், திருவாக்காலும், திருவுளத்தாலும், நடையாலும், மற்றும் பலவித நற்செய்கைகளாலும் உலகை யீடேற்றுவான் எழுந்தருளிய **ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகளின்** சரிதமும் உலகிற்கு ஒரு தலையாக கொள்ளற்பாலதா மென நினைத்து,

பேராசிரியர், கோ. வடிவேலு செட்டியா ரவர்கள் முதலிய அறிஞர்களின் வரலாற்றுக் குறிப்புக்களைத் தழுவியும், சுவாமிகளின் முதல் மாணுக்கராகிய டாக்டர் இராசாபகதூர் அவர்கள் சொன்னதைக் கொண்டும், மற்றும் பல அன்பர்கள் கூறிய வரலாறுகளைப் பொருத்தியும், யாம் நேரிற் கண்டதைப் பற்றியும் சுருக்கமாய் இச் சரித்திரத்தை யெழுதினேம்.

திருவொற்றியூரா னடிமையும், தம்மை வந்தடைந்தார் களுக்கு ஆண்டையும், கலியுகச் சனகரும், பூமகள் பொன் மகளின் அநுக்கிரகத்திற்கு நற்பாத்திரரும், அடியார்களுக் கோ ரன்னையாரும், அறிஞர்களுக்கோர் தந்தையரும், வேத மொழி பெயர்ப்புப் பணியில் எம்மை அமர்த்தியவருமாகிய த. ப. இராமசாமி பிள்ளை யவர்கள் இதற்கும் நிமித்த கார ணமா யிருந்ததுபற்றி மிகவும் நன்றி பாராட்டுகின்றோம்.

சுவாமிகளின், வியாசர்பாடி மடாலயத்தார்கள் இதற்கு முன்னின்றதுபற்றி அன்பு செலுத்துகின்றோம்.

சுவாமிகளின் சீடர்களில் ஒருவராகிய செங்கல்வராய சுவாமிகள் இப் புண்ணிய சரித்திரம் வெளி வருவதற்கு எடுத்துக்கொண்ட பெரு முயற்சிக்கு அன்பர்கள் அன்பு பாராட்டுவார்களாக.

மற்றும், சுவாமிகளின் சீடர்களும், அன்பர்களும் இதைப் பதிப்பிப்பதற்குப் பொருளுதவி செய்ததற்கு சிவப்பிரகாச தேசிகனார் திருவருள் புரிவாராக.

வேதமொழி பெயர்ப்பாசிரியரும்,
இந்நூலின் ஆசிரியருமாகிய,
**காசிவாசி - சிவானந்த யதீந்திர சுவாமிகள்.**

உ

சிவமயம்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீக்ஷகராகிய
பண்டித சித சங்கத்து
நாராயண சுவாமி யவர்களால்
இயற்றப்பெற்ற

# சிறப்புப்பாயிரம்.

பாமலி நாவற் பூமலி நாடே
பலவுள வெனினும் நல்வளம் பெறீஇத்
தனக்குறழ் வின்றி மனக்கினி தாகிச்
சுவையிற் செறிந்துநல் லவையிற் புகுந்தே
யியல்வரம் பேற்று மயல்வரம் பறியா
திந்தநா ளிடையும் எந்தநா ளதனினும்
வீறுபெற் றோங்கி நாறுபு திசைதொறும்
நவம்பழுத் தோங்கச் சிவம்பழுத் தோங்குந்
தன்மைகண் டம்மவித் தலமிசைக் கடும்பொடும்
புகுந்தரன் சுவைத்தனன் றகுந்தகு மதுவென
வேற்றுமொழி யாளரு நாற்றிசை நாடும்
அறிதர வறிந்தன ரறைதரத் திகழும்
வண்டமிழ் பழுத்து வளம்பழுத் துயருந்
தமிழ்நா டதனொடு தங்குமற் றெவையும்
நிகர்தருங் கொல்லோ நீணில மதனிடை
அத்தகு நாட்டிடை யணிகனித் தெழுந்த
சான்றோ ருடைத்தெனு மான்றமர் மொழிகொளும்
தொண்டைநா டதனிடைக் கண்டவர் களிகொள

நீலக் கடலது கோலக் குடுமியில்
நாறிய வெயிலவன் வீறிய வுலகெலாம்
மயின்மிசை யமரு மயிலுடை நமதுநல்
உருவினை நினைத்தே யுருகுறச் செய்குவன்
ஆமெனப் புலவ ரணிந்தனர் யாமே
நேர்நின் றறிகுது நீணிலத் தடைந்தென
வந்து புகுந்து மறிகட லெதிரிடை
ஞாயிறு திக்கு நற்கவி னதனைக்
கண்டு வைகலுங் காணிய செவ்வேள்
நின்றன னாமென நிலவுறும் பெரிய
வாவியின் வாளை தாவி விசும்பிடை
வானயா றடைந்தே கானெயார் குழலியர்
மயலிடைப் படிந்து மறந்தறம் புரியா
வானவர் படியும் மானமில் நீரென
ஆண்டு நின்றோரீஇ யீண்டுநீர்க் கடலிடை
அம்மா பெரிதென வகமகிழ் வொடுநேர்
அடைந்திது லோப ருரும்பொரு ளாமென
நல்குவோர்க் கின்பம் நல்கா நிலைத்தென
வெறுபுறீஇ வண்மை விருப்புறீஇ நாளும்
அறம்பல புரிந்து திறம்பல கொளூஉம்
ஆன்றோர் பருகிட வாடிட நிலைபெறும்
பொய்கைக் கிணையாப் போதுவ தெவனெனப்
பொருக்கொனக் கடலொரீஇத் திருக்கிளர் வேலவன்
கையமர் வாளெனக் காணிய புகுந்து
நிலைதரும் வாவி யுலைவற வோங்குந்
திருப்போ ரூரினில் விருப்பூர் தரவே
வீர சைவம் விளங்குநற் குலத்தினில்
வந்தவ தரித்துக் கொந்தவிழ் சோலைக்

குயிலென மடவார் பயில்வுற வைகலும்
பொன்னக ரோவென மன்னுபு திகழுஞ்
சென்னைநன் னகரிடைத் தன்னிகர் வியாழ
மாமுனி யாமென வதிதரும் பெரியோன்
ஐவரை யறுவ ராக்கிய நெறியினன்
சிங்கைச் சங்கர தேசிக மரபினன்
அண்மினோ ரெவர்க்கு மளிமிகுந் தெழுதரத்
தன்னைத் தரவல சாது விரத்தின
சற்குரு வெனுமோர் தற்பர னடியினைச் .
சார்ந்தவ னருள்பெறீஇத் தங்குநல் வினையனுய்
அறமிலை துறவிலை யவனியி லெனுங்கொடு
மறவினை யாளர் திறம்பிறக் கொழிய
ஓங்கிய துறவினைத் தாங்கிய வறவனுய்
கையே கலமாய் ஐயமேற் றுண்டே
யிருந்திட மெங்கு மேகமே நோக்கி
யுடலுணர் வற்றே யுறைபவ னாகி
செந்தண்மை பூண்ட வந்தண னதலின்
சிவணிய தொண்டர் பவநிலை யறவே
ஒருக்கி யுளத்தினை யொன்றிடை யடைக்குங்
கால மொழிந்த காலையின் வேத
முடிவினை யெடுத்து முழங்குநல் விநோதனுய்
வயலினிற் செழுமிய வளங்கெழு தாமரை
மலரகத் துகுதர மடல்விரி தாழை
வெண்பொடி யுகுத்து விளங்குறு தோற்றம்
வெண்பலி தீற்றி வெயல்வர மகிழ்ந்து
பனிமதி முகத்தொடு பசிக்கென வூரிடைப்
புகுந்தநற் றுறவோர் தகுங்கரத் ததனிடை
யிடும்பலி யுடையராய் எழும்புக ழுடையராய்

இலங்குமில் லுறையுநர் நலந்தனி தெரிக்கும்
பேரூ ராகிய தேரூர் தெருவொடு
சிவந்தனி திகழத் தவந்தனி நடம்புரி
வியாசர்மா பாடியில் விளங்கிய குருபர
சிவப்பிர காசத் தவப்பிர காசன்
வரலா றதனை மண்டிணி ஞாலத்து
எவரு மறிதர வின்புற நாளும்
வரைந்து தருகென வாய்த்தவம் முனிவரன்
மாணவர் குழுவி னுட் டானிகர் பண்பினன்
துறவற நெறியின னிறைவுறு மாண்பினன்
தேசிக னடிதொழுஞ் செங்கல் வராயன்
கேட்டன னகக் கிளர்தருஞ் சுவையொடு
அமைவர வதனை யழகுற யாத்தனன்
உயர்வுறு மயர்வறு முறைநடை யாக
எவனவ னெனிலோ வியம்புதுங் கேண்மோ
மங்கையர் முகமென மலர்தருந் தாமரை
வாவியிற் புகுந்தவர் மைவிழி யாமென
மலர்தருங் குவளை மலர்வாய் மடுத்தே
பாரிற் செறிந்த காரெனு மேதிகள்
உழக்குறுங் காலைக் குளத்துறை வாளை
தாவி மடியினிற் றுக்குறக் கன்றெனப்
பொழிதரு தீம்பால் புரிவளை நீரிடைக்
கலந்துற லதனைக் கண்டநற் குருகினம்
பாலினை நீரினைப் பகுத்துப் பாலினைப்
பருகிக் களித்துப் பரவச முறுதல்
தன்னிடத் துற்ற தவத்துற வறத்தினர்
பெயர்வடி வதனொடு மயர்வுறக் கலந்த
வின்பொளி யிருப்பினை யிலகுறப் பிரித்துத்

தானது வாமெனத் தன்வச மிழக்கும்
பெருநெறி யதனைப் பிறங்கிட விளக்குங்
கோவிலூ ரதனின் மேவுறு மிறைவரன்
விராக வடிவினன் மெய்த்தவக் குருபரன்
வீர சேகரன் விளங்குமெய்ஞ் ஞான
வாரிதி யாகிய வள்ளனற் சீடன்
செந்தமி ழாரியஞ் சிறந்திடு முளத்தோன்
கற்றவர்க் கினியன் நற்றவர்க் குரியன்
மறைமொழி பெயர்ப்பினன் கறையறு முளத்தினன்
சிங்கைச் சங்கர தேசிக னடியிணை
மறவா நோன்பினன் பிறவா நெறியினன்
அறுமுக னடிதொழு தவாறறுத் துயர்ந்தோன்
தேறிய புலத்தினன் வீறிய மாண்பினன்
மாசிகந் தொழிந்த காசி வாசி
சிவசிவா னந்தத் திறலோன் றனே.

உ

முருகக்கடவுள் துணை.

கரபாத்திர

# ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் சரித்திரம்.

## காப்பு.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கருணைகொணம் முருவாகிக் கரபாத்தி
ரப்பெயர்முன் கவினைப் பெற்று
வருசிவப்ர காசத்தின் வளமலிந்த
சரிதமது மாநி லத்தில்
திருமலிந்தெங் கணுமோங்கித் திகழ்ந்தருளின்
சிவானந்த விருத்தி தேங்க
அருளுருவச் சத்திபெற்ற வைங்கரனுக்
கிளையனிணை யடிகள் போற்றி.

## நாட்டுச் சிறப்பு.

சீர்பெற்றிலகு கார்நிறக் கடல்சூழ் பார்மகள் தனது தலைக்கோரணியாய்த் திகழ்வது தமிழ்நாடொன்றேயாம். இந்நாடு நீர்வகை, நிலவகை, மக்களின் ஒழுக்க வகை, அறிவு வகை, சமயநெறிவகை, சிறந்த பலநூல்வகை, பாஷைவகை

கடவுள் வழிபாடுவகை முதலியவைகளால் தெய்வத் திருவருள் கைவரப் பெற்ற தவமுடையவராய் உய்யும் நெறி யுணர்ந்த அடியவருடன் அறிஞர்குழாமும் திகழ்ந்தோங்கப் பெற்றதுமன்றி எந்நாட்டவரும் கண்ணோட்டங் கொள்ளத் தக்க அரும்பெரும் நாடு இந்நாடென்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்ததேயாம்.

அவ்வியல்பிற்றாய இந்நாட்டின்கண் உட்பிரிவாயுள்ளன சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு என்னும் மூன்று நாடுகள்.

அம்மூன்று நாடுகளிலும் மிகச் சிறந்தது தொண்டை நாடேயாம். அதுபற்றியே,

“ஏயு மாறுபல் லுயிர்களுக் கெல்லையில் கருணைத்
தாய னாள்தனி யாயின தலைவரைத் தழுவ
ஆயு நான்மறை போன்றநின் றருந்தவம் புரிய
தூய மாதவஞ் செய்தது தொண்டைநன் னாடு”

என்றார் சேக்கிழாரும்.

இந்நாடு வடக்கே வேங்கடமலையும், தெற்கே பிநாகி நதியும், கிழக்கே கடலும், மேற்கே பவள மலையும் எல்லைகளாக யுடையது.

இதனை,

“மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப் பிநாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு”

என்னும் கம்பரின் அமுதவாக்கா னறிக.

இத் தொண்டை நன்னாடு, சோழநாட்டைச் சேர்ந்த நாகபட்டினத்துச் சோழன் நாகலோகஞ் சென்றிருந்த காலத்

தில் அங்கு நாககன்னிகையை மணந்து அவள் வயிற்றி லுதித்த புதல்வனுக்குத் தனது நாட்டில் பாதி கொடுப்பதாக அவளுக்கு வாக்களித்து மீண்டு வரலானுன். மீளுங்கால் அர சனை நோக்கி நாக கன்னிகையானவள் "வேந்தே, யான் அப் புதல்வனை யெவ்வாறு அனுப்புவேன்?" என்று வினவ, அதற்குச் சோழவரசன், "மாதே! ஆதொண்டைக்கொடி ஒன்றை அடையாளமாய்க் கட்டித் தெப்பத்தின்மேலேற்றி அனுப்பக்கடவாய்" என்றனன். அவ்வாறே அந் நாககன் னிகை தன் புதல்வனுக்கு ஆதொண்டை யிலைகளை யுடுத்தி கடலின்மீது தெப்பத்தி லேற்றியனுப்ப அலைகளாற் செலுத் தப்பட்டு அப்புதல்வன் நாகப்பட்டினத் துறையை யடைந்த னன். அதைக்கண்ட சோழன் அக்குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து அந்நாட் டைப் பிரித்து அவனுக்குக் கொடுத்து அவனுக்குத் தொண்டைமான் என்னும் ஒரு திருப்பெயருமிட்டு முடி தரித்து பட்டம் சூட்டினன். அத் தொண்டைமான் ஆண்டு வந்ததால் தொண்டைநாடென வழங்கப்பட்டது.

பொன்விளைகின்ற கன்னடதேசத் தரசன் காவற்குட் பட்ட நந்தி துர்க்கமென்னு மோர் உயர்ந்த மலையின்கண் பண் டைக்காலத்திய சிவபெருமான் திருக்கோயில் விளங்கிக் கொண்டிருக்கின்றது. முன்னொருகாலத்தில் அம்மலைக்கு வசிட்ட முனிவர் எழுந்தருளினர். அக்காலத்தில் வசிட்ட முனிவரது காமதேனுவானது, சிவபெருமான் வாகனமாகிய இடபதேவரைக் கண்டு காமுற்றது அதனல் பால்வற்றி நிற்க, அதனை ஞானதிருட்டியா லுணர்ந்த வசிட்டமுனிவர் ஒரு தருப்பையை யெடுத்துக் கன்றாகச் சமைத்தனுப்ப காம தேனு அதனை நோக்கிப் பாலைச் சுரக்கவும், அப் பால் பெருக்

கெடுத்து வெள்ளமாய் அவ் வரையினின்றிழிந்து வந்தகார ணத்தாற் பாலாறு எனப் பெயர் பெற்றது.

இதனை,

காஞ்சிப் புராணம்.

"மேக முட்டி விழுப்புனல் சிந்தும் விரைப்பொழில்
நாக முட்டி யுடன்றம ராற்ற நகிற்றுணை
யாக முட்டர மாதர்க ளேக்கின ராட்டயர்
மாக முட்டி வளர்ந்துயர் நந்தி வரைக்கணே.

மாத வத்தினுயர்ந்த வசிட்டன் மகத்தினுக்
கேத மில்சுவைத் தீம்பய மீந்திடு தேனுவங்
கோத நஞ்ச மிடற்றவ னூர்விடை யேற்றினைக்
காத லாலொரு நாள்விழி முந்துறக் கண்டதால்.

கண்டு மீமிசை மிக்குல வாதெழு காமநோய்
கொண்டு நொந்துவிம் மாந்து மெலிந்து குழைந்துபான்
மண்டி யூறு செருத்தலும் வற்றி யுலர்ந்ததால்
அண்டர் யாரு முறுப்பி லடங்கிய தேனுவே.

அன்ன தன்மை வசிட்ட னறிந்து தருப்பையை
மன்னு மாமனு வாலொரு கன்றின் வரச்செய்து
முன்ன ருய்த்தலு மோந்துட னக்கி முகிழ்த்தெழு
நன்ன ரன்பி னயந்தது காம நலிந்ததே.

மழையெ லாங்குழு மிச்சொரி மாண்பென வோகையாற்
கழிய நீண்முலைத் தாரைகள் கான்றன கான்றபான்
முழுது மோர்நதி யாயவ ணின்றுமுந் நீர்புகுந்
தழிவி லும்பரு மாட்டயர் தீர்த்தம தாயதே".

எனவும்,

கந்த புராணம்.

“வாலி தாகிய குணத்தினன் வசிட்டனென் றுரைக்குஞ்
சீல மாமுனி படைத்ததோர் தேனுவின் றீம்பால்
சால நீடியே தொல்லைநாட் படர்ந்திடு தன்மைப்
பாலி மாநதிப் பெருமையான் பகர்வதற் கெளிதோ”

எனவும் வருமாற்றானறிக.

இத்தகைய சிறப்புவாய்ந்த பாலாறும் அதின் பிரிவாகிய சேயாறும் பாய்ந்து ஏரி குளங்களினிறைந்து அதன் கால் வாய் வாயிலாக உள்ளத்தின் விருத்திகள் உருவம் முதலிய வைகளை அடைந்து அவைகளே யாதல் போன்று அவ்வக் கழனிகளிற் பாய்ந்து, தெங்கு, கமுகு, வாழை, முதலியவை கள் வளர்ந்து பலனைத் தருவனவாகவும் அறிவுடையார் ஞான மாகிய பலனை காமம் முதலான பறவைகள் அணுகாவண்ணம் பாதுகாப்பது போல், சம்பா முதலிய பலவகை நெற்பயிர் கள் வளர்ந்து தழையும்படி விட்டில் முதலிய இடையூறுகள் சேராவண்ணம் பாதுகாத்து, பக்குவமாங்கால் அறுத்து களத்திலிட்டு புணையலாடி சாரம் கொண்டு அசாரம் நீக்கு கின்ற நுண்ணறிவினர்போல் பதர்களைப் போக்கி நெற்களைக் குவித்து அரசனுக்குரிய ஆறிலொரு கடமை போக எஞ்சிய ஐந்து பாகங்களையும் பிதுரர், தெய்வம், விருந்து, சுற்றம், தானங்கள் என்னும் முறைப்படி ஐவகையாகப் பகுத்து உண்டு அறநெறி வழுவாது இல்லற மாற்றி வருவார்கள் இந்நாட்டி லுள்ளவர்கள். இதையே குறித்துத் தெய்வப்புல மைத் திருவள்ளுவ தேவரும்,

திருக்குறள்.

“தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றாங்
கைம்புலத்தா றோம்பறலை”

எனத் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்.

இந்நாட்டில், திருவள்ளுவ நாயனுர், கச்சியப்ப சிவாச்சாரியர், இராமானுஜர், குகனேரியப்ப நாவலர், கம்பர், பரிமேலழகர், ஒட்டக்கூத்தர், சேக்கிழார், இரட்டைப் புலவர், அருணகிரி நாதர், பவணந்தி முனிவர், படிக்காசுப் புலவர், அப்பைய தீக்ஷிதர் முதலிய கவி யரசர்களும், அதிகமான் கறுப்பன், சடையப்பன், மணிகண்டன் முதலிய பெருந் தனமுடையவர்களும், நீதிகோடாத அரிய பெரிய அரசர்களும் விளங்கி யிருந்தார்கள்.

மற்றும், பல சான்ருேர்களும் விளங்கிக்கொண்டிருந்தமையானும், தற்காலத்தும் இருக்கின்றமையானும், இனிமேலும் இருப்பார்களாகலானும் சரஸ்வதியின் அவதாரமாகிய கவியரசி ஒளவைப் பிராட்டியாரும், “தெண்ணீர் வயற்ருெண்டை நன்னடு சான்ருேருடைத்து” என்று திருவாய்மலர்ந்தருளினர்.

சான்ருேர்களாற் பெருமையடையாத நாடுகள் ஏனைய வளங்களாற் சிறப்புடையனவா யிருப்பினும் உற்று நோக்கின் உயிர்கட்கு இன்பமும் மகிழ்ச்சியு முண்டாக்குவதற்கு வலியற்றனவேயாம். அதனுற்ருன் வசிட்டமுனிவரும்,

“எவ்விடத்தில்லை நல்ல ஞானிகளா மீர்ங்கதிர்மலர்
குளிர் சோலை அவ்விடங் கானன் மேடதாம்”

என்றருளிச் செய்துள்ளார்.

சிவகணங்களுள் தலைவனுகிய துண்டீரன் என்பவனுல் ஆண்டு வந்தமையின் துண்டீர நாடென்றும், தண்டக வேந்தனுல் பண்டைநாள் ஆணைசெலுத்தி வந்தமையால் தண்டக நாடென்றும், தொண்டைமானுற் காக்கப்பட்டு வந்ததால் தொண்டைநாடென்றும் வழங்கப்படுவதும் இந்நாடேயாம்.

இதனை,

விநாயக புராணம்.

"அண்டரும் புகழ்துண் டீர ணண்டுதுண் டீர நாடாய்த்
தண்டகன் பின்ன ராண்டு தண்டக நாடய்ப் பின்னர்த்
தொண்டைமா னாண்டு தொண்டை நாடெனத் தூலங்கிற் றென்ன
பண்டயன் படைப்புத் தொட்டுப் பயிலுமித் தொண்டை நாடு".
என்பதனு லறிக.

தெய்வதச்சனு லமைக்கப்பட்ட புழற் கோட்டம், புலியூர்க் கோட்டம், ஈக்காட்டுக் கோட்டம், மணவூர்க் கோட்டம், செங்காட்டுக் கோட்டம், பையூர்க் கோட்டம், எயிற் கோட்டம், தாமற் கோட்டம், ஊற்றுக்காட்டுக் கோட்டம், களத்தூர்க் கோட்டம், செம்பூர்க் கோட்டம், ஆமூர்க் கோட்டம், ஈதூர்க் கோட்டம், வெண்குன்றக் கோட்டம், பலகுன்றக் கோட்டம், சிறுகைக் கோட்டம், வேங்கடக் கோட்டம், வேலூர்க் கோட்டம் என்னும் இருபத்துநான்கு கோட்டங்களை யுடையதும் இந்நாடொன்றேயாம்.

புறச்சமயத்தவர்கள் பரம்பரைத் தொடர்பால் இறைவனை யடையுமாறு போன்றல்லாது அகச்சமயத்தவருள் உண்மைநெறி மேற்கொண்டார் நேரே பரசிவத்தை யடையுமாறு பாலாறு இந்நாட்டை முப்பாலுடையராய்ச் செய்து கொண்டும் பலவளம்படச் செய்துகொண்டுங் கடலிற் சேர்கின்றதா மாகலின் தண்ணீர் மயமான வான்கங்கையைக் கொண்ட நாடும் மற்றும் பல பெருநதிகளைக் கொண்டநாடுகளும் இந்நாட்டிற்கு இணையெனச் சொல்லவுங் கூடுமோ? பாலாறு பாய்ந்து மேலாக விளங்குகின்ற எண்டிசை புகழ்கின்ற தொண்டைநாட்டின் எண்டராப் பெருமையை யெடுத்துச் சொல்ல வான்குருவிற்கு மாகாதாமெனின் யானெடுத்தோதுதல் யாங்ஙனம்? பாலாற்றின் பாலைப் பல்லுயிர்களும் பரிவோடு பருகி வருகின்றதா லன்றோ அதன் நீருங் குறைவுபட்டதா மென்ப.

நாட்டுச் சிறப்பு முற்றிற்று.

## நகரச் சிறப்பு.

அவ்வியல்பிற்ருகிய தொண்டை நாட்டின்கண், உமா தேவியார் சிவபெருமானைப் பூசித்ததும், முப்பத்திரண்டறங்களைச் செய்ததும், பிரமன், விஷ்ணு, இந்திரன், சந்திரன் முதலியோர் வழிபட்டதும், வேதமே மாமரமாக விளங்குவதும், பிரமன் சிருட்டிக்கும் அகப்படாமலிருப்பதும், திருவேகம்பம், திருமாற்பேறு, திருவோத்தூர், திருமேற்றளி முதலிய சிவாலயங்களை யுடையதும், மூர்த்தி, தலம், தீர்த்தங்களில் விசேடித்ததுமான காஞ்சிமா நகரத்திற்குக் கிழக்கில் ஐந்து யோசனைக்குள்ளும், திருக்கழுக்குன்றத்திற்கு ஈசான திக்கில் பத்து நாழிகை வழிக்குள்ளும், கீழ்க்கடலுக்கு மேல் பக்கத்தில் இரண்டு நாழிகை வழிக்குள்ளும், திருவான்மியூருக்கு இருபது நாழிகை வழிக்குள்ளும் இருப்பது யுத்தபுரியாம். அதாவது திருப்போரூர் என்னும் நகரமாம்.

முன்னொரு காலத்தில் பிரணவம் சுப்பிரமணியக் கடவுளை நோக்கித் தவஞ் செய்ய, சுப்பிரமணியர் ஓங்கார சொரூபத்திற்கு முன்றோன்றி பிரணவ, நினக்கு யாது வேண்டுமென்று வினவ, அதற்குப் பிரணவம் உத்தரம் உரைத்ததாவது, 'கந்தா! கடம்பா! கதிர்வேலா! குக்குடத்துவஜா! வேன்முருகா! மான்மருகா! முன்னர் வேதங்கள் நான்கும் அடியேனை விட்டு விட்டுச் சென்று உருத்திரகோடி க்ஷேத்திரத்தில் நான்கு மலை வடிவங்களாயின. அடியேன் இப்போது தனித்து நிற்கின்றேன். தடங்கருணைப் பெருங்கடலே! ஆறுமுகம் படைத்த கோவே! கிருபைகூர்ந்து அடியேனை ஆட்கொண்டருள வேண்டும் என்று வேண்ட அதற்குப் பந்தமகற்றும் கந்தப்பெருமான், பிரணவமே! நீ யாதும் அஞ்ச வேண்டாம். திருப்போரூரின்கண் யானிருக்குமிடத்திற்குப் பின்புறத்தில் மலை வடிவமாய் இருந்து வருவாயாக என்றரு

ளிச்செய்ய, அவ்வாறே மலை வடிவமானது இப் புரியிலுள்ள யுத்தகிரியேயாம். இத்தீர்த்தமும் பிரணவ தீர்த்தமென்றே திருப்பெயர் பூண்டது.

அங்கயற்கண்ணம்மையாரின் ஆணையால் சிதம்பர தேசிக சுவாமிகளால் ஏழாம் முறை ஜீரணோத்தாரணம் பண்ணப் பட்ட அரிய பெரிய திருப்பணிகளமைந்த முருகக்கடவுளின் திருவாலயத்தால் அழகுற்று விளங்குவதும்,

வட பக்கத்தில் சிதம்பர சுவாமிகள் சிவலிங்க மூர்த்த மாய்த் திருக்கோயில்கொண்டு வீற்றிருக்கின்ற மடாலயத்தி னல் பெருமையுற்று விளங்குகின்றதும் இந் நகரமேயாம்.

முன்னர், பல ரிஷிகள் கூழ்மி பவக்கடலைக் கடக்கும் உபாயம் யாதென ஆலோசித்துக்கொண்டிருந்த சமயத்தில், பரத்துவாசர் சத்தியத்தை மேற்கொண்டதாலும், வசிஷ்ட முனிவர் தவத்தாலும், சதான்ம முனிவர் தருமத்தைக் கைக் கொண்டதாலும், காசிபர் வேள்வி செய்து முடிப்பதாலும், கௌதம முனிவர் துறவாலும் கடக்கலாமெனக் கூற அதைக் கேட்ட முருகக்கடவுள் அகத்திய முனிவரை நோக்கி 'அன்ப! எமது தந்தையாகிய சிவபிரானுக்குப் பதினாறு தலங்கள் மிகப் பிரியமானவைகள் போன்று, எமக்குள்ள அறுபத்து நான்கு தலங்களுள், பராக்கிரமம், திருச்செந்தூர், சாமி சைலம், கோமுக்தம், மகாதம்பவனம், யுத்தபுரம் என்னும் ஆறு தலங்களும் எமக்குப் பிரியமானவைகள். அவற்றுள் ளும் யாம் அசுரர்களுடன் அமராற்றி அவர்களின் தலையை யறுத்து எறிந்ததால் சிரம்பாக்கம் என்று இப்போதும் வழங்கி வருகின்ற சிறு கிராமத்தை யருகிலுடைய திருப் போரூர் நகரமே மிகப்பிரியமானது என்று கந்தவேளால் திரு வாய் மலர்ந்தருளப்பட்டது மிந் நகரமேயாம். இந்த திவ்ய க்ஷேத்திரம் தேவர்களனைவருக்கும் உறைவிடமாயுள்ளதாம்.

இந்த யுத்தபுரியின்கண் விஷ்ணு மூர்த்தியே சிவமுனிவர் எனப் பெயர்பெற்று தவஞ்செய்து வருகின்றனர். கண்ணுவ முனிவர் ஆச்சிரமம் உண்டு. கடற்கரையில் ஈசான திசையில் வாமகவி யென்னுமொரு க்ஷேத்திரத்தையு மருகிலுறப்பெற்றது.

இஃதன்றியும், இந்த க்ஷேத்திரத்தில் விஷ்ணு பிருகு முனிவரின் பத்தினியினது தலையை யறுத்துவிட்டமையால் பிருகு முனிவர் கோபமிக்குடையராய் விஷ்ணுவைப் பத்தவதாரம் எடுத்து வருமாறு சபித்துவிட்டு, அதைப் பார்த்துக் கொண்டிருந்த இலக்குமியை நோக்கி, அம்மையே, நீ "கசப்பு மிகுந்த வேப்பமர மாகக்கடவை" யெனச் சாபம் கொடுத்த மாத்திரத்தில் இலக்குமி வேப்பமர மாயினள். அன்று பிருகு முனிவர் சாபத்தின்படி வேப்பமரமா யெழுந்த வேப்ப மரம் இன்றும் உள்ளது.

இலக்குமி அன்று வழிபட்ட விநாயகக் கடவுள் அன்று முதல் இன்று பரியந்தம் வேம்படி விநாயகர் என்னும் திருநாமத்தோடு அம்மரத்தடியில் விளங்கி வருவதுடன் அன்பர்களுக்கு பேரருள் புரிந்து வருகின்றார். வேம்படி விநாயகர் என்பவரே திருப்போரூர்த் தல விநாயகர். மற்றும், இத்தலம் கௌமார மதத்தர்களாலும், வீர சைவர்களாலும், சைவர்களாலும், ஆதி சைவர்களாலும் நிறையப்பட்ட பல் வீதிகளையும் அழகிய மாடமாளிகை கூட கோபுரங்களையுமுடையதாம்.

இத்தலத்தில், ஆறெழுத்தோதும் ஒலியும், திருப்புகழ்ப் பாராயண ஒலியும், திருப்போரூர்ச் சந்நிதிமுறை படிக்கின்ற ஒலியும், கந்தரலங்காரம் ஓதும் ஒலியும், பல நூல்களாலும்,

குகனடியார்கள் குகப்பிரமத்தைப் போற்றும் ஒலியும், ஒவ்வொரு வீதிகளிலும் கடலின் பேரொலியைப் பார்க்கிலும் பெரிதாயுள்ளது.

மற்றும், அங்கு வேதங்களா லெடுத்துக் கூறப்படுகின்ற விடையூரினையே மேலென்பர் ஒரு சாரார்; அதைக் கேட்ட கௌமார மதத்தினராகிய மற்றொரு சாரார், "மறைகளிற் சாம மறை யாளு யிருக்கின்றேன்" எனக் கண்ணபிரான் கூறி யருளியபடி பெருமை வாய்ந்த சாமவேதம் எங்கள் சுப்பிரமணியக் கடவுளைக் கூறுகின்றது நமக்குத் தெரியாதோ அதைக் கொண்டன்றோ,

"சதாசிவனேமென வேதஞ் சாற்று மல்லால் முக்கனல்சூழ்
வேள்வியிற் சுப்பிரமணியனே மெனவும் முக்காற்கூறும்"

என்று திருவாய்மலர்ந்தருளினர் காஞ்சிப் புராண நூலாரும் என்பர்.

எங்கள் சிவபெருமானுர் எல்லாத் தேவர்கட்கும் குருவாவர். அவ்வாறே பதஞ்சலியும் கூறி யிருக்கின்றாரென்பர் மற்றொரு சாரார்; அதைக்கேட்ட பிறர் எங்களுடைய ஞான பண்டிதனுகிய முருகப்பெருமான் நுங்கள் சிவனுக்கும் பிரணவப் பொருளை யனுக்கிரகித்து 'சாமிநாதன்' என்றும், 'தகப்பன் சாமி' என்றும் பெயர் பெற்றதை உலகமெல்லா மறிந்திருக்க நீவிர் மாத்திரம் அறியாததென்னை? யென்பர். இவ்வாறு பலவகை விவாத வோசைகளாற் சூழப்பட்டது இந்த யுத்தபுரியாம்.

மற்றும், அங்குள்ள பூஞ்சோலைகளில் வாழுகின்ற மயில்கள், கோழிகள் கூவுவதைக் கேட்டவுடன் எம்மை முருக்கக் கடவுள் காலால் மிதித்து வைத்துக்கொண்டிருக்கின்றார்; ஆனால் உங்களைக் கொடிமேல் வைத்துக்கொண்டிருக்கின்றார்.

அந்தோ முருகப்பெருமான் திருவருளிருந்தவாறென்னே யென்று ஆடும் ஞான்று, அதைக் கேட்ட கோழிகள் நீ ஆணவமல மாகையால் உன்னை மிதித்து வைத்துக்கொண்டு அருள்புரிந்தனர். யான் கன்மமல மானதால் என்னை மேலே தூக்கி வைத்துக்கொண்டு திருவருள் புரிகின்றனர். யாரெனில்? இதோ இவ்வாலயத்தில் சான்றோர்களின் வாளால் வடுப்பட்ட "கொக்கறு கோ கோ" எனக் கூவுகின்ற பெருமையை யுடையது இந்நகர். கொக்கு - மாமரமாகிய அசுரனை, அறு - அறுத்த, கோ - கடவுள் என்பது பொருள்.

அன்னதானத்திற் கோரிடமாயும், அன்பர்கட்கோர் மடமாயும், ஏழைகட்கோ ரில்லமாயும், கண்டார்க்கும் கேட்டார்க்கும் நினைத்தார்க்கும், பெயரைச் சொன்னவர்க்கும் எல்லா நலங்களையும் நல்குவது இத் திருப்போரூர் என்னும் யுத்த புரியேயாம். அதுபற்றியே,

திருப்போரூர் சந்நிதி முறை.

"தேன்பாடுஞ் சோலைத் தென்போரி வேலவனை
தான்பாடு மேலோரித் தாரணிக்கே—யான்பாலுஞ்
சோறும் பெறுவார்கள் சொல்லவொண்ணுப் பேரின்பப்
பேறும் பெறுவார்கள் பின்."

எனச் சிதம்பர சுவாமிகளும் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

நகரச் சிறப்பு முற்றிற்று.

## வீரசைவமாட்சி.

தமிழ்நாட்டில் நிலத்தின் பாகுபாட்டாலன்றி மக்கட்குச் சாதி முதலாகிய பாகுபாடுக ளில்லாதிருந்துழியும், கருமம் பற்றி அந்தணர் முதலிய நான்கு வருணத்தார்களென வழங்குவது போன்று, விஷ்ணுவின் வழிபாடு செய்வோர்களை வைஷ்ணவ ரென்றும், சத்தியை யுபாசிப்பவர்களைச் சாத்தேய ரென்றும், குமாரக்கடவுளைப் போற்றுகின்றவர்களை கௌமார மதத்தார்க ளென்றும் வழங்கிவந்து முடிவில் அதனையே ஒரு சாதியாகக் கொண்டுவந்தது போன்று,

அத்துவிதப் பரவத்துவை யுணர்த்தலால், மறைகளின் திருமுடிகளுக்கொத்த ஆகமங்களின் உத்தர பாகங்களிற் கூறுகின்ற வீரசைவ மதமென்பது, வீ யென்னும் வித்தையில் இரமிப்பதினாலும், வீ என்னும் சொற்பொருளாகிய தீதகன்ற சிவசீவ ஐக்கியத்தில் மகிழ்ச்சியுற்றிருத்தலானும், வீ என்னும் பரஞானத்தில் இரமித்து மாயையை யொதுக்கியதானும், வேதாந்த ஞானத்தின் கண் விரவிய விதத்தானும், உட்பூசையில் உறுதிப்பா டுடைமையானும், மற்றும் பலவாய சிவத்தொண்டு நெறிகளின் திடத்தானும், இன்னோரன்ன பல காரணத்தானும், வீரம்பெற்று விளங்கும் வீரசைவம் என்னும் காரணப்பெயர் கொண்டது. இதுவே பண்டைநாள் தொடங்கி ஆரியர்களுடனும் ஆரியக் கொள்கைகளுடனும் விரவாது தனித்து நின்ற ஓர் அரும் பெருஞ் சமயமாகும் என்பதைப் பலநூல்களானும் இச்சமயத்தார்களின் திடமாகிய ஒழுக்கத்தானும் பரக்கக் காணலாம்.

சிவகணத்தலைவராய இரேணுகர் என்பவர், ஸ்ரீ சைலத்தினுள்ள சோமேச லிங்கத்திற் றோன்றி, பொதிகைமலையடைந்து அகத்தியர்க் கருளிச்செய்ததும் இவ்வீரசைவமே

யாம். இவ்வீரசைவ மரபுப்படி பக்த்தத்தலம், மாகேசுரத் தலம், பிரசாதித்தலம், பிராணலிங்கத்தலம், சரணத்தலம், ஐக்யத்தலம் என அறுவகைத் தலங்களுண்டு.

அவைகளுள் முதலாவதாகிய பக்தஸ்தலமானது பிறப் பிறப்புக்களாகிய திகிரியிற் சுழலும் சீவன் பக்குவநிலை யெய்தி மனந்தூய்மை யுடையவனாக வாதலானும், முதல்வனாகிய ஈசனே இயங்கியற் பொருள் நிலையியற் பொருள்களாகிய எல்லா வற்றினையும் செலுத்துவோனென வுணர்தலானும், வைராக்கியஞ் சார்தலானும், தீட்சைபெற்றுக் கொள்ளுத லானும், உள்ளக் கமலத்தில் ஒளிர்கின்ற சின் மூர்த்தியை இலிங்கமாகப் பாவித்து, தரிசித்து வழிபடலானும், பரமேசுர னுடைய திருவெண்ணீறணிந்து கொள்ளுவதனானும், உருத் திராக்க மணிதலானும், திருவைந்தெழுத்தை ஓதுதலானும், சூதகங்களை யொழித்து சிவபக்தி செய்தலானும், சிவனோ டோடு ஒருருவெனத் தேர்ந்து வழிபடுதலானும், குருலிங்க சங்கமங்களை வழிபடலானும், அவர்களுடைய பிரசாதங் களைப் பெறுதலானும், அவர்களுக்குப் பல விருப்புடன் தானம் செய்தல் நலமன்றென வுணர்தலானும், அவர்களுக்கு பலத்தை விரும்பித் தானஞ்செய்தலை மத்திமமென் றுணர்த லானும், தானம் கொடுப்பவனும் அதனை வாங்குபவனும் சிவ மென்றுணர்தலானும், அடையப்படுவதாகும். அந்நிலைமை யினை யடைந்தவர்களே பக்தர்கள் என்று வீரசைவத்தில் கொள்ளப்படுவார்கள் அவர்களே பக்தர்களென வழங்கற் குரியார்களுமாவர்.

---

## குடிச் சிறப்பு.

சுப்பிரமணியக் கடவுளின் தலமென்னும் மைலத்திற் கடுத்த சென்னியம்பாக்கத்தி லிருந்துவந்த அத்தகைய வீர சைவ பத்தக்குடிகள் அத்திருப்போரூர் தலத்தில் பல இரு ருந்து வந்தன. திருப்போரூரில் சரவணப்பொய்கைக் கருகி லுள்ள வீட்டில் அந்த வீரசைவக் குடிகளில் மிகச் சிறந்த வரும் இருநூறு ஆண்டுகளுக்குமுன் தர்ம சிவாச்சாரியார் பரம்பரையில் வந்தவரும், பக்தன் என்னும் பெயருக் கிசைந்தவாறே நன்னடையுடையவரும், கல்வி அறிவு ஒழுக் கங்களில் சிறந்தவரும், குகப்பிரமத்தை இலிங்கமாகப் பாவித்து வழிபட்டவரும், மருதுகணரிஷி கோத்திரத்தி லுதித்தவரும், மதுராந்தகத்தைச் சேர்ந்த கூவத்தூர் ஆசிரி யரை இனகுருவாகவும், பொம்மப் பாளையம் பாலைய சுவாமி களை குலகுரு மூர்த்தியெனக் கொண்டவருமாகிய குமரய்ய பக்தரின் குமாரர் முத்துச்சாமிபக்தரென் றொருவரிருந்தார். அவருக்கு அவருடைய தாய்தந்தையர்களும் உறவினரும் ஒன்றுசேர்ந்து தக்கபருவத்தில் வீரசைவ குலத்திலுதித்து நற்குணம், நல்லறிவு, நல்லழகு முதலிய யாவையும் ஒருங் கமைந்த செங்கமலத்தம்மாள் என்னும் ஒரு பெண்மணியை வீரசைவமத மரபுப்படி திருமணஞ் செய்துவைத்தனர்.

### தாய் தந்தையர்கள் இல்லற நடாத்துதல்.

அம் முத்துச்சாமி பக்தரும், செங்கமலத் தம்மையாரும் இரண்டுடலுக்கு ஒருயிர் போலவும், நூலும் ஊசியும் போல வும், நகமும் சதையும் போலவும் ஒத்த மனமுடையவர் களாய் இல்லற முறைப்படி இல்லறத்தை நல்லறமாக நடாத் திக்கொண்டு அப்பூதியடிகளும் அவர் இல்லறக்கிழத்தியார் போலவும், வீரசைவ மாகேசுரர்களை முக்கரணங்களாலும் வழிபட்டு வந்தார்கள்.

அடியார்களை வருந்தியழைத்து அன்போடு அமுதளித்து பாதபூசைகள் புரிந்து சரணர்களின் சரணகமல நீரைப்பெற்று அருந்திப்போற்றி மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலா ரடியார்தமை யமுதுசெய் வித்தலே யென்றும், பெரியவ ரமுது செய்தலே பேறென்றும், வணங்கி அடியவரின் பாததூளியை சிரசின்மேற் கொண்டு அடியவரையே சிவமெனப் பாவித்து வந்தார்கள்.

## மக்கட்பேறு அடைதல்.

இவ்வாறு இல்லற வின்பத்தைக் காதலிருவர் கருத்தும் ஒத்து ஆதரவுபட்டு அனுபவித்து வருங்கால் மக்கட்பேறு இல்லாமலிருந்ததால் அவர்களிருவரும் மனமிகமாழ்கி முருகப் பெருமான் முளரியடிகளை சந்ததமும் சிந்தையிலிருத்தியும் அவனாலயத்திற்கு முக்காலமுஞ் சென்று மக்கட்பேறு கருதி அப்பெருமானைப் பிரார்த்தித்து வந்தார்கள். அவர் பிரார்த்தித்து வருங்கால் எல்லாம் வல்ல இறைவரும், கிரியா சத்தி ஞானசத்தி இச்சாசத்தி என்னும் மூன்று சத்திகள் வடிவ வேலாயுத மேந்தியவருமாகிய குமாரக்கடவுளினருளால் அவ்வம்மையார் கருப்பந்தாங்கி பத்துமாதம் அகன்ற பின்பு நல்ல சுபதினத்தில் ஓர் ஆண்மகவைப் பெற்றனர். அக்குழந்தை கந்தவேளின் அருளினல் கிடைத்தது கொண்டு இரத்தினவேலு எனத் திருநாமமிட்டு வளர்த்துவந்தனர். அக்குழந்தையையே இரத்தினவேலு பக்தர் என்பர். இவரே சுவாமிகளின் மூத்ததமையனாராவர்.

அதன்பின் சிலகாலஞ் சென்று, அவ்வம்மையார் நல்ல தினத்தில் அழகிய ஓர் ஆண்மகவைப் பெற்றனர். அக்குழந்தை அழகு மிக்குடையதாமாதலின் அதற்கு மாணிக்கம் என்னும் பெயரிட்டு வளர்த்தனர். அக்குழந்தை நன்கு

வளர்ந்து வந்தது. அக்குழந்தையே பின்னர் மாணிக்கபத்தர் என்னும் திருநாமம் பெற்றது. இவரே சுவாமிகளின் இரண்டாவது தமையனுர்.

அதன்பின் சிலநாட் சென்று, அவ்வம்மையார் பரசிவனருளால் கருப்பந்தரித்து பத்துமாதம் சென்று அரியதோர் ஆண்மகவைப் பெற்றனர். அக்குழந்தை பரசிவ னருளாலும் சிவஞானிகளின் வழிபாட்டாலும் அதற்கு தோன்றியதால் சிவஞானம் எனப் பெயரிட்டனர். அக்குழந்தையும் பின் சிவஞான பத்தர் எனப் பெயர்பெற்றது. இவரே சுவாமிகளின் மூன்ருவது தமையனுராவார்.

அதன்பின், சிலநாட் கழித்து பற்பல சிவஞானிகள் அம் முத்துச்சாமி பக்தர் வீட்டிற்கு வந்து அவ்வம்மையாருக்கும், அவர்க்கும் அனுக்கிரகித்துச் செல்வார்கள். அவ் விருவர்களும் இல்லறத்திற் சிறிது வெறுப்புண்டாகி சிவ பணி, சிவபூசை, சிவனடியார் வழிபாடு முதலியவைகளில் ஒருமைப்பட்டவர்களாய்ச் சிவ புண்ணியத்தையே மேற்கொண்டொழுகி வந்தனர். அவ்வா றெழுகிவருநாளில் சிவ புண்ணிய மேலீட்டாலும் முற்பிறப்பிற் றேடிய புண்ணியப் பெருக்கினுலும் அவ்வம்மையார் "நான்காவது சிவமெனக் கொள்ளப்படுகின்றது" என்ற சுருதி வாக்கின்படி சிவ வொளியுடனும் சிவ வருளுடனுங் கலந்ததோர் கருப்பத்தை யடைந்தனர். அவ் வம்மையார் இக் கருத் தாங்கியிருக்குங் காலத்தில் இடைவிடாது தன்னை யறியாது சிவ நினைவும், அடியார்கள் தெரிசனையும், நல்லார்களின் இணக்கமும், தேகத்தில் அழகும் பொலிவும் எய்தப் பெற்றிருந்தனர். அம்மையார் எய்தப் பெற்றவாறே அவர் ஆருயிர்க் காதலராய பக்த ரவர்களுக்கும் இடையருத மனை மங்கலமும், சிவ பங்கயச் சேவைபும், அவம் பெருக்காத தவ வாழ்

வும், அரன் பூசை, மாகேசுர பூசை முதலியவைகளில் மன வொருமைப்பாடும் வளர்ந்து வந்தது. இவ்வாறு சிவ மணம் பெருகி அவ மணங் குறுகி நலமிகுந்து இலம் புகழ் பெற்று வருங்கால் பத்து மாதம் நிறைந்தவுடன் அவ்வம்மையார் சிறிதும் வருத்தமின்றி பவ வருடம் ஆனி மாதம் 14உ அனுஷ நக்ஷத்திரம் வெள்ளிக்கிழமை இரவு பதினைந்து நாழிகைக்கு மேல் ஆரியாம்பாள் சங்கர பகவற்பாதரைப் பெற்றது போன்று ஒரு ஆண்மகவைப் பெற்றனர். அக் குழந்தை பிறந்த அத் தினத்தும், வீரசைவ மரபுப்படி சிவலிங்க பூசை செய்து வருபவர்களேயாயினும் அன்று அக் குடும்பத்தாரனைவரும் பெருமகிழ்ச்சியுடன் சிவ பூசை அடியார் பூசை முதலிய சிவ புண்ணியங்களையும் மிகச் சிறப்பாய்ச் செய்தனர். ஏனைய சமயத்தார்களைப் போல இன்பமும் துன்பமும் எய்திய காலத்தும் தமது வழிபடு கடவுளின் பூசை முதலியவைகளைச் செய்யாதகற்றி மனங்கொண்டபோது விளையாட்டாகச் சிவ பணி செய்வதுபோலல்லாமல் எக்காலத்தும் எவ்வித இடையூற்றினும் விடாமல் சிவ பூசை முதலிய செய்து வருதலே வீர சைவத்தின் வீரமாம்; இதுவே ஏனைய சமயத்தோர்க்கும் மற்றையோர்க்கும் உள்ள சிறப்புமாகும். மற்றும், என்றென்றெண்ணி யிருக்குமுயிர் என்று அக்குழந்தை கருப்பையிலுள்ள ஐம்பெரும் துன்பத்தைக் கண்டு இன்னுமோர் பிறவி வராதிருக்குமாறு இறைவனை வேண்டிக்கொண்டிருக்குமென்பது நூற் பிரசித்தமாம். அதுபற்றியே, "கருவாய்க் கிடக்கினும் உன்னடியே கருதப் பெற்றேன்" என்றார். இதையே, "இறக்கினு மின்றே யிறக்குக என்று மிருக்கினு மிருக்குக" என்று தொடங்கி, மறக்கிலம் சிவத்தை என்னும் திருவாதவூரடிகளின் திருவாக்கும் உறுதிப்படுத்துகின்றது. அங்ஙனம் இருந்துழி சிவனது பிரகாசமே ஒரு

குழந்தை வடிவாய் வந்த குழந்தை கருவில் சிவனைப் போற்றிக்கொண்டிருந்த தென்பதில் சொல்ல வேண்டுவ தென்னை கொலோ? இவ்வாறு அக்குழந்தையே கருப்பத்தில் சிவ சிந்தனை செய்துகொண்டிருக்கும்போது அக்குடும்பத்தவரும் தாய் தந்தையரும் பிறந்த காலத்து வழிபட்டாரென்பதில் ஐயமெற்றுக்கு? இது வீர சைவத்துக்கோர் பெருஞ் சிறப்பே யன்றி இழிவன்றாமென் றுணர்க. இக்குழந்தையே கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகளென்பதுங் காண்க.

இவ்வாறு சிவவெளிப் பிழம்போ ருருவெடுத்து வந்த இக்குழந்தை இளமதியம்போல் வளர்ந்து வந்தது. இக் குழந்தை பிறந்தவுடன் அடியா ருள்ளங் களித்திருக்கும்; பகைவரும் நட்படைந்திருப்பர்; எல்லா வுயிர்களும் விரோத பாவம் விட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

## இலிங்க தாரணைச் சிறப்பு.

வீர சைவ மதப்படி உள்ளத்தின்கண் ஒளிரும் சித்து வடிவமே இலிங்கமாம். அதற்கு அறிகுறியாக சூரிய காந்தக்கல், சந்திர காந்தக்கல், நருமதா லிங்கம், படிகம், சிலை முதலியவைகளா லாக்கப்பட்ட சிவலிங்கத்தைச் சீடன் கையில் கொடுத்து அவனுடைய பிராணனை அதில் ஆகர்ஷணஞ் செய்து இவ் விலிங்கத்தைக் கைவிடுவையேல் நினது உயிரையும் துறக்கக்கடவை யென்று உறுதிமொழி கூறி அணிந்துகொள்ளச் செய்வது பிறவி யகற்றும் பெருநெறியாமென்பது காமிக முதலிய ஆகமங்களின் கருத்தாம்.

அது பற்றியே பவானி மௌத்திக லிங்கத்தையும், விஷ்ணு நீல லிங்கத்தையும், பிரமன் சிலாலிங்கத்தையும், இந்திரன் வச்சிர லிங்கத்தையும், ஏனைய தேவர்கள் தத்தமக்

கிசைந்த இலிங்கங்களையும், சென்னியிலும், இருதயத்திலும், தோளிலும், கரத்திலும், மற்றும் பல அங்கங்களிலு மணிந்து கொண்டு பூசிக்கின்றனர்.

மற்றும் அகத்தியர், துருவாசர், நந்தி, மாகாளர், ததீசி, கணாதர், பாணினி, பிருங்கிரிஷி, முதலிய தேவரிஷிகளும் அணிந்து பூசித்திருக்கின்றனர்.

வீரபத்திரர் முதலிய பிரமதகணங்களும், இராவணன் முதலிய அரக்க அரசர்களும், வால்மீகி, அத்திரி முதலிய ஏனைய இருடிகணங்களும் சிவலிங்கத்தைத் தரித்து சிவபூசை பண்ணி யருள்பெற்ற சிவபக்தத் தலைமைய ராவார்கள்.

இஷ்டலிங்கம் பாவனாலிங்கம் முதலிய பலவகை இலிங் கங்களுண்டு. இது கொண்டே இராவணன் விபீடணனுக்குச் சொல்லுகின்றான்: அன்ப! யான் இலங்கையில் ஆறுகோடி சிவலிங்கத்தைத் தாபித்துப் பூசித்தேன்; மூன்றுகோடி இலிங்கள் தாபியாம லிருக்கின்றன. அவைகளை நீ முறைப் படி தாபிக்கக்கடவாய்" எனக் கூறிவிட்டு இறந்தனன். அதைக் கேட்ட விபீஷணன் அங்குவந்த இரேணுக நாதரைத் தரி சித்து வணங்கி, சுவாமின், எனது தமையன் சொல்லிவிட்டு இறந்தபடியே மூன்றுகோடி சிவலிங்கங்களையும் விதிப்படித் தாபிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, அவரும் அவ்வாறே செய்வாம் என்று அருளிச் செய்தனர். இரேணுகரும் அவ் வாறே ஒரு முகூர்த்தப்போதில் மூன்றுகோடி இலிங்கங்களையு முறைப்படி தாபித்து மறைந்தனர்.

இவ்வாறு சிவலிங்கம் தரிக்கு முறைமைகளையும் பூசிக்கு முறைமைகளையும் நன்குணர்ந்தவரான இவரது தந்தையார் இச் சிவப்பிரகாசக் குழந்தைக்கு இலிங்கதாரணஞ் செய் வித்து பேரன்புடன் வளர்த்து வந்தனர். அக்குலத்தவர்

களும் அக்குடும்பத்தவர்களும் இக்குழந்தை பிறந்த காலந் தொடங்கி தமது குடும்பம் பெருநல மடைந்திருப்பது கொண்டு மகிழ்ந்திருந்தனர்.

பின்னர், அக்குழந்தைக்கு, சிவ வடிவ இலிங்கத்தைத் தரித்திருத்தலானும், சிவனது பிரகாசமே ஒருருவாய் வந்தமையானும், சிவமெனும் மங்கலத்தை விளக்கியதனானும், சிவப்பிரகாசன் எனத் திருநாமஞ் சூட்டினர். அக்குழந்தையும் ஓராண்டுக்குள் ஏனைய குழந்தைகள் அப்பா அம்மா என முதலில் பேசத் தொடங்குவதுபோலன்றி சிவ உமா எனப் பேசத் தொடங்கித் தண்டமிழ் மொழியை பண்டிதர்போன்று எளிதிற் பேசலாயிற்று.

இச் சிவப்பிரகாசக் குழந்தை விளையாடுங் காலத்திலும் ஏனைய குழந்தைகளைப்போல் விளையாடாமல் தான் தரித்திருக்கின்ற சிவலிங்கத்திற்கு அங்குள்ள பச்சிலைகளையெடுத்து சாத்தி சாமி சாமி என்று கும்பிட்டு விளையாடுவது வழக்கம். நீருண்டு பூவுண்டு என்றருளினர் பெரியாரும்.

## சுவாமிகள் கல்வி கற்றல்.

இவ்வாறு சிவ விளையாட்டாய் விளையாடி வளர்ந்த அக்குழந்தைக்கு கல்வி கற்றற் குரித்தாகிய ஐந்தாவது வயது வந்தவுடன் நல்லோரையில் பல்லோரையும் வருவித்து எல்லாருங் கூடி சிவ பூசை முதலியவைகளெல்லாம் குறைவின்றி நடாத்தி, காளத்தி வாத்தியாரிடத்தில் அட்சராப்பியாசமாகிப் பிறகு சின்னாட் கழித்து சுப்பராய பக்தரென்னும் வீரசைவ ஆசிரியரிடத்துக் கல்வி கற்கப் பணித்தனர். அவ் வாசிரியரும் ஏனைய ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றபடி ஹரி ஓம் எனத் தொடங்காது சிவாய நமோத்து சிந்தம் எனத் தொடங்

கினர். கலியுகத்தில் கல்விக்கிறைவன் கார்நிறமேனியனு மாயினும் வீரசைவ மரபுக்கேலாமை காண்க.

## சுவாமிகளின் பால விளையாட்டு.

பின்னர், பாலப்பருவ சிவப்பிரகாசரும் கல்விச்சாலையில் கற்கவேண்டிய கல்விகளை வருத்தமின்றிக் கற்றுக்கொண்டார். இவர் அத்தகைய இளம் பருவத்திலும் அருகிலுள்ள முருகக் கடவுளினாலயத்திற்கு அடிக்கடி யோடிப்போய்ப் பார்த்து வருவார். சிவனடியார்களைக் கண்டால் வணங்குவர். இரப் போர் வந்தால் தாய் தந்தையரைக் கேட்காமலே அரிசி முத லியவைகளை வாரிக் கொடுத்து விடுவார். அதைக் கண்ட தாய் தந்தையர்கள் சிவப்பிரகாசம் முற்றிப்போய்விட்டதோ, என்பர். அதற்கு அவர் சிவ சிவ என்று கூறி புன்னகை கொள்வர். இவர் இளமையிலேயே இராசராசேஸ்வரி யென் னும் அம்பாள் உபாசனை செய்து வருவர். அதுவே இவர் முப்பிறப்பிற் செய்த தவத்திற்கோர் அறிகுறியா யிருந்தது.

மற்றும், சிவப்பிரகாசச் சிறுவர், சிவ பசனைகள் நடக்கு மிடத்திற்கும், திருவிழா நடக்கு மிடத்திற்கும் தாமே ஓடி விடுவர். அதைக் கண்டவர்கள், இவன் சிவ பயித்தியங் கொண்டு திரிவான்போல் தெரிகிறது என்பர். எனக்குப் பயித்திய மன்று நுங்கட்கே பயித்தியம் என மறுமொழி யளிப்பர். சிறிய குழந்தைகளைத் தாய் தந்தையர்கள் திரு வாலயம், திருமடம், தீர்த்தம் முதலியவைகட்கு கூட்டிக் கொண்டு போய்க் காட்டல் வேண்டும். எனக்குச் சிவனைப் பற்றிய மகோற்சவங்கள் முதலியவைகளைப் பார்க்க மிகவும் இச்சையா யிருக்கின்றதென்பர். அதைக் கேட்ட தாய் தந் தையர் அறியாப் பையன் போனாற் போகின்றானெனச் சொல்லி விட்டுவிடுவர்.

இவருக்கு திருஞான சம்பந்தப் பெருமான் போன்று முப்பிறப்பின் சிவஞானம் இளமையிலேயே தொடர்ந்தது இது அவதாரங்கட்குரிய இயல்பென்றுணர்க. இவரை அறியாதவன் என்றது பற்றையறியானெனப் பொருள்போலும். இவ்வாறு இவர் இளம் பருவத்திலேயே அடக்கம், பொறுமை, வினயம், இன்சொற் கூறல் முதலிய நற்குணங்கள் நிறைந்தவராகவே யிருந்து வந்தனர்.

"இனிப் பிறவா முடிவான பிறப்பிலே சிவஞான மெளிதிற் கூடும்; "தாமே தூய கதியினிற் சேர்ப்பன்" என்னுஞ் சுருதிப் பொருளினுண்மையை யறிந்த தாய் தந்தையர்களும், தமையன்மார்களும் இச் சிவப்பிரகாச இளவலைக் குடும்ப வலையிற் சிக்க வைக்கவேண்டுமென நினைத்துப் பல வகை யுபாயங்களால் இவரது மனதைக் கலைத்து வந்தனர். அவைக ளனைத்தும் நூதன விவேகியா யிருந்தாலன்றோ மாறுபா டுடையதாகும். இவர் முந்திய பல்பிறப்பிலிருந்து தூய வுடம்பினராய் திருஞான சம்பந்தப்பெருமான் போன்று சிவஞானந் தொடரப்பட்டு வந்து அவதரித்தவராதலின் மனந் தடுமாறாது சிவஞான மடையும் விருப்ப மிக்குடையராகவே யிருந்து வந்தனர்.

இப்படி யிருக்குங்கால், இச் சிவப்பிரகாசச் சிறுவரது தந்தையார் அறுபதாம் ஆண்டில்-விதேக கைவல்ய மடைந்து விட்டனர். அப்பொழுது சிவப்பிரகாசச் சிறுவரின் வயது பதினெறென்று தோன்றுகின்றது. நந்தியம்பெருமான் வேண்டிய பதினாறு வரங்களும் அக்காலத்திலேயே சுவாமிகளிடத்து இருந்தன என்பதைக் குறிக்கின்றது. பதினாறு வயது என்றது.

பின்னர், இவருடைய அன்னையாராகிய செங்கமலத் தம்மையார் தமையன்மார் மூவர்களின் பாதுகாப்பிலிருந்து

கொண்டு இல்லறத்தி விச்சையின்றி இறைவன் திருவடியி
லேயே பேரன்புடையரா யிருந்தனர். உண்மைக் கணவனுப்
உள்ளிருந்து பாதுகாக்கின்றவன் இறைவனே யாதலினென்க.

பின்னர், சிவப்பிரகாச சுவாமிகளின் தமையனார் வாணி
கஞ் செய்ய விரும்பி சென்னைமாநகர் வந்து வியாபாரப் பணியி
லமர்ந்திருந்தனர். அவர் அக்கால் சுவாமிகளையும் யாதானு
மோர் வாணிகப் பணியிலிருத்திப் பொருள் சம்பாதித்துச்
சுவாமிகட்கு விவாகம் முதலியன செய்துவைக்க வேண்டு
மெனக் கருதினர். ஆனால், இச்சுவாமிகள் மறுவறுதுறவைப்
பொன் வாணிகர்போல் வருந்தி நாடோறும் வளர்ப்பவரென்
றறியாது வற்புறுத்தித் தாமே பொருள்கொடுத்து வியாபா
ரத்தி லமர்த்தி வைத்தனர்; ஆனால் சிவப்பிரகாசச் செல்வரும்
இதுவுமோர் நலத்திற்குத்தான் எனத் திருவருளைச் சிந்தித்
துக் கொண்டும் மூத்தோர் மொழிகளைக் கேட்கவேண்டுவது
கடமையே யாதலானும் வியாபாரப் பணிக்கு ஒருவாறு ஒத்
துக்கொண்டா ராயினும் அதில் விருப்பற்றவராய்ப் பட்டி
னத்தி லோரிடத்தில் வெற்றிலை வியாபாரஞ் செய்துவந்த
னர். வெற்றிலைபாக்கு சுண்ணும்பு மூன்றையும் வியாபாரஞ்
செய்யாது ஒழித்து வெறு இலையைமாத்திரம் வாணிகஞ்
செய்ததை நோக்கிலோ, வெற்றிலைபாக்கு சுண்ணும்பு ஆகிய
மூன்றும் ஒன்று கூடின் செந்நிற மொன்று உண்டாதல்
போல் சகம் சீவ பரம் என்னு மூன்றுங் கூடின் உலகாம்;
இன்றேனில் வெறும் சித்தேயாம். இதுவே,

" முன்னுமவனி சித்துலகு மூன்றுஞ் சித்து நான்சித்து,
நன்னுலான திசை சித்து நாட்டுகின்றதெலாஞ் சித்தே"

என்னுஞ் செய்யுளால் வசிட்ட முனிவர் கூறி யருளினது
மாம். இக் கருத்தைக்கொண்டே அவ்வணிகம் என்பது

யூகிக்கற்பாலதாம் அல்லது வெற்றிலை பாக்கு சுண்ணும்பு மூன்றுங் கூடின் செங்கிற முண்டாவதுபோல், பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்கு பூதங்களாற் கூட்டிய இவ்வுடம்பில் அறிவாகிய தொன்று உற்பத்தியாகின்ற தென்று நாத்திகர் நவிலும் வார்த்தை பொய்யே யென்பது கருதிப்போலும்?

இவ்வாறு வெற்றிலை ஏலவியாபாரஞ் செய்துகொண்டு வந்தாலும், அவ்வியாபாரத்தில் மனம் பற்றுமலே ஒரு வாறுய்ச் செய்துகொண்டு வந்தனர். சுவாமிகள் வியாபாரத் துறையில் காலம் கழித்துவரும் அக்காலத்தில், செகத்குரு சங்கரபகவத் பாதாசாரிய பீடத்தைச் சார்ந்த ஒரு பெரியார் பரம்பரையில் அனுக்கிரகம் பெற்றுக்கொண்டு அதை சிந்தித்து வருங்காலத்தில் ஈசூர் சச்சிதானந்த சுவாமிகளின் மாணுக்கர்களான சில பெரியார்களிடம் சென்று சிலநூல்களை யும் பயின்று வந்தனர். சாதகர்களாஞ் சீடர் பேதத்தால் குரவர்களும் எண்வகைப் படுவர்கள்.

பிறகு சென்னையில் வேதாந்த பானுவாய் விளங்கிய சைவ - இரத்தின தேசிக ரவர்களை ஆசியராக ஏற்றுக் கொண்டு வேதாந்த நூல்களை ஐயம் திரிபறக் கேட்டுணர்ந் தும் கேட்டுணர்ந்தவற்றைப் பலகால் சிந்தித்தும் வந்தனர் அவ்வாசிரியரோ வேதாந்த சிரவணம் செய்பவர்கள் வராமல் இருந்தால், அவர்கள் வராமைக்குக் காரணம் கேட்டு, திரவியக் கஷ்டமென்று தெரியின் உடனே அவர்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்பவராவர். வேதாந்த சிரவணம் பண்ணிக் கொண்டிருக்குஞ் சமயத்திலும்,

"பற்றின்றித் தனியிருக்கு மனதைப்போல பதுமத்
தோனும் பொற்றிரள்சேர் இந்திரனுஞ் சுகமடையான்"

என்பது போன்றும், பசித்திரு தனித்திரு விழித்திரு என்று அருட்பெருஞ் சோதிவள்ளலார் உபதேசித்த வப

4

தேசம் போன்றும் சொல்லற்று சும்மா தனித்திருப்பதிலும், பசியோடிருப்பதும், விழித்திருப்பதும் விருப்புற்றவராய் அவ்வாறே ஒழுகி வந்தனர். ஆசிரியரும் இவரது மனோ நிலைமையில் பேரன்புடையராய் தமது ரிபுகீதையைப் பாராயணஞ் செய்யுமாறு கொடுத்தருளினர். அதைப் பெற்றுக்கொண்டு இடையறாது நியதமாய்ப் பாராயணஞ் செய்து கொண்டு செம்மலர் நோன்றாள் சேரவொட்டா அம்மலங் கழீஇ அன்பரொடு மருவிக்கொண்டிருந்து வந்தனர்.

இவ்வாறு சிவப்பிரகாசப் பெருந்தகையார், சிவபூசை, அடியார் பக்தி, சிரவணம், சிந்தனை, ஆசிரியரின் வழிபாடு முதலியவைகளை வழுவாது ஒழுகிக்கொண்டு, மனோலய சிந்தனையைப் பழகி வந்ததுடன், இலக்கணம், இலக்கியம், திருக்குறள், வேதாந்த நூல்களிலுந் தருக்க நூல்களிலும் நிறைந்த கல்வியுடையவருமாயினர்.

ஒருநாள் தமது இட்டலிங்கத்தைப் பூசித்துக்கொண்டிருக்கும்போது, இவர் மனம் ஒருமையடைந்து இருமையொழிந்து ஒன்றாகிய ஆன்மாவை நோக்கி நிருவிகற்ப சமாதியில் நிலைத்து விட்டது. இவரது அன்னையார் உணவருந்துஞ் சமயமானவுடன் இவரைத்தேடிக் கண்டுபிடித்து இவர்க்கருகில் வந்து பார்க்குங்கால் இவர் பிணம்போல் அசைவற்றிருப்பதைக்கண்டு அன்னையார் தமது மூத்தகுமாரனிடம்போய் அறிவிக்க அவரும் ஏனையோரும் இவரை வந்து பார்த்து வியப்புற்றனர். இவரது அன்னையாரோ மைந்தன் மாண்டானென அழத்தொடங்கினர். அதனாற் பலரும்வந்து கூடினர். அவர்களில் ஒருவர் சுவாமிகளின் மனோநிலையை முன்னரே நன்குணர்ந்தவராகலின் சுவாமிகள் நிருவிகற்ப சமாதியில் நிலைத்துவிட்டன ரென்பதை நிச்சயித்துக் கொண்டு அவ்விடம் கூடியுள்ளவர்களை வெளிப்படுத்த

வேண்டுமென நினைத்தவராய் உட்சென்று நாடி பார்ப்பவர் போல பாவனைகாட்டி இஃதோர் பசிமயக்கம்; இது சில நாழிகைக்குள் நீங்கிவிடும்; நானும் மந்திரமோதித் திருநீறு தருகின்றேன்; அதை கடவுளை வணங்கி இவரது தலையின்மேலெறிவீர்களேல் விரைவில் எழுந்துவிடுவர்; ஆனால் இங்குச் சிறிதளவேனும் கூச்சலிடக் கூடாது; கூச்சலிடுவீரேல் மரணம் நேரினும் நேரும் என்று சொல்லிப் போயினர். பின்னர் அவ்வாறே அத்திருநீற்றை இவரது சிரசின்மேலேயே அன்னையார் போட்டுக்கொண்டிருந்தனர். இவரும் விரைவிலெழுந்துவிட்டனர். இவரது அன்னையார் மந்திரநீற்றினலெழுந்தனன் மைந்தன் என்று நினைத்து இவரை உயிர் பெற்றுவந்த புதல்வன்போல் அன்புபாராட்டி அழைத்துக் கொண்டுபோய் அன்னமருத்தினர்.

இவரது நிலைமையைக்கண்ட அன்னையாரும் அண்ணன் மார்களும் இவன் வேதாந்தியாய் வெளிப்படினும் படுவன் போல் தோன்றுகின்றதென்று கருதி விவாகம் செய்துவைக்கத் தொடங்கினர். அதைக்கண்ட இச் சிவப்பிரகாசச் செல்வர் இனிமேல் நாம் துறவடைய முயலல் வேண்டும்; இன்றேல், குடும்பக்கடலில் மூழ்கிவிடுவோமென மனதில் உறுதிபண்ணிக் கொண்டனர். இவ்வாறிருக்குங்கால் ஒருதினம் சிவப்பிரகாசப் பெருந்தகையாருக்கு, தியானஞ் செய்யவேண்டுமென்னும் பேரவா வுண்டானதால் வாணிகஞ்செய்வதால் வருமூதியத்தையுந் தமது அண்ணியாரிடம் முன்போற் கொடுக்காமலே கையிலெடுத்துக்கொண்டு கடற்கரைச் சவுக்கு மரத் தோப்புக்குச் சென்று மண்ணை அகழ்ந்து திரவியப்பையை அதில் புதைத்துவிட்டு அதன்மேல் ஆடையை விரித்து பத்மாசனமிட்டுத் தியானத்திலிருந்து விட்டனர். உற்சாக மிகுதியால் நள்ளிரவு வரையில் நிருவிகற்ப சமாதியிலேயே

இவரது மனம் நிலைத்துவிட்டது. அச்சமாதியில் மனோ விருத்தி தியேயப்பொருளை மாத்திரங் கவரப்படுவதாகிய அகண்டாகாரமாய்ப் பிணஞ் சுடுதடிபோல் இலயப்பட்டு பின்னர் சிறிது மனம் அசைவுற்று வெளிவருங்கால் அங்குச் சிறிது தூரத்தில் சூதாடுவோர்களின் பேச்சொலி கேட்டு நாம் இப்போது இல்விற்கேகல் கூடாது என உறுதிகொண்டு அவ்விடத்திலேயே நித்திரை கொண்டனர். துயிலுங்கால் எவ்வுயிர்க்கும் எவ்வித துட்ட விலங்குகளும் இடையூறு செய்யாது, இது இறைவனாணையாம். துயின்ற காலத்தில் பாம்பு கடித்தது தேள் கொட்டிற்று என்றலோ, மயக்கத்தால் அது துயிலென்கின்றனர். அது துயிலுந் தருணமகன்று துயில் விட்டெழுந்து கை கால்கள் அசைந்த தருணமா மென்றுணர்க. கரணமொடுங்க வாயு நிகழ்வென்கொ லென்னின் உடல் காவலாகும். அல்லாவிடிலோ நாய் நரிகள் உட்கொள்ளும் ஆதலின் பிராணன் மாத்திரம் சலிக்குமாறு செய்து உயிர்களைக் காப்பது இறைவனது பெருங்கடனும் என்பது சுருதிகளின் கருத்தாம்.

பின்னர், இவர் விடிய எழு நாழிகைக்கு முன்னெழுந்து நீராடித் தியானஞ்செய்யும் முறைகளை முடித்துக்கொண்டு தமது இல்லத்திற்கு வந்தனர். இவ்வாறு தமது ஆசிரியர்பால் சிரவணஞ் செய்யுங் காலத்திலும் நியதமாய் மனோலயத்தைப் பழகினவராதலின், "இந்த மனத்தை முத்திச்சங்கேதத்தா லாகந்தன்னிற் கூட்டில் நன்று" மென்பதை இவர் உள்ளவா றுணர்ந்தவராகாரோ?

மற்றொருநாள் இச்சிவப் பிரகாசப் பெருமானார் தமது ஆசிரியராகிய இரத்தின தேசிகரிடஞ் சென்றுவணங்கி ஐய! எனக்கு இலிங்க சந்நியாசம் கொடுக்கவேண்டு மென்று பலவாறு வேண்டிக்கொண்டனர். அதைக்கேட்ட ஆசிரியர், கலி

யுகத்தில் சந்நியாசமென்னுந் துரிய வாசிரமம் தள்ளற்பாலது என்று மிருதிகள் கூறுகின்றன. மற்றும் சந்நியாச விதியோ ஆரியர்களின் மரபு பற்றியதாம். தமிழ்நாட்டுக்கும் நூல்களுக்கும் உரியது துறவேயாம்.

அதுபற்றியே,

"கற்றேய்த்துடுத்த படிவப்பார்ப்பான் முக்கோலசைநிலை
கடுப்ப" என்று கூறுகின்றது முல்லைப்பாட்டு.

ஆதலின் நாம் கைக்கொள்ள வேண்டியது துறவறமே யன்றி வேடமல்ல. மற்றும் நீ தீவிர பக்குவமுற்ற உண்மை யுணர்வுடையோன் ஆதலின் சர்வ சங்கப் பரித்தியாகமே சீவன் முத்திச் சுகத்தைக் கொடுக்கத்தக்கது அந்தத் தியாகமாத்திரத்தையே தேடிக் கொள்வாயாக. ஆகமத்தில் ஒருவகையாய் நமக்குச் சந்நியாசங் கூறியிருப்பினும் இப்போது உனக்கு அது வேண்டாம் ஆதலின் முன்னர் சங்கர பகவத்பாதர் முதலையாற் பிடியுண்ட காலத்திற் செய்து கொண்டது போன்று மானச சந்நியாசஞ் செய்து கொள்வாயாக அதற்கு யான் ஆணை தந்தேன் எனச் சொல்லி ஆசீர்வதித்தருளினர்.

மற்றும், எனது ஆசிரியராகிய குறட் சுவாமிகளென்னும் கிருஷ்ணானந்த யதீந்திர சுவாமிகளிடத்தில் யானும் மனத்துறவே பெற்றுக்கொண்டேன். புறத்துறவோ அவரவர் கருமவினையின்படியாம்; மனத்துறவே ஞானத்திற்குக் காரணமென்று பலநூல்களும் முழங்குகின்றன. ஆதலின் மைந்த? நீ செயற்பால தொன்றுண்டு. அஃதென்னையோவெனின், புறத்துறவிலும் மிக விருப்ப மிருக்குமேல் சில நாட்சென்று பின்னர் அதையும் பெற்றுக்கொள்வாயாக என்றருள் புரிந்தனர். இவ்வாறு ஆசிரியரின் ஆணையைப் பெற்றுக்கொண்டு முன்போல் வாணிகத்தைச் செய்வதுடன்

தமது சமாதிநிலைப் பழக்கத்தையும் நியதமாய்ப் பழகிவந்தனர். துன்பந் தோன்றில் எவருந் துறந்தேகராய்த் தனித்து இன்பந்தேட வியற்கையாமன்றோ. அவ்வாறு குடும்பம் துன்பமென்று தோன்றியவர்கள் குடும்பத்திலிருக்க மனம் பொறுக்கார். ஆதலின் அதிலிருந்து ஒவ்வொரு தினத்தையும் ஒவ்வோ ராண்டாகக் கழித்து வந்தனர்.

அக்காலத்தில் இவருடைய இளைய தமையனாரும் அன்னையாரும் இச் சுவாமிகளுடன் இருந்து வந்தனர். பெரிய தமையனார் திருப்போரூரின்கண் இருந்து வந்தனர்.

இவ்வாறிருக்குங் காலத்து இச்சிவப்பிரகாசப் பெரியார் தாம் செய்துவந்த வியாபாரத்தில் ஊதியம் வருவதை நோக்காது குறித்த காலத்தில் முடித்துவிட்டு சிரவண மனன நிதித்தியாசனத்தையே ஒருமை மனத்துடன் ஒழுகிவந்தனர். வெற்றிலை வியாபாரத்தால் வரும் ஊதியத்தை இவர் தமையனார் மனைவி செல்லத்தம்மாள் கையிற் கொடுத்து வந்தனர். அவ் வண்ணியார் இவருக்கு மனங்கோணாது தாய் போல் பணிவிடை செய்துவந்தனர். ஆசிரியராகிய இரத்தின தேசிகரும் இவ் வுத்தமரின் நடைகளையும் மனோபாவனையையும் இன்சொல் அறிவடக்கம் முதலியவைகளையுங் கண்டு இவர் ஒரு மகானுக்குள்ள நடையுடையர்போல் தோன்றுகின்றார். இவருடைய நிலை சீவன் முத்தியில் நிலைக்குமெனத் தோன்றுகின்ற தென்று கருதி இவரிடத்துப் பேரன்பு வைத்திருந்தனர். இக்கருத்துக் கொண்டே "தேசிகன் றிருவுள முண்டாக அச்சிவந் திகழ்ந்திடுகின்றான்" என நூல் களுங் கூறுகின்றன.

காக்கையின் சேட்டை, கொக்கின் சிந்தனை, நாயின் தூக்கம், அற்பவுணவு, புணர்ச்சியின்மை என்பனவாய கல்வி

கற்கப் பக்குவமுற்ற மாணவரின் நற்குணங்களும், "விடிற் புலி தீப் பாம்பினில் வீழ்வார்க்காம்" என்பது முதலிய சற்சீடனின் அற்புத குணங்களும் நித்திய அநித்திய நிண்ணயந் தெரிவிவேகம். இவ்வுலக பரவுலகப் பொருள்களில் வேண்டாமை, அடக்கம், பொறுமை முதலியவைகளும் வீடடைய வேண்டுமென்னும்விருப்பம் என்னும் பிரம ஞானத்திற்கு அதிகாரியின் சாதனங்கள் நான்கும் அப்போதே இவர்பால் நிறைந்திருந்தன.

இவ்வாறு நடப்பதைக்கண்ட இளைய தமையனார் இச்சிவப்பிரகாசப் பெருமானை நோக்கி, இளைஞ, நீ கலியாணஞ் செய்து கொள்வதற்குப் பொருளீட்டாது வீணாட்டம் ஆடிக் கொண்டிருத்தல் அழகாமோ, எனக் கடிந்து கூறி, மற்றும், அக்கால் இவர்பால் மிக்க நண்பர்களாயிருந்த தத்துவாநுசந்தானம் அரங்கநாதம் பிள்ளை யவர்களிடத்தும். ஆசிரியர் கோ-வடிவேலு செட்டியாரிடத்தும் இவர்களே நமது பையனைக் கெடுக்கின்றார்கள் என முனிவுகொண்டு மிருந்து வந்தனர். அரங்கநாதம் பிள்ளையவர்களின் வீட்டிற்கு அடிக்கடி சுவாமிகள்போய் அவருடன் பேசிக்கொண்டிருப்பார். பின்னர் சுவாமிகள் தமது தமையனாரை நோக்கி, ஐய ! ஆம் அது உண்மை. தாங்கள் கூறியவாறே யானும் கலியாணமாகிய முத்தி யின்பத்தை யடைவதற்கே சாதன சதுட்டயமாகிய பொருளைத் தேடிக்கொண்டு ஞானமாகிய மாதை மணக்க முயல்கின்றேன் அவ்வாறே விரைவிற் செய்து கொள்கின்றேன். என சிலேடையாகப் பணிவுடன் கூறுவர்.

இவ்வாறே செங்கமலத் தம்மாளாகிய இவரது அன்னையாரும் இவரை நோக்கி மைந்த, நீ பொருள் தேடாமலும் கல்யாணஞ் செய்துகொண்டு இன்ப மடையாமலும் எனக்குமோர் நலமுஞ் செய்யாமலும் இவ்வாறிருத்தல் தகுமோ

என்று அன்போடும் மனத்தில் சிறிது துன்போடும் பன் முறை வற்புறுத்தி சொல்லிவந்தனர். ஆனல் சிவப்பிரகாசப் பெரியார் அவ் வம்மையாரை நோக்கி அம்மையே, யான் சீக்கிரம் கல்யாணத்தைத் தேடிக்கொள்ளுகிறேன் என இரு பொருட்படுமாறு மறுமொழி யுரைப்பர். கல்யாணம் எனப் பேசத் தொடங்கில் வெறுப்புற்றவராய் இல்லத்தை விட்டு வெளியே யாண்டேனும் போய் இரண்டு மூன்று நாட் சென்றுவந்து அவ் வன்னையாரிடம் மிக்க வன்புடையவராய் அவ் வன்னையாரை நோக்கி, அன்னய்? நினக்கு மாத்திரம் அன்றி நினது குலத்திற்கே நலமுஞ் செய்கின்றேன்; கவலைப்படாதே யென்று அவ்வம்மையார் மனம் நோகாவண்ணம் இன்சொற் கூறிவந்தனர். இவர் கூறியதின் உட்கருத்தோ விரக்தி யென்னும் ஓர் பூவையை மணந்து தத்துவ ஞானமாகிய புதல்வனைப் பெற்று முத்தியென்னும் இன்பத்தை யனுபவித்து உன்னையும் பிறப்பிலிருந்து மாற்றி நன்மையடையச் செய்கின்றேன் என்பதாம். இக்கருத்துக் கொண்டே சங்கரபகவத் பாதரும் ஒரு குலத்திலுதித்த ஒருவன், அறியாமையால் வந்த பந்தத்தைப் போக்கி முத்தியடைய விருப்ப மடைவனேல் அவனுடைய குலமே பவித்திரமாகி விட்டதெனறும், துறவியானவனுடைய அன்னையாரும் பெண்பிறப்பு நீங்கி ஆண் பிறப்பை யடைந்து, முத்தி வழிமே லேறுகின்றார், என்றுந் திருவாய் மலர்ந்தருளினர்.

அக்கால் இவரது ஆசிரியராகிய இரத்தின தேசிகரும் தமது பூதவுடலைப் போக்கி பூரணப் பொருளாய் நிலைத்த விதேக கைவல்ய மடைந்தனர். அதுகண்ட இச்சிவப்பிரகாச வள்ளலார் “பல்லார் பகை கொளினும் பத்தடுத்த தீமைத்தே, நல்லார் தொடர்பை விடல்” என்றபடி பெருங் கவலையோ டிருந்தனர். இவருடைய தமையனராகிய

மாணிக்க பத்தரும் இவரை நோக்கி, இளவலே, உன்னை நல்வழிக்குக் கொண்டுவர வெண்ணி கடன்வாங்கித் திரவியங் கொடுத்து வியாபாரஞ் செய்புமாறு யான் பரிவோடு பொருள் வருவாய் எற்படுத்த நீ சோம்பேறிகளுடன் கூடி தேம்பித் தவிக்கின்றாய் நின் அறிவு இருந்தவா றென்னே! அஃதொழிக. நின்னால் இப்போது திரவியஞ் செலவாகி விட்டதன்றோ? அதைக் கொடுப்பாயாக வென்று வற்புறுத்தினர். அப்போது இச் சிவப்பிரகாசப் பெருந்தகையாரும் இளமை தொட்டுச் செய்துவந்த சிவ புண்ணியத்தாலும் சிரவண மனன நிதித்தியாசனத்தின் வலியாலும் பல பெரியோர்களை வழிபட்டதின் விசேடத்தாலும் பரிபக்குவப்பட் டிருந்தனராகலின் யான் இங்கிருப்பனேல் எவ்வகையானும் குடும்ப வலைக்குட் சிக்குமாறு செய்துவிடுவார். சிக்கிய பின்னர் அழல் விரிந்த கனகத்தரும்பி மென்மழலை மாதர் மருங்கிற் படர்ந்து பைங்குழவி மீது கொழுந்து விட்டோங்கி விழைவுமிகும். மிகவே தாரதன மிகுமென்னிற்றளையாகும். அப்பாசந் தளைத்துக் கொண்டால் யாரதனை யறுத்தகலும் விரகுடையார்? யாவரு மிலரென் றெண்ணி இல்லைத் துறந்தேக இச்சை கொண்டனர்.

## துறக்க அன்னையாரிடத்தில் ஆக்ஞை வேண்டல்.

இச்சை மிகுந்த பின்னர், தமது அன்னையாரிடத்திற் சென்று, அம்மையே, யான் இன்னும் மூன்று தினங்கள் தான் இங்கிருப்பேன், நினக்கு என்னாற் செயற்பாலது யாது? என்று பணிந்து வினவினர். அதற்கு அன்னையார் தமது புதல்வராகிய சுவாமிகளை நோக்கி, மைந்த, இங்ஙனம் நீ கூறுவது தகுதியாமோ? பத்துமாதஞ் சுமந்துபெற்ற என்னைத் தவிக்க விட்டுவிட்டுப் போதல் நினக்குக் கடனோ? அல்லது நீதியோ? அல்லது தருமமோ? என்று கூறி

வருத்தமுற்று, பின்னர், இவன் சிறுவனாதலின் வாளாபொய் புரைப்பன்; வீட்டைவிட்டுப் போதல் எங்ஙனம் என்று இவ் வண்ணம் பலவாறாக வெண்ணி ஒருவகையில் மனதை யுறு திப்படுத்திக் கொண்டிருந்தனர்.

பின்னர், அம் மூன்றுநாள் கழிந்தவுடன் மூன்றவத் தையை விட்டுத் துரியத்தை யடைவது போன்றும், மும் மூர்த்திகளையும் விட்டுச் சிவனை யடைவது போன்றும், மூன்றாசிரமங்களைக் கடந்து சந்நியாசத்தை யடைவது போன்றும், தமது வீரசைவ மரபுப்படி தரித்திருந்த சிவ லிங்கமும் வேண்டாம், நாம் இனிமேல் இருதய வெளியின் கண்ணே யிருக்கின்ற சைதன்யமாகிய இலிங்கமாயிருக்க முயன்றதாலும், சமய மரபுபற்றி உள்ளிருக்கும் அறிவு வடிவமாகிய சிவலிங்கத்தை பாவித்தற் பொருட்டு வெளியி லோர் சின்னமாக வகுத்திருக்கின்றா ராதலாலும்,

"எட்டுத்திசையும் பதினாறு கோணமும் எங்கு மொன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாம்
கட்டிச்சுருட்டி தங்கக்கத்தில் வைப்பர் கருத்தில் வையார்"

என்ற திருவாக்கை நினைத்து,

பட்டினத்தடிகள்.

"வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாத புட்ப மிறையாத தீர்த்த மினிமுடிந்து
கட்டாத லிங்கங் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே"

என்ற முடிவுப் பொருள்மேல் உறுதிகொண்டு தமது இட்ட லிங்க முதலியவற்றையும் தியாகஞ் செய்துவிட்டு,

## பட்டினத்தடிகள்.

"உடைகோ வணமுண் டுறங்கப் புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத் தண்ணீருண் டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாம முண்டிந்த மேதினியில் [க்கே"
வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பிறை

என்ற பெரியார் மொழிப்படி வெளிச் செல்வோமென இவர் தமக்கு வயது பத்தொன்பது வந்த பருவத்திலேயே பெரு முயற்சி செய்தனர்.

அப்போது, அதை இவரது அன்னையார் தெரிந்து இவரைத் தடுத்து, மைந்த, என்னை யாவர் காப்பர்? உனது சிந்தை எங்கே மாறிற்று? பெற்றவயிறு துடிக்கின்றதே!

"அன்னையும் பிதாவு முன்னறி தெய்யம்"

எனவும்,

"தாய்சொன் மிக்க வாசகம் இல்லை"

எனவும், மூத்தோர்கள் மொழிந்துள்ளார்களே. அறிவுடைய பெரியோர் தாயின் கருமங்களை முடிக்கின்றனரே. அந்தோ! அந்தோ! நீ ஏகுதல் தகுதியன்று. நான்முறையு மன்று பெரியார் மரபு மன்று என தடுக்குங்கால், சுவாமிகள் அன்னை யாரைப் பார்த்து, அன்னாய், நீ யாதொன்றிற்கும் வருந்தற்க வருந்தற்க. நின்னைப் பாதுகாப்பதற்கு அண்ணு முதலி யோர்க ளிருக்கின்றார்கள். அவர்கள் உன்னை கைவிடமாட்டார் கள். மற்றும் என்பால் விளங்குகின்ற அறிவிற்குக் காரணம் யாதென்பையேல் அவ்வறிவுக்குத் தாய் தந்தையர்களே யிலர். இவ்வாறே,

"தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி"

என்று தமிழ் வேதமாகிய திருவாசகம் முழங்குகின்றது. அங்ஙனமே என்னுடைய தேகத்திற்குக் காரணம் யாதெனி

லோ மாயையேயாம். ஆனால் நீயோ இவ்வுடலுக்கு நிமித்த காரணமாவாய், உண்மையாய் விடையூரிறைவனாகிய பரசிவனே எனக்குத் தந்தையாவன். அவனுடைய வாம (இடது) பாகத்தில் விளங்குகின்ற உமாதேவியாரே எனது அன்னையாவர். உலகத்திற்குப் பார்வதியும் பரமசிவனும் தாய்தந்தையர்களாவர் இதைக் காளிதாசருந் தமது கவியில் விதந்தோதியுள்ளார்.

மற்றும் இத்தகைய துன்பம் இவ்வுடம்பிற் பொருந்துவதற்கு ஏது தாய் தந்தைகளெனக் கருதி பெற்றெடுத்து வளர்த்தவர்களை தாய்தந்தையர்களென்று அறிவின்மிக்கார் போற்றுர். மற்றோ அந்தமிலாத அகண்டமும் நம்முதந்தவர் தந்தைதாயெனச் சமைவுற்றுர்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

என்பதற்கும் இதுவே கருத்தாகும். ஆதலின், அன்னாய், நினக்கு நிறைந்த மதியில்லாததால் இவ்வாறு துன்புறுகின்றாய்.

"அம்மையுநீ அப்பனும்நீ அன்புடைய மாமனும்நீ"

என்னுந் தாண்டகத்தால் திருநாவுக்கரசர் கூறியபடி, நினக்கு கணவனுக்குக் கணவனும், புதல்வனுக்குப் புதல்வனும், மாமனும் மாமியுமாயும், மற்றைய சுற்றமாகவும் இருப்பவன் பரசிவனே என்று எண்ணிக்கொண்டு களிப்புடன் காலத்தைக் கழித்து வருவாயாக என்று பலவகையாக எடுத்துக் கூறியும் துறவறமடைய அன்னையார் ஆணை கொடுத்திலர்.

## துறவுக்கு அன்னையின் ஆணை பெறல்.

பின்னர், சிவப்பிரகாசப் பெருந்தகையார் நாம் நமது ஆசிரிய ரிடத்தில் பலவகையாய் வேண்டித் துறவடைய ஆணையைப் பெற்றோமாயினும், நமது அன்னையாரிடத்தில்

துறவடைய ஆணை பெறுதல் மிக வருத்தமா யிருக்கின்றதே யென மனமிகமாழ்கி சங்கரபகவத்பாதர் தமது அன்னையாரிடத்தில் சந்நியாசமடைய ஆணை பெறுவதற்கு தமது அருள்வலியால் முதலை யுண்டாக்கி முதலை பிடிக்குமாறு செய்வித்து ஆணை பெற்றது போன்று நாமும் யாதேனு மோர் வஞ்சனை செய்தல் வேண்டுமெனக் கருதினர். துறவடைவதற்கு அன்னையாரின் ஆணை ஒரு தலையாக வேண்டற்பாலதாமெனப் பலநூல்கள் பகர்வதானும், அதுவே பண்டைக்காலத்திய மரபாகலானும், இவரும் அவ்வாறே யொழுகினரென்க.

பின்னர், முன்னர்க் கொடுத்தருளிய ஆசிரியரின் ஆணைப்படி துறவை யடைதலே நலமென மனத்துட் கொண்டு முதனாளிரவில் உடைகோவண முதலியவைகளைத் தேடி வைத்துக்கொண்டு தமது அன்னையாரைக் கபடத்தால் மகிழும்படி செய்ய வெண்ணி அன்னையாரே, எனக்கு விவாகம் பேசியது உறுதிப்பட்டதா? அதற்குத் திரவியம் எத்துணை வேண்டும்? என வினவும்போது அதற்கு அன்னையார், மைந்த, ஏறக்குறைய ஐந்நூறு ரூபாய் இருந்தால் போதுமென்றனர். அது எங்கிருந்து வரும்? என்றனர். அன்னையார், நாம் கடன்தான் வாங்கவேண்டும் என்றனர். கடன் எற்றுக்கு? யான் இதுகாறும் வியாபாரத்தில் சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்திருக்கின்றேன். அதைக் கொண்டே செய்யலாமென்று சொல்லி விட்டுச் சிறிது தொகையை தமது அன்னையாரிடங் கொடுத்தனர். அன்னையார் அதைப் பெற்று மகிழ்ந்தனர்.

மற்றும் கலியாணத்திற்கு இன்னும் வேண்டிய திரவியம் நாளையதினம் தொடங்கி வெளியூர்க்குச் சென்று தேடல் வேண்டும்; நாளையதினம் காலையில் யான்போய் வரலாமா? என்று கேட்டனர். அதற்கு அன்னையார், மைந்த, அப்படியே

பொருள்தேடி இன்பமடைவாயாக என ஆணை கொடுத்தனர். ஞானப்பொருள் தேடி முத்தியின்ப மடைவதற்குத் தமது அன்னையார் கொடுத்த ஆணையைப் பெற்றுக்கொண்டு இரவில் இல்லத்திலேயே யிருந்து விடியற் காலையில் இல்லத்தினின்றும் வெளிப் போந்து களிப்புடன் வேண்டி னுண்டாகத் துறக்க வென்றமையால், முறையாய் இல்லற நடத்தன் முதலியவை முடித்துக்கொண்டு சந்நியாச மடைதற் பாலது என வேதவிதி யிருப்பினும் அம்மறையே,

"எப்போது விராகமிகுமோ அப்போதே வெளியிற்செல்க"

என்னும் ஆணையையுங் கொடுத்திருத்தலின் யாங்கொண்ட கருத்து இறைவனருளால் இன்று நிறைவேறுமெனக் கருதி நேரே துறவிகட் கெல்லாம் தலைமைத் துறவடைந்தவராய் தவராஜ சிங்கமெனத் தாபதர்கள் நனிவியக்கத்தக்கவரும்,

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் யாருந் துறத்த லரிதரிது நேரே மனத்துறவு மப்படியே"

என தாயுமான சுவாமிகளால் நன்கு பாராட்டப்பட்டவருமான

பட்டினத்தடிகள்.

"வாவியெலாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவணங்க ளெல்லாங் கணநாதர்—பூவுலகி
லீது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோ
ரோதுந் திருவொற்றி யூர்".

என விதந்தோதிய நலமெலாந் திகழு மொற்றியூரை யடைந்து மாணிக்கத் தியாகர், படம்பக்கநாதர், பலகைநாதர், எழுத்தறியும் பெருமான், ஆதிபுரீசுரர், ஒற்றீஸ்வரர் எனப் பல திருநாமங்களால் வழங்கப்பெறுபவராய திருவொற்றி

யூர்ப் பெருமானைப் பணிந்து துதித்துப் பலவாறு தமது துறவு நிலைக்குமாறு அருள் புரிந்தாள வேண்டுமென்று வணங்கிப் பிரார்த்தித்துக்கொண்டு, பட்டினத் தடிகள் சிவலிங்க வடிவாய்த் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற ஆலயத்திற்குச் சென்று, யாருந் துறப்ப தரிதரிது என்று எங்கும் புகழ்பெற்ற நற்றுறவுபூண்ட நாதா, அடியேனையும் வாழையடி வாழையென வந்த திருக் கூட்டத்தி லொருவனுய் எண்ணி ஆள வேண்டு மென்று வலம் வந்து பலவிதமாகப் போற்றிப் பணிந்து அச் சந்நிதியில் பட்டிணத் தடிகள் முன் பாக தானணிந்திருந்த உடையை நீக்கிவிட்டுக் கோவணமே உடையாய்க் கொண்டு அங்குள்ள தீர்த்தத்தில் தமது இட்டலிங்கத்தையும் விட்டுவிட்டு அச் சந்நிதியிலிருந்து பர தத்துவத்தைத் தியானித்துக்கொண்டு தட்சணு மூர்த்தியையும் தரிசித்துக்கொண்டு தமது ஆசிரியரைச் சிந்தித்துப் போற்றி, அங்கிருந்து வெளிதேசஞ் செல்ல மனமுடையவரா யிருக்கும்போது இவரது இளைய தமையனுர் அங்குவந்து இவரை மற்ற வகையில் நிறுத்த முடியாதென்று கருதி இளைய! நீ உனது வியாபாரத்தின் பொருட்டுச் செலவழித்த பணத்தைப் பற்றிய தொகையைச் செலுத்திவிட்டுப் போவெனப் பிடித்துக் கொண்டனர். அப்போது சுவாமிகள் அவரை, நீர் எனக்கு போகச் செலவுகொடு மென்றனர். தமையனுர் பணத்தைச் செலுத்திவிட்டுப் போ என்றனர். இவ்வாறு ஒருவர்க்கொருவர் விவாத மாடிக்கொண் டிருக்கும்போது, வேண்டாமை யென்னும் விழுச்செல்வம் பெற்றவரா யிருந்தும் அதை யறியாத சகோதரருக்கு ஐய, யான் அவ்வாறே கொடுக்கின்றேன். என்னுடன் வருவீராக வெனத் தமது மூத்த தமையனு ரிருக்குந் திருப்போரூருக்கு அழைத்துக் கொண்டு சென்றனர்.

## தமது தமையனாருடன் துறவு விஷயமாய் விவாதம்.

அங்குச்சென்று தமது மனையிற் புகாது முற்றத்தி லேயே உடைகோவணத்துடன் பக்குவ மனத்தராய் முத்தி வேட்கை மிக்குடையராய் பட்டினத்தடிகள் தான் இப்போது ஒரு திருவுருக்கொண்டுவந்து விட்டனரோ? என யாவரு மெண்ணுமாறு நின்றனர். அப்போது இவருடைய மூத்த தமையனார் வந்து அன்புடன், இளைஞ, உன்னைப் பார்க்கில் பட்டினத்தடிகள் போலிருக்கின்றது. இறைவ னருளால் அந்நிலைமையை யடைவா யெனவுந் தோன்று கின்றது. ஆனல் நினக்கு அன்பாற் சிலசொல்லுகின்றேன்; அதையும் கேட்பாயாக எனச் சொல்லத் தொடங்கினர். அவை வரு மாறு:—

தக்கண மூர்த்தி முதலிய மூர்த்தங்களாலும், மறை முதலிய நூல்களாலும் முனி ரிஷிகளாலும் மற்றுமுள்ள பெரியோர்களாலும் மக்கள் கடைத்தேற வேண்டுமென்னுங் கருணை மேலீட்டால் வகுக்கப்பட்ட வழிகள் இல்லறம் துற வற மென்னும் இரண்டுமேயாம்; இவற்றுள், இல்லறமே எல்லாவகையானுஞ் சிறந்த தென்று எனக்குத் தோன்றுகின் றது.

"இல்லற மல்லது நல்லற மன்று"

என ஔவைப் பிராட்டியாரும் அருளினர். அதுபற்றியே, நமது தமிழ் மறை கண்டு அமிழ்தினு மினிய சொல்லால் எப்பாலாருங் கொள்ள முப்பாலும் வகுத்த தெய்வப்புலமைத் திருவள்ளுவ தேவரும்,

"அறமெனப் பட்டதே யில்வாழ்க்கை"

என்றார். அஃதோடமையாது,

"அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்" என்றும்,

"மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்"

எனவும் சிறிது துறவறத்தைப் பழித்திருக்கின்றனர். ஆதலின், நீ இல்லறத்திலிருந்து நலந்தேடலே சிறப்புடைத்தாம் என்றனர். சிவப்பிரகாசத்தால் முற்று முணர்ந்த சிவஞானச்செல்வர் அதைக்கேட்டு ஐய, தாங்கள் கூறியதும் உண்மையே. ஆனல் திருவள்ளுவ தேவருக்குத் துறவறமே சிறப்புடைத்தென்பதே கருத்தாமெனத் தெரிகின்றது. எங்ஙனமெனிலோ, தாங்கள் கூறியவாறே துறவறத்தையும் சிறிது துதித்திருப்பது மன்றி, இல்லறத்தையுஞ் சிறிது பழித்துள்ளார்.

### திருக்குறள்.

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்" எனவும்,

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்க டவம்" எனப் பழித்து,

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கண் டற்று"

எனத் துதித்துங் கூறியுள்ளாராதலின். திருவள்ளுவருக்கு இல்லறமும் துறவறமும் சமமென்பதே கருத்தென விளங்குகின்றது; ஆகையால், இவற்றில் உயர்வு தாழ்வு கூறுதல் ஒரு சிறிது மமையாது. மற்றும் இவ்வாறே இல்லறத்தாலும் துறவறத்தாலும் முத்தியடையலாமென பலநூல்களும் பகர்கின்றன என்பீரேல்.

அங்ஙனமாயினும் இதில் ஆராயற்பால தொன்றுண்டு. அஃதென்னை யெனின், நம்போலியர்களால் திருவள்ளுவர் கருத்து அறியப்படாதா மாயினும் பழவடியாரிற் சிறந்தாரும் சிவஞானச் செல்வரும் அறிவான் முதிர்ந்தோரு மாகிய பெரியோர் ஆராய்ந்து வகுத்திருக்கின்றார். அதனை யாம் கைக் கொள்ளுதல் மரபாகும். அதாவது :—

நமது வீரசைவ குலதிலகராகிய தண்டமிழ்க்கவி வேந்த ரென்னும் சிவப்பிரகாச முனிவரின் திருவடித் தொண்டராகிய சாந்தலிங்க சுவாமிகள்,

“ நிறந்தருந் தெய்வப் புலமைவள் ளுவனார்
நீத்தவர் பெருமைநூன் முகப்பாற்
சிறந்திட வமைத்தாங் கதுகொடில்
வாழ்க்கை சிறிது தூற்றினர் ”

என்றருளிச் செய்திருக்கின்றனர். இதில் நூன் முகப்பில் திருவள்ளுவர் துறவறத்தைக் கூறினமையின் இல்லறமானது துறவறத்தினும் சிறிது தாழ்ந்ததே என்னும் தமது கருத்தைக் குறிப்பிட்டனர்.

இவ்வாறாகவே, இல்லறத்திலிருந்து முத்தி பெறுவதைப் பார்க்கிலும் துறவறத்தி லிருந்து வந்தால் முத்தியையும் எளிதில் எய்தலா மென்பது உபலக்கணத்தாற் கூறியுள்ளாரென்பது மறிவீராக. இதுபற்றியே,

துறவு

“ இல்லறமதனை யடைந்து ளோரிடத்தில் இருப்பினும்
ஞானங் கீழிரும்பில் புல்லியமாரத்தின மெனவிளங்கும் ”

என்றார் மகாராசாவும்,

அஃது புலமின்று மெனினும் யாருந் துறப்ப தரிதரிது எனப் பல்லோரானும் புகழப்படுவோரான பட்டினத்தடிகள்

"அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந் துறந்தான்" என்ற அமுதவாக்கால் நன்குணரலாம்.

மற்றும் பருத்ருஹரி முதலிய பெரியார்களும் அவ்வாறே கூறியுள்ளனர். அஃதன்றியும், எல்லா நூற்கும் எல்லாப் பெரியார்களுக்கும் இதுவே கருத்தென்று தோன்றுகின்றது என்றனர்.

இதைக்கேட்ட இச் சிவப்பிரகாசச் செல்வரின் தமையனார், இளைஞ, நீ கூறியது உண்மையே; அங்ஙனமாயினும் இதில் இன்னுமோர் வகையுண்டு. அஃதென்னை யெனின், நமது வீரசைவ மதத்தை உற்றுநோக்குங்கால் துறவறத்தை யொத்ததேயாம். இதிலும் ஐக்கியத்தலம் முதலியவைகளிற் சிறந்த முத்திநெறி யமைந்திருக்கின்றது. சாதிபேதம், சூதகம், வருணம் ஆசிரமம் பாகுபாடு முதலியன வொழித்து உள்ளத்தி லிருக்கின்ற சின்மய இலிங்கத்துடன் ஒன்றுபடலே இதன் பயனும். ஆதலின், இதிலிருந்து முத்தி நெறியுந் தேடிக் கொள்ளுவதற்கு இடையூறென்னை கொலோ? என்றனர். அதைக்கேட்ட சிவப்பிரகாசப் பெருந் தகையார், தமது அண்ணுவை நோக்கி,

ஐய, தாங்கள் கூறியதும் உண்மையே. ஆயினும், இல்லத்திலிருந்து ஞான நோக்கைப் பெறுதல் ஒருவாறு சனகன் முதலிய முன்னோர்களுக் காகினும் எம்போலிகட்கு முடியா தென்பது திண்ணம். மனத்தி னியற்கையோ, சித்தைச் சேரிற் சித்தாகும்; சடத்தைச் சேரிற் சடமாகு மல்லவா? இக் குடும்பக் கடலில் அமிழ்ந்த மனத்திற்கும் ஒரு கணமேனும் உண்மைப்பொருளை யுற்று நோக்குவதற்கு இடமு முண்டோ? அதுபற்றியே, பதஞ்சலி முனிவரும், "பொருளைப் பற்றிய மனவிருத்தி பொருள் வடிவே யாகின்

றது" என்றருளினர். "அரக்கால் உருவங்களமைக்கக் கட்டியிருக்கின்ற கருக்குகையில், உருக்கிவிடப்பட்ட தராநீர் அவ் வுருவேயாவது போன்று உருவ முதலியவைகளிற் சென்ற மனவிருத்தி உருவ முதலியவைகளேயாகின்றது" என வித்தியாரணிய சுவாமிகளுங் கூறியுள்ளார்.

மற்றும், மனத்திற்கு இருபொருளைப் பற்றலு மமையாதாம். அட்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம் முதலியவைகளோ, புறநோக்கா மாதலிற் கூடும். எங்கிருந்தாலென்? என்பர் சிலர்; எதைச் செய்தாலென்ன? என்பர் சிலர்; எவ்வித அவத்தை யடைந்தாலு மென்ன? என்பர் மற்றொருசாரார். இவைகளெல்லாம் அவ் வாக்கியங்களை யறைந்துள்ளார்களின் உண்மைக்கருத்தை யறியாதாரின் வெற்றுரையேயாகும். உள்ளவா றடைந்தவர்களான பட்டினத்தடிகள், பத்திரகிரி, மகாராஜா, இராமலிங்க சுவாமிகள் முதலிய பெரியார்கள் குடும்ப கோரத்தைத் தடுக்கவும், பற்றை விடுக்கவும், நினைந்து நினைந்து, அழுது அழுது, தொழுது தொழுது, அனலின் மெழுகாய்க் கரைந்து கரைந்து, பதைபதைத் தலறி யிருக்கின்றாரன்றோ? மற்றும், துறவினாலேயே எல்லாச் சித்திகளும், எல்லா முத்திகளும், கல்லா வித்தைகளும் அடைந்து மிருக்கின்றனர்; இப்போது மடைகின்றனர்; இனிமேலும் அடைவர் என்பது இக்கலியிலும் காந்தியடிகளாற் கண்கூடா மன்றோ!

"தந்தைதாய் முதலிய பந்துக்களை விட்டு நீங்காதார்க்கு
உய்ந்துபோம் நெறியின்று"

எனத் திருஞானசம்பந்த சுவாமிகளும்,

"வேண்டியது எய்தொணாது பந்தம் விடாவிடின்"

எனத் திருநாவுக்கரசரும்,

"இடுக்கணொன் றனைத்தும் விடுத்தன ருலகம்
எத்து பத்திரகிரி முதலோர்"

என சாந்தலிங்க சுவாமிகளுங் கூறியுள்ளார்கள். ஞான மாத்திரம் போதுமென்று கூறும் நூல்களின் கருத்தாவது:— மருந்தை யருந்தப் பத்தியங் கூறுங்கால் உப்பில்லாப் பத்தியத்தில் உப்பை வறுத்துச் சேர்க்கவும், மோரை முறித்துச் சேர்க்கவும், கடுகின்றிப் பொரித்துச் சேர்க்கவும் கேட்டுக்கொள்வார்களைப் போன்ற மந்தவிராக முடையவர்களுக்கும், பிரசவ வைராக்கிய முதலிய போலி விராகத்தார்க்குமே கூறியுள்ள தென்பதாம். அது தீவிர வைராக்கிய முடையார்க் கல்ல வென்பது தெளிந்து கொள்வீராக. இவ்வாறே இலிங்க சந்நியாசமுமாம். மற்றும்,

கந்தரநுபூதி.

"வளைபட் டகை மாதொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ" என அருணகிரி நாதர் அருள்வாக்கையும் ஈண்டு நோக்குவீராக.

ஐய, மற்றும், பாலன், குமரன், தருணன் என்னும் பருவங்களெல்லாம் நீங்கி எக்க விளைப்பும் இளகி வருங்கால் தெருவி லுள்ளவர்கள் கொல்லென்று நகைக்கக் கோலை யூன்றிக் குனிந்து எழுந்து ஐயினுன் மிடரடைப்புண்டு ஆக்கை விழுங்காலத்தில்,

"மையினுற் கண்ணெழுதி மாலை சூட்டி ஏலப்பிண மென்று
ஒரு பெயரிட்டு நம்மை இடுகாட்டிவிடுதல் திண்ண மல்லவா?

அஃதன்றியும், ஐய, இம் மாநுடப் பிறவி, "அரிதரிது மானிடராய் பிறத்தலரிது" எனவும், "மக்கள் யாக்கையிற் பிறத்தலே யரிது எனவும்,

" எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான்
யாதினு மரிதரிதுகா
ணிப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
வேது வருமோ மறிகிலேன் " எனவும்,

" துர்லபம் மானுஷ்யோ தேகாநாம் " எனவும்

பலரானுங் கூறப்பட்டவாறே அரியதாமாயினும், இவ்வாக்கையோ, கருவிலேனும், அல்லது குழந்தையா யிருக்கும் போதேனும், தருணத்திலேனும், மூப்பிலேனும் மற்று எந்த நேரத்திலேனும் அழியுந்தன்மை யுடையதன்றோ, அது குறித்தே,

சோணசைல மாலை.

"வந்துமா மறலி யெனதுயி ருண்பான் மயிலை (மீனை) யுண்
சிரலின் (மீன்கொத்திப் பறவைபோன்று) நிற்கின்றான் "
என்ன துறைமங்கலம் - சிவப்பிரகாச சுவாமிகளும்,

கந்த புராணம்.

" காலனு கியதோர் சேர்ப்பன் காலமாம் வலையை வீசி
ஞாலமாந் தடத்தின் வைகு நல்லுயிர் மீன்கள் வாரி
யேலவே யீர்த்து நின்று னிறுதியாங் கரைசேர் காலை
மேலவன் கையிற் பட்டு மெலிவொடு வீடு மன்றே "

என குமரகோட்டத்து அருச்சகராகிய கச்சியப்ப சிவாச்சாரியா ரவர்களுங் கூறி யுள்ளார்கள்.

திருக்குறள்.

" நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு "

எனவும்,

### தாயுமானவர் திருப்பாடல்.

"இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே" எனவும் பல சுருதிகள்
முறையிடுகின்றனவே.

மற்றும் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களும் அழிவனவே, சந்திரன் சூரியன் நட்சத்திரங்களும் அழிவனவே, அசுரர்களும் அழிபவர்களே, தேவ பதவிகளும் அழிவனவே, பிரமனுடைய பதவியும் அழிவதுவே, விட்டுணுவின் பதமும் அழிவதுவே, பிரமபதமொன்றே யழியாததுவாம்.

### தேவாரம்.

"நூறு கோடி பிரமர்க ணொந்தின
ராறு கோடி நாராயண ரங்ஙனே
மாறில் கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவ னீச னொருவனே"

அவ்வாறே,

### வசிட்ட முனிவர்.

"மண்ணுடு மவர்தனமும் மாண்டனநுண் மணலை யொக்கும்
விண்ணுடு மவர்வாழ்வும் போயினவிண் மீனை யொக்கும்
எண்ணுடும் பிரமரு மண்டமும் இறந்தன எல்லை யில்லை
கண்ணுடு மவையெங்கே நின்வாழ்க்கை நிலையென்னே கவலை
[நெஞ்சே"

எனக் கூறியதும் நோக்கத்தக்கது.

அஃதன்றியும் இவ்வுடல் தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களா லாக்கப்பட்டது. இத்தேகத்தில் சந்தனம், அத்

தர், கஸ்தூரி முதலிய நறுமணத்தைப் பூசினும், மறுகணத்தி லேயே மறுமண மாக்கும் இயற்கை யுடையதல்லவா?

இவ்வுடல், பிறக்கும் போது, யோனித் துவாரத்தில் நெருக்குண்டல், பிரசூதவாயு முறித்துத் தள்ளுதல் முதலிய ஐம்பெருந் துன்ப முடையதாம். இறக்குங்கால், சிந்தனை கலங்கி, இணைவிழிகள் இருளுண்டு, இரண்டு செவிகளுஞ் செவிடுபட்டு கபம் மேல்வர வந்திடு மரணத்துன்பம் வாயா லுரைக்கப் படுமோ? அதைக் கேட்கில் அறிவுடையார் மனம் துடிக்காதோ? உண்டுடுத்துச் சுகித்திருக்கவு மன மெழுமோ? மற்றும், கிழப்பருவத்தில் வருங்கேடும் எண்ணி றந்ததன்றோ? பிணியால் வருந்துன்பங்களைப் பேசவு முடி யுமோ? குழந்தையா யிருக்கையில் அறியாமையால் வரும் துன்பத்திற் களவுண்டோ? குமரனாகியபோது தாய் தந்தை யர் ஆசிரியர்களுக்குப் பயந்து சிந்தைகலங்கி யிருக்கின்ற தன்மை தெரிவித்தற்காமோ? காளைப் பருவத்தில் பசிப்பிணி யாலும் காம நோயாலும் வருந்தாதார் மனிதர் தேவர் விலங்கு முதலிய பல்கோடி உயிர்களில் ஒருவரேனும் உளரோ? அந்தோ! இவ் வுலகில் இடைவிடாது தொழிலாற் படும் பாடு சிவனே உலகில் நவிலும் பஞ்சுதான் படுமோ? அத்துணைதா னெனிலோ, இன்னல் தரக்கூடிய பொருளை யீட்டல் துன்பமல்லவா? பின்னர் அதனைக் கெடாது பேணி வருதல் பெருந் துன்பமென்று பேசவும் வேண்டுமோ? அதனை யழித்தலும் அளவிலாத்துன்ப மாகாதோ? பிறர்க்குக் கொடுக்கினும் பாத்திர மறியாமற் கொடுத்தல் முதலிய வைகளா லுண்டாகின்ற துன்பங்கள் வருமல்லவா? பரலோ கத்தில் வருவதென்னை சொல்லே, என்று நெஞ்சம் பதைக்க வில்லையா? பரலோகத்திலுள்ள துன்பங்களோ இவ்வுலக துன் பத்தினும் எத்துணையோ மிகுதியா மெனப் பெரிய மறை

களும் பேசுகின்றனவே! இல்லறத்தி லிருந்து ஞான மடையி னும், அந்த ஞானம் இரும்பிற் பதித்த மாணிக்கம்போல் விளங்குமா?

அண்ணாவே, பகலினால் விரிகானலைக் கொண்டு நெற் பயிராதி செய்ய நினைப்போர்களாவர், இவ்வுலகர். விழலுக்கு முத்துத்துலை வாய்கட்டி யிறைக்கின்ற இந்த வியனுலகம் ஓர் பொங்கு மிருள்செய்த மாமாயை மாயவினை மற்றனைத் தும் பொய் பொய் பொய் பொய் பொய்யன்றோ? மையணி கண்ணியும் மைந்தரும் வாழ்வு மனையும் பரம்பொரு ளுருவா கிய மாயையின் காரிய மல்லவா? இவைகள் மெய்போ லிருந்து நாட்செல நாட்செல வெட்ட வெறும்பொய்யாய் பழங் கதையாய் மெல்லப்போய் விடுபவைகளன்றோ? நீர் உணர்ந்து பார்க்காத தென்னைகொலோ? மாயையின் ஆற்றலா? அறியா மையின் தேற்றமா? பொறி செய்கின்ற ஊற்றமா? மனம் செய்கின்ற மாற்றமா? என்று பற்பல வகையாக இச் சிவப்பிர காசப் பெருந்தகையார் எடுத்துக் காட்டியவுடன் இவரது தமையனாராகிய அறிவுடையாரும் இளையோய், நீ கூறிய தனைத்தும் நூல்களுக்கும் அனுபவத்திற்கும் சிறிதும் முர ணாகாததேயாம். யான்செய்த தீவினை வலியால் என் மனம் இவ்வாறு தூய்மை யடையவில்லையே! எக்கால் யானும் இந் நிலை வரப் பெறுவனோ? என்று ஏங்கித் தழுதழுத்த வாக் குடன் தமது தம்பியாரை அன்பின் மிகுதியால் கட்டி யணைத்து உச்சிமோந்து எங்கள் குலமும் ஜென்மமும் இன்றே பவித்திரமாகி விட்டது. யானும் இன்றே தன்னியனானேன் என்று பலவாறு போற்றிப் புகழ்ந்து அறிவு மிக்கோய், அங் ஙனமாயின் நினது இந்த இல்லத்தில் அன்னம் அருந்திப் போவாயாக என்று வேண்டினர். அதைக்கேட்ட இச் சிவப் பிரகாசப் பெருந்தகையார், இது எனது வீடு மன்று உமது

வீடுமன்று, ஆனால் இது பலர் வாழ்ந்து செல்லும் சத்திரம் போன்றதென் றறிவீராக ஆனால் எமக்கொரு வீடுண்டு. அது யாதெனில் அரவா பரணனது திருவடியேயாம். அவ் வீட்டிற்கு நீரும் வருவீரேல் துன்பற்று இன்புற்றிருக்கலா மென்றனர்.

அதைக்கேட்ட சிவப்பிரகாச சுவாமிகளின் தமையனார் மறுமொழி கூற வறியாது கற்றல் கேட்டலுடையாய், அங் ஙனமாயின் இன்று மாத்திரம் அன்னம் அருந்தி அகல்வா யாக என்றனர். ஆம் தங்களிஷ்டப்படியே செய்கின்றேன். ஆனால் அன்னத்தை நான் நிற்கின்ற இடத்தில் கொண்டு வந்து போட்டால் அருந்துவேன் என்றனர். அவ்வாறே அன்னங் கொண்டுவந்து வாழையிலையில் பரிமாறி உண் ணுவாயாக வென்றனர். சுவாமிகள் தமையனாரை நோக்கி, ஐய, அடியேனுக்கு வாழையிலை வேண்டாம்; வண்டுகள் போன்று பல இடஞ் சென்று சிறிது சிறிது அன்னம் ஏற்று விதியைத் தழுவி பன்னிரண்டு முதலாய கவளம் உண்ண வேண்டியது விதியாதலின் எனது கரமாகிய பாத்திரத்தில் அளிப்பீராக என்று சொல்லி கையை நீட்டவும் இவரது கரத்தில், இவரது அண்ணியார் மூன்றுபிடி யன்னமிட்டனர். அதையுண்டு கரத்தைச் சுத்தஞ்செய்ய ஏரிக்குச் சென்றனர். அது முதற்கொண்டு இச்சுவாமிகளை கரபாத்திர சிவப்பிரகா சர் என உலகம் வழங்கிவந்தது. இத்திருநாமமே யாவருக் கும் இச் சுவாமிகட்கு ஒத்ததா மென்று அறிஞர்களான இவ ரது அண்மைத் தொண்டர்கள் கூறுவாராயினர். மற்றும் இவ்வாறே இப் பெரியார் அநேககாலம் கரத்தில் மூன்று பிடி யன்னம்வாங்கி உண்டு வந்தனர்; அதனால், கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் என்னுந் திருநாமம் உலகெலா முணரப்பட்ட தாயிற்று.

இவ்வாறு தமது இல்லத்தவர்க ளளித்த ஐயத்தை, பிச்சை க்கையிடையிற் காடி கூழேனும் பெற்றதுபற்றி யுள் வெறுப்போடு இச்சையற் றருந்தி ஏரியிற் சென்று தாகந் தணித்துக்கொண்டு, கடலருகே நிற்கின்ற கரும்பை பட்டினத்தடிகள் பிடித்துக்கொண்டது போன்று கடலருகே நிற்கின்ற பிரம மென்னுங் கரும்பைத் தின்று பேரானந்தமுற திருவான்மியூருக்குச் சென்றுவிட்டனர்.

சுவாமிகள் அங்குள்ள ஆலயத்திற்குள் சென்று அன்புடன் அவ் வீசரைத் தொழுது போற்றி, "பொல்லாத என் நெஞ்சு ஐந்து புலன்களிடத்திற் செல்கின்றதே யல்லாது அரைக்கணமேனும் உனதடியில் அன்பாய் நில்லாது ஓடுகின்றது. இதற்கென்ன செய்கேன்? ஆதலின், இதை நின்ருள்களி னிற்குமாறு அருள்புரிவாய்" என்று சொல்லி வேண்டிக்கொண்டனர். மேலும்,

### தாயுமானவர் திருப்பாடல்.

"கனியேனும் அரிய செங்காயேனும் உதிர்சருகு கந்த
மூலங்களேனும் கனல் வாதை வந்தெய்தின் அள்ளிப்
புசித்து யான் கண்மூடி மௌனியாகி தனியே யிருப்
பதற்கு எண்ணினேன்" என்றபடி.

அந்த க்ஷேத்திரத்திலேயே கடற்கரைக்கருகில் தனித்தோரிடத்தில்,

### பட்டினத்தார் திருப்பாடல்.

"இருக்குமிடந் தேடி யென் புசிக்கே யன்னம்
உருக்கமுடன் கொண்டு வந்தா லுண்பேன்
பெருக்க அழைத்தாலும் போகேன் அரனே
யென் தேகம் இளைத்தாலும் போகேன் இனி"

என்று உறுதியுடன் உட்கார்ந்து ஞானத்திற்கு வரம்பாகிய மோனஞ் சாதித்துக்கொண்டு இடையறாது சமாதியிலிருந்து கொண்டு வந்தனர். அவ்விடமே பறங்கிமலை சுவாமிகள், மௌன சுவாமிகள், திருவான்மியூர் சுவாமிகள், சாந்தானந்த சுவாமிகள் என வழங்கும் பெரியாரின் ஆசிரம மென்ப.

இத் திருவான்மியூர் சுவாமிகள் தமது ஆசிரமத்திற் கருகில் பற்றெல்லாம் விடுத்து உற்றதோர் பொருளை முற்றுமே பிடித்து காஷ்ட மௌன நிலையிலிருப்பதைக் கண்டு இச் சிவப்பிரகாசச் செல்வருக்கு சமாதி நிலைக்கோ ரிடையூறும் வாராது உதவி புரிந்து வந்தனர்.

அக்கால் வந்த அன்பர்கள் இச்சுவாமிகளின் தவ நிலையைக் கண்டு பணிதலுடன் அன்புடன் ஏதேனும் உணவுகள் கொடுக்கில் கரத்தை நீட்டி மூன்று கவளமேனும் ஐந்து கவளமேனும் வாங்கி யுண்டு ஒருவரையும் நோக்கிப் பாராது, வெயில் மழைகளையும் பொருட் படுத்தாது ஒரு மரத்தடியில் தவமாற்றி வந்தனர். அப்போது சில அன்பர்கள் தரிசிக்கச் செல்லுங்கால் சுவாமிகளின் திருமேனியில் ஒரு சர்ப்பம் ஏறிச் சென்றது. அதைக்கண்ட அவர்கள் நமது சுவாமிகளின் தவ வலிமையைக் கண்டு இம் மகான் ஒரு பெரிய மாமுனிவர் எனப் போற்றிப் போற்றிக் கொண்டாடினர். மங்கைய ரல்குல் ஒளி மணிப்பாம்பு தீண்டாத இத் தவப் புதல்வருக்கு ஏனைய பாம்பு தீண்டுதலு முண்டோ? பாம்பு தீண்டினும் படுவிடம் ஏறுமாறு மெங்ஙனம்? அங்குச் சில சமயம் வீதியிற் சென்று ஐயமேற்று அரும் பசி தணித்து வந்தனர்.

மற்றும் அக்கால், சுவாமிகளுடன் ஒரே ஆசிரியர்பால் கற்ற மாணுக்கர்களான ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியா

ரவர்கள், அரங்கநாதம் பிள்ளை யவர்கள், தர்க்க வாசஸ்பதி முருகேச முதலியா ரவர்கள், சிவகங்கையிலிருந்து வந்த அரும்பாக்கம் சுவாமிகள் என்னும் முனியப்ப சுவாமிகள் முதலியோர்களும் வந்து தரிசித்து அன்பு பாராட்டிப் போவார்கள்.

அக்கால் சென்னை சீனிவாச நாயகரும் அவரது மனைவி தாயாரம்மாளும் சுவாமிகளைத் தரிசிக்கத் திருவான்மி யூருக்குச் சென்று சுவாமிகளைப் பார்க்க அம்மௌன சுவாமிகள் ஆசிரமத்தில் சுவாமிகள் இல்லை. பின்னர் அங்குள்ள சிலரை விசாரிக்கும்போது, எங்கேயோ ஒரு கழனியின்கண் உட்கார்ந்திருக்கின்றனர் எனக் கேள்விப்பட்டனர். அதைக்கேட்டு அங்குச் சென்றுபார்க்க சுவாமிகள் உடை கோவணத்துடன் ஒரு மூலையில் உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண் டிருந்தனர். அச் சமயம் அங்கு ஆடுமாடுகள் மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் இவன் ஒரு பித்துப் பிடித்தவன் என வெண்ணி, சுவாமிகள் மீது கற்களை யெடுத் தெறிந்தும் மண்ணைவாரி யிறைத்தும் மற்றும் பலவகையாய் உபத்திரவஞ் செய்து கொண்டு மிருந்தனர். அப்போதும் சுவாமிகள் தங்நிலையி லேயே யிருந்தனர். அதைக்கண்டு சோமசுந்தர நாயகர் சுவாமிகளை யழைத்துக் கொண்டுவந்து ஒரு பாழடைந்த ஆலயத்தி லிருக்கச் செய்தனர். பின்னர் மறுதினம் அவர் போய்ப்பார்க்கும்போது சுவாமிகள் அங்கு இல்லை. அங்குள்ளார்களை விசாரிக்க சுவாமிகள் அவ்வூருக்கு வெளியில் சுடுகாட்டில் இருக்கின்றார்களெனத் தெரிந்து அங்குபோய்ச் சுவாமிகளைத் தரிசித்துப் பேசுங்கால் சுவாமிகள் மௌனமா யிருந்தனர். மால் சுடுகாட்டில் மாதரின் எலும்பிற் புரண்டமையாலோ, அல்லது சிவன் சுடுகாட்டில் வசித்து சுடலையாடி யெனப் பெயர் பெற்றதாலோ சுவாமி கட்கு சுடுகாடு பிரியமாயிற்று. பின்னர்

சுவாமிகளை யழைத்துக் கொண்டுவந்து முன்னிருந்த பாழடைந்த ஆலயத்தில் அமர்த்தி அன்னமளித்து வணங்கி விடைபெற்றுக் கொண்டுவந்து விட்டனர். பின்னர் சுவாமிகளும் தாமிருந்த திருவான்மியூர் மௌனசுவாமிகளின் ஆசிரமத்திற்குச் சென்று விட்டனர்.

அப்போது சுவாமிகளை, நீலகிரியில் ஒரு இடத்தில் தியானம் பண்ணிக் கொண்டிருக்க ஒரு ஆங்கிலேயர், கண்டு இரவில் அன்பு பாராட்டினர். மறுநாள் பகலில் திருவான்மியூரி லிருந்தனர்.

இப்படியே இச் சிவப்பிரகாச வள்ளலார் அகோராத்திரம் பெருந்தவமாற்றி வரும்போது மூலத்திற் கொதிப் புண்டாகி இரத்தபேதி யாரம்பித்தது. அதையும் மனதிற் கருதாது சமாதி நிலையையே இடையறாது பழகி வந்தனர். உடலைநீர்க் குமிழியென் றுணர்ந்தார்க்கு பற்றும் உண்டோ?

“ பிணியதே யொக்குந் துன்பம் பேசிடிற்
பிறிது முண்டோ”

எனக் கூறியிருக்க அத்தகைய கொடிய வியாதிகளும் சுவாமிகளின் சமாதி நிலைமைக்கு இடையூறாகா திருந்தது கொண்டு சுவாமிகள் எத்துணை தவவலியார் என்பதும் ஞானப் பொலிவுடையா ரென்பதுந் தாமேபோதரும்.

இதுபற்றியன்றோ, இத்தவப் பெரியார், இரத்தின தேசிகராகிய தனது ஆசிரியரிடத்தில் வேதாந்த சிரவணம் பண்ணிக்கொண் டிருக்கும்போது சமாதி நிட்டைகளை ஆசிரியர் தமக்குப் போதித்து வருங்கால், ஆசிரியரை நோக்கி, சுவாமின், இவ்வியல்பிற்றாய முடிந்தநிலையி லிருக்கவும் முடியுமோ என்று வினவினர். அதற்கு இவரது ஞானாசிரியரும் ஆம் கூடும். முன்னர், புசுண்டர், சிகித்துவசன், சிதம்பரம் மௌன சுவாமிகள் முதலிய பலர்கள் இருந்தார்களென்று

தெரிகின்றது. இச்சமயத்திலோ, கும்பகோணத்தில் ஏழாம் பூமியை யடைந்த மகான் ஒருவர் இருக்கின்றார், என்று கூற அதைக் கேட்டவுடனே அற்றேல், ஆசிரியரிடத்தில் பணிந் தெழுந்து, ஐய, யான் அவரைத் தரிசித்து வரல் வேண்டும் அடியேற்கு விடைகொடுத் தருளவேண்டு மென்று வேண்ட அவ்வாறே விடைகொடுக்க, அதைப்பெற்று, அக்கணமே, நேரே கும்பகோணத்திற்குச் சென்று அங்குள்ள மௌன சுவாமிகளைத் தரிசித்து வந்து சிரவணத்தை முன்போற் செய்துகொண்டு வந்தனர். இதனால் இப் பெரியார் வேதாந்த சிரவணங்கள் முதலிய செய்துகொண்டு வந்தாரேனும்,

திருக்குறள்.

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்"

எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவதேவ ரியற்றிய மொழிக்கு இலக்கியமாகாது கற்றுணர்ந்தவாறே நடக்க வேண்டு மென்றும் நடந்து,

"நீ மெய்ஞ்ஞான நன்னிட்டை சாருதலரி தெனவும்"

எனச் சிறப்பித் தோதும் நிருவிகற்ப நிட்டையையடைய, இப் பெரியாரது மனம் அக்காலத்திலேயே மிக்க உற்சாகத்துட னிருந்ததை நோக்க இவர் தக்கணா மூர்த்திபோன்று நிவர்த்தி மார்க்கத்தை நடந்து காட்டி உலகத்தை யீடேற்றவந்த ஓர் உத்தமப் பெரியா ரென்பதிலும் ஒரு அவதார விசேட மென் பதிலும் ஐயப்பாடுமுண்டோ? எவர் பொருளுடையார்? யாவர் தனங் கொடுப்பார்? எவர் அனுகூலஞ் செய்வார்? என்று பெரு மைக்கும் உரிமைக்கும், தந்நலத்திற்கும் பிறர்பால் அன்பு பாராட்டி தவமேற்கொண்டு அவம் பெருக்கி மனமடங்காத எம்போன்றார் கட்கும் இவருடைய துறவு நிலைமையையும்

தவத்தின் வலியையும் திடத்தின் அலேவிலாத சமாதியையும் எடுத்துக் கூறுவதற்குங் கூடுங்கொல்லோ? சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற திறம் எளிதாமோ மனமடங்கக் கல்லாதவர்க்கு வாயேனுதலின் என்க. கறுத்தகுழலார் சிரித்துப் பேசில் பெருத்த பல்லேக்காட்டி கருத்தில் ஞானத்தை யோட்டி அவர்பால் மையலே நாட்டி பொருந்து மோர் வெளின்மீது எறவிட்டு அணிலேநோக்கிக் கொண்டிருக்கின்ற நாய்போல் அரிவையைக் கண்டு நோக்குகின்ற எம்போலிகளால், அருந்தவம் ஆற்றுவோர்க்கு எதிரில் ஊருவசி முதலிய தேவகன்னிகைகள் வந்து பலவகை முகக்குறி அகக்குறி நகக்குறி முதலியவைகளேக் காட்டிலும் பொன்னேயும் துகிலேயும் பிரித்திடில் வெறும் புழுமலக் கூடல்லால் பின்னேயுண்டுகொல்கண்டு நீ மயங்குதல் பிராந்தி என்று கருதி சிறிதளவேனும் மனமசையாது ஞானநிஷ்டையி லிருந்த இச் சிவப்பிரகாசப் பெருந்தகையாரின் பெருமை பேசற் பாற்றே!

சிவப்பிரகாச வள்ளலார், இவ்வாறு திருவான்மியூரின்கண் தமக்குண்டாகிய உடம்பு நோயை சிறிதுங் கவனியாது,

“வருந்தி யழைத்தாலு வாராது வாரா
பொருந்துவன போமி னென்றாற் போகா இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தான் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்”

என்பது போலல்லாது உபேட்சையா யிருக்குங்கால் அங்கு வந்து கொண்டிருந்த வழக்கறிஞர் குப்புசாமி ஐயர், ஆண்டாளம்மாள், மேனாட்டு வைத்தியர் நஞ்சுண்டராவ் முதலியோர்களுள் சக்கரையம்மாளேக் குருவாகக் கொண்டு நன்மையில் விருப்புற்ற மேனாட்டு வைத்தியர் நஞ்சுண்டராவ் என்பவர்

இச் சுவாமிகளின் பவப்பற் றொழித்த தன்மையையும், அவமேயின்றி தவமே பழகி வருநிலையையும், தவத்திலுள்ள பெரு முயற்சியையும் நோக்கி அன்புகொண்டு சுவாமிகளிடஞ் சென்று வணங்கி, பெரியீர், தமது தேகத்தில் பெரும் பீடை யுற்றதுபோற் றெரிகின்றதே. அது இன்னும் மிகுதிப்படில் சமாதிக்கே இடையூறு மாதலின் அதை நிவர்த்திக்குமாறு எமக்கு ஆணை கொடுப்பீரேல் எம்மாலியன்றவாறு மருந்து கொடுத்துத் தணிக்கின்றேன் என்று வேண்டினர். சுவாமிகள் அதற்கு சும்மா இருத்தலையே மறுமொழியாகச் செய்தனர். பவப்பிணியைப் போக்குதற்கு தத்துவ ஞானமாகிய பெரு மருந்துண்டு களித்திருக்கின்ற இப் பெரியாருக்கு நோய்கட்கெல்லாந் தாயாகிய இவ்வுடலைப்பேண மருந்துண்ணவு மனமெழுமோ, உடம்பை நன்று வளர்த்து வைத்துக் கொண்டாலன்றி முத்தி கைகூடாது என்று தனதுடம்பையே தெய்வமெனப் பாவித்து, முதலையைத் தெப்பமென்று கருதி ஆறுகடக்க முயலும் மூடபுத்தி போன்றதேயாம், தேகத்தைக் காத்துக்கொண்டு தவஞ் செய்வானது புத்தி. என்னும் மொழிக் கிலக்காகிய எம்மைப்போன்ற போலி ஞானம் போலித்துறவு முதலியவைகளைக் கைக்கொண்டு வாய்ப்பறை யறைவாரின் வகை சுவாமிகட்குத் தெரியாது போலும். உண்மை யெங்கே? பொய்வேடனுண்மை யெங்கே? தொண்டர்தம் பெருமையைச் சொல்லவொண்ணுமோ?

பின்னர் நஞ்சுண்டராவ் என்னும் மேனாட்டு வைத்தியர் உண்மையாகிய பெரியாரின் கொள்கையுஞ் சிறிது உணர்ந்தோராதலின் சுவாமிகளை வற்புறுத்தித் தாமே மருந்துண்ணுமாறு செய்வித்து ஒருவாறு உடனலத்தை யடையச் செய்தனர். அது தொட்டு அம் மேனாட்டு வைத்தியரும் நமது

சுவாமிகளிடத்தில் பெரும் பற்றுடன் அரும் பணியுஞ் செய்துவந்தனர். இவர் தமது பங்களாவில் சுவாமிகளை யழைத்துக் கொண்டுபோய் வைத்துச் சிலதினம் அரிய சேவை செய்துவந்தனர்.

இவ்வாறு திருவான்மியூரில் சிலகாலஞ் சென்ற பின்னர், பலவகையானும் இடையூறுண்டான தென்பதை, சுவாமிகளின் அண்மை நண்பர்களும், அன்பர்களும், அறிஞர்களுமான முற்கூறிய கோ-வடிவேலு செட்டியார், அரங்கநாதம் பிள்ளை, சோமசுந்தர நாயகர் முதலியோர்கள் தெரிந்து, சுவாமிகளை அங்கிருந்து அழைத்துக் கொண்டுவந்து, சென்னை பரச்சேரிக்கடைக் கருகிலுள்ள பெருமாள் கோவிலின்கண் அமர்த்தி அவ் வாலயத்திற்குத் தலைவராயிருந்த சாது கன்னியப்பர் என்பவரை சுவாமிகட்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வருமாறு நியமித்தார்கள்.

இவ்வாறு இக் கரபாத்திர சிவப்பிரகாசப் பெருந்தகையார் அப் பெருமாளின் திருவாலத்தில் சிறிது நாள் வசித்துவரவே சிவப்பிரகாசத்தின் ஒளி விசேடத்தால் பெருமாளின் பிரகாசமும் பெருகி பெருமாளும் நல்ல பெருமாள் அவர் திருநாளும் நல்ல திருநாள் என சுவாமிகளின் திருவடிபட்டதின் பயனுய் அவ்வாலயஞ் சீர் திருத்தப்பட்டு பலவித வைபவங்களும் நடந்துவந்தன. சிவனுக்கு விஷ்ணுவானவர் முதற்றெண்டரானதாலும், விஷ்ணு சிவனை ஆயிரங் கமல மலர்கொண் டருச்சித்து உலகைக் காக்கும் வலிமை பெற்றுக் கொண்டமையானும், விஷ்ணு சிவனுடைய சத்தியாதலானும் சிவப்பிரகாசத்தால் விஷ்ணு விளங்கினு ரென்பதும் இயைபுடைத்தேயாம். அல்லது மெய்யடியாரின் திருவடிபடலால் தேவதைகளுக்கும் வலிமிகு மென்னு மியைபினு

லெனினுமாம். அதுபற்றியே, வனத்தின்பாலுள்ள ஒரு பிடாரியம்மை என் சிரசில் உமது திருவடியை வைத்துவர வேண்டுமென்று குமாரதேவரை வந்து வேண்ட அவர் அவ்வாறே தமது திருவடியை அத் துர்க்கையின் சிரசின் மேல் வைக்கவும் அவர் திருவடி பட்டமாத்திரத்தில் மந்திரவாதியால் அத் துர்க்கையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்னும் பழைய சரிதமு மொன்றுண்டு என்பதும் ஈண்டு ஞாபகப் படுத்தற்பாலது "ஞால முண்டவன் தலைமிசை சுமப்பன்" என்றற் றொடக்கத்துப் பெருமொழி கூறுகின்றதும் இப் பொருளேயாம் என்பதுங் காண்க.

இவ்வாறு சென்னையில் சாது கன்னியப்பர் வழிபாடு செய்து வந்ததால் சிலகாலம் சுவாமிகள் அங்கிருந்துவந்தனர். ஞானமொன்றே முத்திக்குக் காரணமாயினும், தேசம், காலம் முதலியவைகளும் துணைக்காரணங்களெனப் பெரு நூல்கள் கூறுகின்றது போன்று, அன்பர்கள் வந்து பணிதல் முதலியவைகளால் சமாதி நிலைக்கு அவ்விடம் சிறிது இடையூறு யிருந்தது கொண்டு, தன் குழந்தையை யெடுத்து தாடிமயிருள்ள தந்தை யொருவன் அன்போடு முத்தமிடுங்கால் அவனுக்கு மகிழ்ச்சி மிக வுண்டாயினும் அக் குழந்தை அம்மயிர் தன்னைக் குத்தலினல் வருத்த மடைதல்போன்று, சில மனக்கிலேச முண்டாயிற்று. அதை அங்குள்ள தமது அன்பர்களான மாணிக்க நாயகர், கோபால நாயகர் முதலியோர்களுக்குச் சுவாமிகள் அறிவித்தனர். தன்னலங்கருதி யெழுந்த மனக்கிலேசமே நூல்களாலும் பெரியார்களாலும் ஒதுக்கற்பாலது ஈண்டோ சமாதிநிலை கெடலாலுண்டாகியதாம். இது, முனிகள் ரிஷிகளுக்குள்ளது போன்று போற்றத் தக்கதாம்.

பின்னர் அரிசிக்கடை மாணிக்க நாயகர், சூளை-டெ-செங் கல்வராயர் தோட்டத்தில் சுவாமிகளை அழைத்துக்கொண்டு போய் அமரச்செய்வது நலமென நாடி, அச்சமயம் அத் தோட்டத்திற்குத் தலைவராயிருந்த அந்நாயகரின் சம்பந்தி யாகிய நைனசாமி நாயகரிடம் சென்று, சுவாமிகளின் பெரு மைகளையும் அருமைகளையும் மன வொருமைகளையும் எடுத் துக்கூறி அத்தகைய சிவப்பிரகாசப் பெருமானுருக்கு பட்டி னத்தில் வசிக்க சிறிது இடையூறு யிருக்கின்றது. தங்களு டைய தோட்டத்தில் அன்னார் வசிக்குமாறு சிறிதுகாலம் இடங் கொடுத்தால், நமது சென்னைமாநகர் நலமடைவதுடன், உங்களுடைய குடும்பமும் பெருநல மடையுமென்று சொல் லினர்.

அதைக்கேட்ட அந்த நைனசாமி நாயகரும் அச் செங் கல்வராய நாயகரும் அவ்வாறேயாகுக. பற்றெல்லாம் விடுத்து முற்றத்துறந்த நற்றவ அடியார்களுக்கு இல்லாத இடம் மற் றெதற்கு? என்று கூறியதுடன், ஆம் அப்படியே சுவாமிகளை யழைத்து வருவீர்களாக. அத்தோட்டத்தில் திருவருட்பிர காச வள்ளலார் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளுஞ் சில நாள் வசித்து வந்தனர்.

“புணர்ந்த பாவமெல்லாம் பரிபூரணம்
உணர்ந்தஞானி விழிபட வோடுமே”

என்றபடி இடைவிடாது பெரியார் தரிசனங் கிடைத்தல் எங் கட்குப் பெரும்புண்ணிய மன்றோ? என்று பேரன்பு கொண்டனர்.

அதைக்கேட்ட அம்மாணிக்க நாயகரும் மற்றுஞ் சில ரும் சுவாமிகளை யழைத்துக்கொண்டுவந்து அத்தோட்டத்தி லமர்த்தினர். அக்காலம் ஆங்கிலேயரின் வருடம் 1903 எனத்




சென்னை, சூளை செங்கல்வராய நாயகர் பூந்தோட்டத்தில்
ஸ்ரீகரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகளிருந்த
மௌன ஞானயோக நிலை.

தெரிகின்றது. அங்குச் சென்று சிவப்பிரகாச வள்ளலார் ஒரு கிச்சிலிமரத்தடியில் மௌனியாய் ஐம்புலனொடுக்கி செம்பொருளடுத்து நம்பெருங்கடமை யிதுவே யென சமாதி நிலையிலிருந்து வந்தனர். அதைக்கண்ட அத்தோட்டப் பணியாளர்கள் விடியலிற் பார்த்தவுடன் இவர் ஒரு கௌபீன முடுத்திக்கொண்டு கண்மூடி மௌனியா யிருந்ததைக் கண்டு எசமானரிடத்தில் சொல்லினர். அதைக்கேட்டு அத்தோட்டத்தின் தலைவர், அவர் ஒரு பெரியார்; அவருக்கு இடையூறொன்றுஞ் செய்யாது நீங்கள் பாதுகாப்புடன் இருந்து வருவீர்களாக எனப் பணித்தனர். அவ்வாறே சுவாமிகளைப் பாதுகாத்து வந்தார்கள்.

அக்கால் அத்தோட்டத்தின் தலைவரைச்சேர்ந்த இராசா பகதூர் என்பவர் மேல்நாடு சென்று ஆங்கில வைத்திய நூல்களைப் படித்து பரீட்சை கொடுத்துவிட்டு அவ்வீட்டிற்கு வந்தனர். அவர் இந்நாட்டிலும் ஆங்கிலேய வகுப்பில் ஆங்கிலக்கல்வி கற்றுவந்ததுடன் முத்துகிருஷ்ண ரெட்டியார், முருகேச முதலியார், கோ-வடிவேலு செட்டியார் முதலியோரிடத்தில் வேதாந்தநூல்களும் பயின்றுள்ள அறிவுமிக்குதித்த அடக்க முடையவர். அவரை நோக்கி, அவ்வீட்டிற்குத் தலைவராகிய நைனசாமி நாயகர், இளையோய், இரண்டு மூன்று வாரமாய் நமது தோட்டத்தில் ஒரு சாமியார் வந்திருக்கின்றார்; அவரைப்போய்ப் பார்ப்பாயாக என்றனர். உடனே அந்த இராசா பகதூர் என்னும் மேல்நாட்டு வைத்தியர் அத்தோட்டத்திலிருந்த நமது சிவப்பிரகாசப் பெருந்தகையாரிடம் வந்து பணிந்து நின்றனர். அப்போது சுவாமிகள் மௌனமாயிருந்தனர். சுவாமிகளை நோக்கி சுவாமின், உலகம் துன்பமயமா? அல்லது இன்பமயமா? என்று வினவினர். அப்போது சுவாமிகள் மௌனவிரதம் பூண்டிருந்த

னர்; ஆதலின் அதற்கு மணலில் தமது திருக்கரத்தால் எழுதிக்காட்டி யறிவுறுத்தினர். அதாவது:—உலகம் என்பதை சிலர் சத்தென்றும், அசத்தென்றும், சத் தசத் தென்றும், சூனிய மென்றும் பலர் பலவகையாகக் கூறுவர். உண்மையை நோக்கிலோ, இவ்வுலகம் ஐவகைப் பகுப்புடையது. அவற்றுள், ஒரு பொருளைப்பற்றி இது இருக்கின்ற தெனப்படுவது சத்து, விளங்குகின்ற தென்பது சித்து, பிரியமா யிருக்கின்ற தென்பது ஆனந்தம், குடம் வயிறு பெருத்து வாய் சிறுத்து இருத்தன் முதலிய உருவம், குடம் ஆடை என்பன முதலிய பெயர், இவ்வாறு இருந்து விளங்கி யின்புறல் பெயர் சொரூபம் என ஐவகைக் கூறுபாடுகளும் ஒன்றுபடுங்கால் உலகமாம். இதில் மண்ணையே குடமெனவும் பொன்னையே பூடணமெனவும், நூலையே ஆடையெனவும் வழங்குவதால் ஒரு பெயரிடலுக்குப் பொருளொன்று மில்லாமையின் பெயர் என்பது பொய்யாம். அவ்வாறே ஒரு குடத்திற்கு வயிறு பெருத்துக் கழுத்துச் சிறுத்து உருண்டை வடிவா யிருத்தலும் முன்னும் இல்லை. இனிமேலும் இல்லை இப்போதும் மண்ணைத்தவிர வேறிலாமையின் பொய்யாம். காரிய காரணங்கள் எப்போதும் ஒன்றேயாம். பத்துப்பலம் களிமண்ணை நிறுத்துப்பார்த்து, அதிலோர் குடம் செய்து நிறுத்துப் பார்க்கும்போதும், இரண்டுபலம் பஞ்சினால் ஒரு ஆடை நெய்து, பின்னர் நிறுத்துப் பார்க்கும்போதும், பத்துப் பலம் மண்ணும் இரண்டுபலம் பஞ்சுமே யிருக்கின்றது. அதிகமு மில்லை; குறைவும் இல்லை. ஆனால் தண்ணீர் மொள்ளுதல், குளிரைப் போக்குதல் முதலிய பயன் வேறுபாடோ அவைகளின் உறுப்புக்களா லாயதாம். அதுபற்றியே, ஒருவன் தனித்திருப்பனேல் வழிநடக்கு மொருவனுக்கு நடந்து செல்கின்ற வழியை மாத்திரம் காட்டுவதற்கு வல்லுந

ணுவான்; நாலைந்து பேர்கள் ஒன்றுகூடிலோ சிவிகைமே லெடுத்துக் கொண்டுபோய் அவனை அவ்வூரிற் சேர்த்து விடுவார்கள் அதுபோ லென்க.

இவ்வாறு உருவமும் பெயரும் பொய்யானதால் இவை யிரண்டும் மாயையின் கூறுகள். எஞ்சிய சத்து சித்து ஆனந்தம் என்னும் மூன்று கூறுகளும் என்று முண்மையின் பரமான்மாவின் கூறுகளாம். ஆதலின், இவ் வுலகத்தை மாயையின் கூறுடன் சேர்த்துப் பார்க்கில் அசத்தாகவும், சடமாகவும், துன்ப வடிவமாகவும் இருக்கும். அந்த மாயையின் கூறுகளை விலக்கி பரமான்மாவின் கூறுகளை மாத்திரம் உண்மை நோக்கத்தாற் காண்பார்க்கு எல்லாம் சைதன்ய சொரூபமேயாம்.

"முன்னு மவனி சித்து உலக மூன்றுஞ் சித்து நான் சித்து
நன்னுலான திசை சித்து நாட்டுகின்ற தெலாஞ் சித்தே"

என வசிஷ்ட முனிவர் முதலானோர்களும் இதையே கூறியுள்ளார்கள்.

அவ்வாறே,

"ஆனந்தத்தில் தோன்றி நிலைத்து இலயப்படலால் ஆனந்த வடிவமாம்" என மறைகளுங் கூறுகின்றன.

மற்றும், கானல் நீர் கிளிஞ்சில் வெள்ளி முதலியவைகள் போன்று, மித்தை யென்று கூறுவதற்கு மாயையின் கூறே பொய்யென்பது பொருளாம். அதுபற்றியே,

"பரிணும, தாப, சமஸ்கார துக்கங்களாலும் குணங்களின் மாறுபாட்டாலும் உலகனைத்தும் அறிஞர்களுக்கு துன்பமே" யென பதஞ்சலி முனிவரும் கூறியுள்ளார்.

"நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்கம் உலக மாதலின்",

என ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனாரும் கூறியுள்ளார்.

"பூத்தாரும் பொய்கைப் புனலிது"

எனத் தமிழ் மறையும் இயம்புகின்றது. இவ்வாறு பல நூல்களும் அநேகம் பெரியார்களும் பலவகையாகக் கூறுகின்றார்கள். இவைகள் எல்லாவற்றிற்கும் முன்னர் யாங் கூறியதே கருத்தாம்.

மற்றும், மனம் எவ்வாறு கருதுகின்றதோ அவ்வாறே தோற்று மியற்கை யுடையதுமா மிவ்வுலகம். எவ்வாறெனின், ஒவ்வொரு பொருளுங் காலத்தாலும், தேசத்தாலும், குணத்தாலும், பலவகையான பரிணாமம் (மாறுபாடு) அடைகின்றது. எப்படியெனின்? சந்தனம், வேனிற் காலத்தில் பிரியப்படினும் கார் காலத்தில் பிரியப்படவில்லை. அவ்வாறே, ஒரு தேயத்தில், ஒரு பொருள் பிரியப்படினும் மற்றொரு தேசத்தில் அப்பொருளே வெறுப்பா யிருக்கின்றது.

மற்றும், ஒருவனுக்கு இரண்டு மனைவிகளிருப்பரேல், அதில் ஒருத்தி கணவனுக்கு உகந்தவளா யிருப்பினும் அவள் சகக்களத்திக்கு மிக வெறுப்புடையவளா யிருக்கின்றாள். அஃதென்னைகொலோ? அது மனோபாவனையின் வேறுபாடேயாம். அஃதொப்பவே எல்லாப் பொருள்களு மென்றுணர்ந்துகொள்க.

மற்றும், தோலிரத்தம் எலும்பு இறைச்சி வடிவாகிய வொரு பெண்பால் ஒருவனுக்குத் தாயாகவும், மற்றொருவனுக்கு மாமியாயும், மற்றொருவனுக்கு மனைவியாயும், மற்

ருருவனுக்கு மகளாயும், தோற்றி அவ் வவர்களுக்கு அத் தன்மைய் நலத்தைக் கொடுக்கின்றாள். அதுபோல சித்தை நோக்கில் சகம் ஆனந்தமயமாம்; மாயையை நோக்கில் துன்ப மயமாம் என்றுணர்வீராக என்று சுவாமிகள் தமது திருக் கரத்தால் மணலி லெழுதிக் காட்டினர். அதைக் கண்ட இராசா பகதூர் டாக்டர் அவர்கள் இது ஏனைய துறவுபோல் போலித் துறவன்று. துறவிலும் உட்பற்று புறப்பற்றுக ளொழித்து பெருநிலையை யடைந்த பதத்திலுள்ளது எனத் தாமும் மதித்துக்கொண்டு தமது சுற்றத்தார்களுக்குஞ் சுவாமிகளின் பெருமையைக் கூறியதுடன் அவரைப் போற் றுமாறுங் கூறினர்.

வேடத்தால் ஒரு பெரியாரின் உண்மைநிலை யறிவதற் கரியதேனும், குரோதமின்மை, வைராக்கியம், பொறி புலன்க ளடக்கல், சமைதமை, சனங்களிடத்திற் பிரியம், லோபமின்மை, கொடை, அபயம், மதமின்மை, என்பன வாய ஞானிகளின் குணக்குறிகளாலும், அருளுடையோ ரைத் தவத்தில், குணத்தில், அருளில், அன்பில், இருளறு சொல்லினுங் காணத்தகு மாயினும் சுவாமிகள் மௌனமா யிருத்தலால் இவர் கேட்டுத் தெரிந்துகொண்டாரே யன்றி வேறல்ல. இவ்விடயத்தை யறிந்துகொள்ள வேண்டுமென் னும் வேட்கையுடைய பக்குவியுமாவர்.

இவ்வாறு, சிவப்பிரகாசத்தால் விளங்கப்பட்ட அந்தத் தோட்டத்திற்குத் தலைவராகிய செங்கல்வராய நாயகரும், அவரைச் சார்ந்தோர்களும் அது முதற்கொண்டு கடைசி வரையில் சுவாமிகளிடத்தில் பேரன்புடையவர்களாய்ப் பணி செய்து வந்தனர். எஞ்சுறு நிமல ஞானமதுற்று வானும் வையமும் வந்து தாள் வணங்குதற்குரியவருக்கு இவர்கள் பணி செய்தது வியப்பன்று மென்க.

அவ்வாறே, இராசா பகதூர் டாக்டர் அவர்களும் அதிலிருந்து சுவாமிகளிடத்தில் ஆசிரிய ரென்னும் உரிமைபூண்டு இடையறாது வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையாகிய அத்துவித இரகசியங்களைச் சேட்டும் பஞ்ச கோசங்களைத் தானல்லவெனத் தள்ளியும் எல்லாவற்றிற்கும் சாட்சியாயிருக்கின்ற ஆன்மாவே தானெனத் தெரிந்துகொண்டும் ஐயங் திரிபற சுவாமிகள் சொன்ன நிலையைக் கைவிடாது அநுட்டித்து வருகின்றனர்.

"சொன்னவை கைக்கொள்ளாது விநோதத்தாற் கேட்ப
வர்க்குச் சொன்ன வார்த்தை, பன்னியுமோர் பயனுகா"

என்றாற்போல குருமொழியே பெருமொழி யென்றும், அதுவே ஒரு மொழி யென்றும், அவ்வொரு மொழியே பல மொழிக்கும் இடங்கொடுக்கு மென்றும் உணர்ந்து சுவாமிகளின், ஆமை, மீன், பறவைபோன்ற கடைக்கண் பார்வை வடிவ அனுக்கிரகத்தையும் பெற்று மனங் தடுமாறாது "நிலையிற் றவறேல்" என்னும் பெரு மொழியைக் கருதியும், தவறினரை நோக்கி யெழுந்த

திருக்குறள்.

"தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை"

என்ற தமிழ் வேதவாக்கை யாராய்ந்துந் தத்துவமசிப் பொருளை யுள்ளவாறுணர்ந்து ஆன்மா பரோட்ச முடையவராய்ப் பொறுமையினாற் பூமியைப் பழித்தும்,

திருக்குறள்.

"இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்பதைத் தனக்கோரணியாகக் கொண்டும் வேண்டாமைச் செல்வத்தான் மனந் திருப்தி யடைந்தும் பெற்றதுவே கொண்டமைந்து பேறிழவிற் கொல்காதே என்று மனங் களிப்புற்று இல்லறத்திலுள்ள நல்ல ஞானியாயிருந்து வருகின்றனர். ஞான மடைதற்கு சாதி வருண முதலியவைகள் வேண்டற் பாலனவன்று; அதுபற்றியே,

> "பந்தமனை துறந்து சிலர் அதிதிகளாயிருந் தடைவர்
> பரமஞானம். அந்தணர் மன்னவர் வணிகர் சூத்திரரா
> யிருந்து சிலரடைவர் ஞானம்"

என கைவல்ய நவநீதம் கூறுகின்றது.

சுவாமிகள் குழந்தை முதற்கொண்டு பெரியோரீறாக எல்லா மக்களிடத்தும் பேரன்புடையவர் ஆயினும் இந்த இராசாபகதூர் அவர்களிடத்தில் வைத்திருந்த அன்பிற்கு ஒரு அளவில்லை; இவர் சுவாமிகளின் பூரண அருளைப் பெற்றவர். பின்னர் சிலதினத்தில் பல அன்பர்களின் வேண்டுகோட் கிணங்கி வாக்கு மௌனத்தை விடுத்து கரண மௌனம், மனோ மௌனம் முதலியவைகளைக் கைக்கொண்டு முன்னிருந்த சமாதியி னிலையிலும் மேம்பட்ட நிலையை யடைந்து, சமாதியினின்று மனோவிருத்தி வெளியி லெழுந்தபோது தன்னை நாடிவந்த அன்பர்களுக்குத் தத்துவ நெறியை யுபதேசித்தும் அத்துவித நிலையை எடுத்துப் போதித்தும் நடந்து காட்டியும், அருள்புரிந்து வந்தனர்.

மற்றும் இராசா பகதூர் அவர்கள் பெரிய வல்லுநராய் அரிய பெரிய வைத்திய சிரோமணியாய்ப் பல்லோர்களுக்கும் எண்ணிறந்த அடியார்களுக்கும் பயன் கருதாது மருந்து கொடுத்து உதவிசெய்து வருகின்றனர். இவர், சுவாமிகளிடத்திலிருந்த அன்பு போன்றே, எல்லா அடியவர்களிடத்தும் ஒரே விதமாகிய அன்புடையவர். இவரது குணங்களை

நோக்குங்கால் ஜனகராசனிடத்திலும் இத்தகைய அரும் பெருங் குணங்களும் இருந்தனவோ? இல்லையோ? என ஐயப்பாடெழும்.

இந்த இராசா பகதூர் அவர்களே சுவாமிகள் விதேக கைவல்லிய மடையுந் தருணத்தும் வேதாந்த சாரத்தின் சுவையாகிய அரிய பெரிய இரகசியப் பொருளை யநுக்கிரகிக் கப் பெற்றனர். இவ்வாறு இராசா பகதூர் அவர்களும் அவரைச் சார்ந்த செங்கல்வராயர் தோட்டத்தின் தலைவர் முதலியோர்களுஞ் சுவாமிகளின் கடைசிக்காலம் வரையும், ஒரு பிடி சோறிடல் ஒக்குமே, என்றபடி சுவாமிகளுக்கு இடையறுது திருவமுது தளிப்பதுடன் அன்புடன் வழிபாடுசெய்து கொண்டு சுவாமிகளின் திருவுளப் பாங்கின்படி நடந்துவந்தனர். இந்த இராசா பகதூர் டாக்டர் அவர்களே சுவாமிகளின் முதன் மாணுக்கர் என்பதில் ஐய மொன்று மில்லை.

இவ்வாறு சுவாமிகள் செங்கல்வராய நாயகர் தோட்டத்திலிருந்து கொண்டு உலகிற்கு அருள்புரிந்து வருங்கால், எத்துணை யிடையூறு வரினும், எண்ணிலாத இழிவு வரினும், உயிர்துறத்தற்குரிய உலைவுவந்த விடத்தும் அரைக்கணமேனும் ஒரு சிறிதும் வெகுளாத்தன்மையை யடைந்து,

திருக் குறள்.

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கண மேயுங் காத்த லரிது"

என்னும் வாக்கையும் மறுத்து விட்டனர். மறைமுடி கூடிய நிறை பரம்பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து அனுபவித்தவரா யிருப்பினும் இம் மகானுக்கு ஒரு அநுபவ மாத்திரம் இல்லை யென்று யாம் உண்மை கூறுவோம். இது உல

கெலா மறிந்ததேயாம். அஃதென்னையோ வெனின், பல நூல்களில்,

### திருக் குறள்.

“ சினமென்னுஞ் சேர்ந்தாரைக்கொல்லி யினமென்னும்
ஏமப் புணையைச் சுடும் ” எனவும்.

“ நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற ”

“ கோபமிக்க தேவராறு வார் ”

என்பது முதலாக பலவகையாய் வெகுளியைக் கேட்டிருந்தனரே யன்றி அதை யிவர் இறுதிக்காலம் வரையிலும் அநுபவித் தறியார் என்பதாம்.

மற்றும் கோபத்தாற் சாபமிட்டு மாதவர்களாயினுர் தலைமிக்க தந்தவ மிழப்பர்கள். தமது கோபஞ் செல்லாவிடத்துஞ் சினத்தை யடைக்குவோரை ஈண்டுக் கோபமடக்கினேரென்னற்க. செல்லிடத்துஞ் செல்லா விடத்தும் சினமெனும் பாம்புதொடாத சிவப்பிரகாசப் பெருமானுர்க்கு கோப மென்னுஞ் சொல்லுக்குப் பொருள் பிறர்மாட்டுக் கண்டுணர்ந்த பெற்றியையே விதந்து கூறினு மாதலின், இருடிகள் முனிவர்கள் பலவகையாக வெகுண்டதால் இந்திரன்போன்று துன்புற்றவரும் கௌதமர் போன்று கோபித்தவரும் பல்லோர்களிருப்பினும் இத்தகைய வெகுளிகள் ஒருவாறு பிறர் நலத்திற்கு அனுகூலமா யிருப்பினும் நமது சிவப்பிரகாசச் செம்மலைப்போன்ற தத்துவ ஞானிகட்கு வேறுன பிறரிடத்தின் கண்ணேயே கருத்துடையதெனக் கொள்ளுதலே அறிவுமிக்குடையாரின் மதியின் சதுரப்பாடாம். அது பற்றியே,

“ வானிலே மரமுளைக்கினும் முனிவு என்கண் வாரா ”

என்ற சிகித்துவசனது உண்மையுரையும் இதையே வற்

புறுத்துகின்றது. இவ்வாறே, வெஃகல், வெகுளல், பொய்ம்மை, காமம், மோகம் முதலியவைகளின் அனுபவம் இக்குணக் குன்றாகிய பெரியாருக்கு சிறிதும் இல்லையென்றே கொள்ளற்பாலதாம். அவ்வாறே யாமுங் கண்டாம்.

## சுவாமிகட்கு குடிசை யமைத்தல்.

இவ்வாறு சுவாமிகள்,

"அன்னவன் றிரு பொன்னடி கரியதாய்
அருந்தவஞ் செய் நெஞ்சே
பின்னை முன்னவ னுலகறிந் திறைஞ்சமா
பெருமை செய்குவன்"

என்ற திருவாக்கின்படி உலகெலாம் இறைஞ்சுமாறு உண்மைத் தவம்புரிந்து கொண்டிருக்குங்கால், அத்தோட்டத்திற்குத் தலைவர், சுவாமிகள்,

"நெருப்பால் வெந்தழியாது நீரால் நெக்குருகாது"

எனக் கண்ணபிரான் கூறியபடி ஆன்மாநு சந்தானம் பண்ணிக்கொண்டு சிகித்துவசன், புசுண்டர் முதலியோர்களைப் போல் ஞான நன்னிட்டையிலிருந்து, மழை, வெய்யில், குளிர் முதலியவைகளைப் பொறுத்துக் கொண்டு தவமாற்றி வருங்கால் ஓலையால் ஒருசிறிய குடிசை யமைத்துக் கொடுத்தனர். அதைக்கண்டு சுவாமிகள்,

### திருக்குறள்.

"புக்கில் அமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு" எனவும்,

### சோணசைல மாலை.

"நீங்கருந்துயர்செய் வளிமுதன் மூன்ற னிலையுளேன்"

எனவுங் கூறியவாங்கே ஒன்றுக் குடியாக இருக்கின்ற எமக்கு

ஒரு இடமும் வேண்டுமோ? முன்னொரு பொழுது, பிரமன், விட்டுணு முதலியோர்களும் பலவகை முனி ரிஷிகளும் யாமே பேராயுள் உடையோம் என ஒவ்வொருவரும் இறு மாந்திருந்ததுபற்றி ஆயுள் குறைவு நிறைவு என்பதில் வழக் குண்டாகி, அதைத் தெளிவான் வேண்டி உரோமரிஷி பாற் செல்ல, அவர் ஒரு புல்வேய்ந்த குடிசையி லிருந்து தவ மாற்றி வருவதைக்கண்டு, பெரியோரே, தாங்கள் நிலையற்ற இக்குடிசையி லிருத்தல் எற்றுக் கென்றனர். அதைக் கேட்டு அவர் மற்றென்னை வேண்டும்; இவ்வுடம்பு நீரிற் குமிழி போன்றதன்றோ ?

திருக் குறள்.

" உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு "

என்பதும் பெரியோர்களின் துணிபாமல்லவா ?

தாயு மானர்.

" இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்ப ரென்று
எண்ணவுந் திட மில்லையே "

திருக் குறள்,

" நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு "

என்ற சுருதிப் படியும் இக்குடிசையே சாலச் சிறந்தது என்ற னர். அதைக் கேட்டவர்களான அமரர்களும், அருந்தவர் களும் இது என்னை ஓர் வியப்பாக இருக்கின்றதே. இவர், ஒருயுக மொன்றிற்கு ஒரு உரோமங் கழிதல்பற்றி உரோம ரிஷியென வழங்கப் பெற்றவரா யிருந்தும் இங்ஙனம் இயம் புவரேல் நமது கதி என்னை? என்னை? யென்றுவெட்க

மடைந்தனர், என்பது கதையாமாதலால் அதுவும் வேண்டா மென சுவாமிகள் மறுக்க, அன்பர்கள் பலவாறு சுவாமிகளை வேண்டிக் கொள்ளவும் அவர்களின் வேண்டுகோட்கு ஒரு வாறு இசைந்து,

பாகவதம்.

" சுற்றின் மேவிய தொல்கறை யான்புரி
புற்றின்மேவு புயங்கமென் றோர்ந்தபின்
உற்று யானு ஞற்றே னென் றமர் தொறும்
மற்றுளோர்செய் மதிற்குகை வைகுவன் "

என்று தத்தாத்திரயர் கூறியதைத் தழுவி அக் குடிசையில் தவமாற்றி வந்தனர்.

துறவு.

" பொருந்திவாழிட மொன்றுகிற் பொருந்திடும்
பற்றென்றெண்ணி யிருந்திலன் ஓரிடத்தும் "

என்றதோ கேவலந் துறவைப் பற்றியதாம்.

## சுவாமிகளின் போதனையின் சிறப்பு.

சுவாமிகள் இவ்வாறு,

கந்தரநுபூதி.

" சும்மா விருசொல் லறவென் றலுமற்று
அம்மா பொருளொன்று மறிந்தி லனே " எனவும்.

வைராக்கிய சதகம்.

" நீ மெய்ஞ்ஞான நன்னிட்டை சாருதலரி தெனவும்
நெஞ்சமே சற்று ஓய்விலாது செய் தியான மாதிக
ளெளிதெனவு முன்னு நின்றாய் "

எனவுங் கூறப்பட்ட பாவனாதீத மெய்ஞ்ஞானச் சமாதிநிலை கைவந்தவரேனும்,

## வாசிட்டம்.

"திகழ்மனம் போய் தற்பதத்தைத் தெளியுமட்டுந்
தேசிகநூல் செல்வழியிற் செல்லுவாயே"

என்றதற்கியைய, வாசனுவடிவ ஞானமாத்திர மிருக்கின் திருட்ட துன்பம் அநுபவிக்க நேருமென்று கருதியும் விருத்தி வடிவத்தையும் வேற்றுச்சாதி விருத்தியற்று ஓரினப் பெருக்காகிய மனோவிருத்திப் பெருக்கையு முண்டாக்கி சீவன்முத்திச் சுகத்தை நன்கனுபவித்தற் பொருட்டும் சமாதி நிலையையே பழகி வந்தனர். விருத்தி வெளிவந்த காலத்தில், தமது மனோலய நிட்டைக்குச் சாதகமாய் வேதாந்த சாத்திரங்களைப் பல்லோர்க்கு மனத்தில் நிலைக்குமாறு இராம கிருஷ்ண பரமஹம்ஸர் போன்று அநுபவ நிலையிற் றோன்றிய பெரிய யுத்தியோடும் போதித்து வந்தனர். போதிக்குங் கால் அதைக்கேட்ட ஆண்பாலார் பலரும் பெண்பாலார் பலரும் தத்தமக்குரிய கருமங்களையு மறந்து செயற்பாலனவாகிய செய்கைகளையு மறந்து வீடு மறந்து நாடு மறந்து தேக மறந்து போக மறந்து கேட்டன் மாத்திரத்தானே உண்மை விளங்கி ஆன்மாவில் மனம் இலயமடைந்து செவிவாயாகக் கேட்டுச் சிந்தித்துக்கொண் டிருப்பார்கள். சுவாமிகள் மங்களவாரம் பாடஞ் சொல்லி வருவதையே நியமமாக வைத்திருந்தனர். இறுதிப் பிறப்புற்ற இவ் வடிகட்கு, இளமை தொட்டு, இயலறிவது இசையறிவது இனமறிவது என்பவைகள் ஆன்மாவினும் அயலறிவதா மாதலின் பிரியமிராது; போதிக்குங்காலும் மன வொருமையுடன் காய மசையாது கேட்போர்களின் உள்ளம் ஒருப்படுமாறு அநுபவத்திலெழுந்து இன்பத்தளைந்த இன்சொல்லால் இனிது போதிப்பார். தாம் கற்றதை யெடுத்துக்கொண்டுப் புகழின் பொருட்டுத் தம்மை யடுத்த அன்பர்களுக்குப் போதித்து மயங்க

வைப்பவர் போன்றும், வெல்லாமல் எவரையும் மருட்டுவதற்குச் சொற்களை அடுக்கடுக்கா யமைத்து அதனால் கேட்டோர் இவர் விடாது பேசினர்; மழை பொழிந்ததுபோற் பொழிந்தார்; என்று பிறர் சொல்லுமாறு செய்வார் போன்றும், தமக்கநுகூல மானவர்களைப் புகழ்ந்தும் பிரதிகூல மானவர்களை இகழ்ந்தும் பேசுவார் போன்றும், பணம் வாங்கிக்கொண்டு மனம்போனவாறு, கொடுக்கிலா தாரையுந் தருமனே யென்று போற்றுவார் போன்றும், வீண்கதை வளர்த்து மாண்பொருள் பறிக்கும் வித்துவான் போன்றும், காலம், சமயம், பக்குவம், கருத்து முதலியவைகளை யறியாது இலக்கண நலம்பேசி புலக்கணில் பொருளீவாரைப் பார்த்து கலக்கமீக்குண்டாய் கேட்டார் மயங்க நாட்டார் புகழ வீட்டார் பணியப் பேசுவார் போன்றும், அதிப் பிரசங்கஞ் செய்யாது, பக்குவமறிந்து முக்கியந் தெரிந்து, மக்களும் நலம்பட தக்கணு மூர்த்தியிற் சின்முத்திரை காட்டி அஞ்ஞான மோட்டி மெய்ஞ்ஞானந் தீட்டி ஆன்மாவில் மனம் நாட்டி, உண்மைநிலையை யடைய வேண்டுமென்று சாதித்தருளுவர். அதைக்கேட்ட எண்ணிறந்தோர்கள் மனமிறந்து மெய் மறந்து ஞான நிட்டையி லொருப்பட்டவர்களாகி விடுவார்கள். புணர்ந்த பாவமெல்லாம் பரிபூரணம் உணர்ந்த ஞானி விழிபட ஓடுமே என்ற திருவாக்குப்படி பார்வை மாத்திரத்தால் உலகத்தைப் பவித்திரப்படுத்த வல்லார்க்கு உபதேசத்தாலும் ஞானத்தாலும் புனிதப் படுத்துகின்றதென்பது பெரிதாங் கொலோ! தொண்டர்தம் பெருமையைச் சொல்ல வொண்ணுமோ!

திருக்குறள்.

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று" என்றவாறு

இவர் மகிமை எம்மாற் கூறற் கௌிதாமோ? ஆகாது.

அக்கால் டாக்டர். மாசிலாமணி முதலியார் வந்து சுவாமிகளைச் சரணடைந்து திடவைராக்கியத்துடன் ஞானப்பியாசஞ் செய்துகொண்டுப் பல ஞானநூல்களைச் சுவாமிகளிடங் கேட்டுக்கொண்டும் பெருந்துறவி போன்றிருந்தனர். பின்னர், சுவாமிகளின் அநுக்கிரகத்தால் வைத்தியமுறை கைவந்ததுடன் பெருநல முடையராய் அறிவிற் சிறந்தாராய் விளங்குகின்றனர்.

## தாண்டவராய முதலியார் சரணடைதல்.

அக்கால் சுவாமிகட்கு எல்லா வகையானும் சொல்லமுடியாத பெரும்பணி செய்து வந்தவர் எல்லையற்றோராவர். அவர்களில் முக்கியமானவர்கள்: வ-தாண்டவராய முதலியாரும், அவர் மனைவியார் அங்கம்மாள் அவர்களும், குடும்பத்துடன் சோழபுரம் கந்தசாமி முதலியா ரவர்களும், குடும்பத்துடன் சுந்தர முதலியார் அவர்களும், மங்கலம் - துரைசாமி முதலியா ரவர்களும் ஆவார்கள். இவர்களில் முக்கியமானவர் தாண்டவ்ராய முதலியாரும் அவர் மனைவியாரும் ஆவர். இத் தாண்டவராய முதலியார்,

தாயுமானர்.

"அன்பர்பணி செய்ய வெனை யாளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும்" எனவும்,

தேவாரம்.

"கற்றல் கேட்டலுடையார் பெரியார்
கழல் கையாற் றொழுதேத்த" எனவும்,

சசிவன்ன போதம்.

"இறவி லெப்பதமும் பெறவேண்டிலேன் என்றும்
"பிறவி வேண்டுவன் நின்றிருப்பணி செயப் பெறினே"

எனவும் கூறியுள்ள பெரியார்களின் அரிய பெரிய திருவாக்

கின்படி சுவாமிகளைச் சரணடைந்தவர். இவரது மனைவியாரும் காரைக்காலம்மையார் என்று சொல்லுமாறு நற்குணக் கடல் ஆனவர். இவர்கள்,

தேவாரம்.

“மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார்தமை யமுதுசெய் வித்தல்”

என்று கூறும் தமிழ்ச்சுருதி வாக்குப்படி பெரியார் பணியே அரிய முத்திப் பேறெனக் கொண்டவர்கள். இவ்வாறு அடியார் பணியையே செய்து முடியாப்பவத்தை முடித்து பிடியாப் பெரும்பதம் பிடித்து நொடியிற் பற்றெலாந் துடைத்து முடிவில் முத்தியை யடைந்தவர் பல்லோர்களாவர்.

அதுபற்றியே,

“அடியா ருறவன்றிப் படிமீதில் வேறுபயனில்லை” என்றும், “நல்லாரிணக்கமு மல்லாது வேறு நிலைபுளதோ” என்றும் பெரியார் கூறியுள்ளார். அங்ஙனமே, “தேசிகன் றிருவுள்ளமே செய்குவான்” என்று மற்றொரு சுருதியும் கூறுகின்றது. ஆசிரியர் பணி யொன்று கொண்டே அரிய முத்தியை யடையலாம், என்று குருகீதை கூறுகின்றது, இவ்வாறே எண்ணிறந்த பிரமாணங்கள் இருக்கின்றன.

பெரியார் பணி செய்து பேறடைந்தது ஒரு வியப்பன்று. என்னை? உண்மைச் சிவனடியாரின் திருப்பெயரைச் செபிக்கினும் முத்தி கை கூடும் அற்றாகலினன்றே,

நால்வர் நான்மணி மாலை.

“உற்றா னலன்தவந் தீயினின் றானல னூண்புனலா
யற்றா னலன்றிரு நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியு மேயென்றுந் துன்பில்பதம்
பெற்றான் .... .... .... .... ”

என்றார் சிவப்பிரகாசக் கவிச்சக்கரவர்த்தியாரும். இது கொண்டே குருநாமஞ் செபி யெப்போது மென்றும் சற்குரு நாதன் பாதம் தப்பிடான் முத்தனன்றே என்றும் பலநூல் களுங் கூறுகின்றன.

## சுவாமிகள் பொதிகைமலைக் கேகல்.

இவ்வாறு பெரியாரின் தொண்டையே பேறெனக் கொண்ட அத்தாண்டவராய முதலியாரும் அவர் மனைவி அங் கம்மாள் அவர்களும் சுவாமிகட்கு மனமொழி மெய்களாற் பணிசெய்து உடல் பொருளாவியை யொப்பித்து அங்குவரு மடியவர்களுக்கும் எங்நேர மாயினும் எவ்வளவு அடியார்க ளாயினும் சிறிதும் மனது சலியாது அறுசுவையுடன் அமுது சமைத்துத் தாமே கொண்டுவந்து அமுதருத்தல் முதலிய பணிகளை அவர்களுடைய வாழ்நாள்வரை தொடக்கத்தி லிருந்த அன்பினும் மிகுந்த அன்புடன் செய்துவந்தனர். அரிய துறவையும் பெரிய தவத்தையும் உரிய தத்துவ ஞானத்தையும் இன்ப நிலைமையுங் கைக்கொண்ட சுவாமிகள் இவ்வாறு பல ஆண்டுகளாக சூளை செங்கல்வராய தோட்டத் தில், ஞானயோகம் புரிந்து, தீனலோகத்தைக் காத்து, மோனயோகந் துய்த்து, தவவலி, அருள்வலி, ஞானவலி, மனவலி முதலியவைகளுடன் விளங்கிவருங்கால், எண்ணி றந்த மாணவர்களும், அன்பர்களும், பக்தர்களும், நண்பர்க ளும், தம்மைச் சூழ்ந்துகொண்டு இடைவிடாதிருந்து ஞான நூற் கற்று சிரவணஞ் செய்துகொண்டு வருவதால் களிப் புடையரேனும் பாவனாதீத ஞானசமாதிக்குச் சிறிது தடையா யிருக்கின்றதென்று கருதி, நிமிடமும் பாவனை நினையேல்,

## வாசிட்டம்.

"அண்டமெண்டிக் கெங்கண்ணு மடங்கச் சூனியமதாகக்
கண்டுகொண்டிருக்கும் வண்ணங் கருத்தையு மறவே விட்டால்
அண்ட மெண்டிக் கெங்கண்ணுமாய் நின்ற வானந்தத்தைக்
கண்டுகொண்டிருக்கும் வண்ணங் கணத்தில்வந் துதிக்கு மன்றே"

என்றவாறே நிருவிகற்ப சமாதியை யடைய விரும்பி ஒருவருக்கும் தெரியாமலே பொதிகை மலைக்குச்சென்று அங்கு பொதிகைமலைச் சாரலின் கண்ணுள்ள அகத்தியர் ஆச்சிரமத்திற் கருகில் ஒரு மரத்தடியில் ஞான சமாதியைப் பழகிக்கொண்டு இதுவே நமக்குக் கைவர வேண்டியது என்னும் ஊக்கத்துடன் தீவிரமாய் மனோலயத்தை யடைந்து தவமுந் தவமுடையார்க்காகும் என்று முப்பிறப்பின் புண்ணியத்தால் ஞான நிட்டையைக் கைகூடுமாறு செய்துகொண்டு அங்கு மூன்று வருடம் இருந்து விட்டனர். பின்னர், இச் சென்னையிலுள்ள மாணவர்களும், மாணவிகளும், அன்பர்களும் தாயிழந்த சேயைப்போலுமாம். பசுவிழந்த கன்றைப் போலும் ஏங்கிக்கொண் டிருப்பதைக்கண்ட இத் தாண்டவராய முதலியார் சுவாமிகளைப் பலவாறு போற்றி வணங்கிப் பூசித்து அழைத்துக் கொண்டுவந்து சேர்த்தனர்.

## சுவாமிகட்கு ஆசிரமங் கட்டி வைத்தல்.

மற்றும், சுவாமிகள் வசித்துவந்த பூந்தோட்டத்தில் மகிழ மரத்தடியில் ஞானமணங் கமழ தத்துவஞானம் சென்னையிற்றிகழ, அன்பர்களின் உள்ளக் கமலங்கள் விரிய, தாண்டவராய முதலியார் ஒரு சிறிய ஆசிரமமொன்று செய்வித்தனர். சுவாமிகளும் ஞானயோக நிலயத்தில் ஐம்புலக் கதவுகளை யடைப்பது போன்று அந்நிலயத்தின் கபாடத்தை எப்போதும் அடைத்துத் தாளிடுமாறு இராசாபகதூர் முதலிய அன்பர்களுக்கு ஆணை கொடுத்துவிட்டு உள்ளிடத்தில் சமாதியி

விருந்து வந்தனர். அன்பர்கள் சில சமயம் சிறிது பால் மாத்திரம், அல்லது பால் பாயாசம் மாத்திரம் சிறிது கொடுப்பர். உச்சிப்போதில் ஒருவேளை கபாடத்தைத் திறந்து வைத்து விட்டுப் போவர். சிலதினம் அவ் வுணவுகளை யருந்திவிட்டு வெறும் பாத்திரமா யிருக்கும்; சிலபோது ஆறுதினம் ஏழு தினம் நாற்பத்தெட்டுநாள் வரை உணவொன்று மேற்காமலே சமாதியில் நிலைத்திருப்பர். ஆனால் அன்பர்கள் நாடோறும் பழையவுணவை யெடுத்துக்கொண்டு புதிய வுணவுகளை வைத்துவிட்டு வருவார்கள். அப்போது சுவாமிகளை ஒரு சர்ப்பந் தீண்டிற்று. காமவிஷம் ஏறாதவர்க்கு பாம்புவிஷ மேறுமோ? யாரிடத்தும் ஒன்றுஞ் சொல்லாது சுவாமிகள் சிறிதுநேரம் தண்ணீரில் நின்றனர்; மற்றொன்றுமில்லை.

ஒருநாள் சுவாமிகளிடத்தில் ஒரு பெண்பால் வந்து பணிந்து சுவாமிகளை நோக்கி, சுவாமின்,

"என்கொங்கை நின் அன்பரல்லாதார் தோள்சேரற்க"

என்றும் ஒரு திருநெறித் தமிழ்மறை வாக்கியத்திற்கு உரை கூறி யருளல் வேண்டும் எனப் பிரார்த்திக்கவும், அதற்குச் சுவாமிகள், அம்மா, உள்ளத்தின்கண் ஒரு நினை வெழுந்து மற்றொரு நினைவு எழுகின்றதற்கு முன் உள்ள இடைநிலையில் நினைவற்று மனதை நிறுத்தற்பாலது என்பது பொருள். மனதிலுதிக்கின்ற இருவகை நினைவிற்கே இரு கொங்கை என்பது பொருளாம். இரத்தம் திரண்டு விம்மிச் சீப்பாய்ந் தேறி யிருக்கின்ற மாமிச மயமான தனங்களன்று அம்மா, அவ்வித எண்ணத்தை இன்று தொட்டு விட்டு விடட்டும். அம்மா, விட்டு விடட்டும் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

## பௌர்ணமி பூசைவிழா.

பின்னர், தாண்டவராய முதலியார் முதலிய அன்பர்கள் சுவாமிகட்கு பௌர்ணமி தினத்தில் ஆராதனை செய்ய நினைத்து சுவாமிகளிடம் பிரார்த்திக்க, சுவாமிகள்,

"வையினும் வாழ்த்தினும் மலர்கொண் டேத்தினும்
வெய்யவரா விடைவீழ நூக்கினும்
எய்யினு மெறியினும் யாது செய்யினு
நைவொடு மகிழ்வில ஞானிசிலமே"

என்ற பெரியார் திருவாக்கின் படியும்,

சாந்தலிங்க சுவாமிகள்

"தனைநனியிரந்து வருந்தி மற்றொருவன் சந்தனமாதிய பூசி
இனமலர்மாலை புனையினும் முனியாது இழுத்து வைதடித்துதைத்
பினமல மாதி பூசினு மன்னேன் [துடலில்
பிரியமப் பிரிய மொன்றின்றி"

என்னும் ஆன்றோருரைத்த வாங்குந் திடஞானி நிலையிலிருக்குஞ் செல்வராதலின் சுவாமிகள் மறுமொழி பேசாதிருந்தனர்.

ஈண்டோர் ஐதிகக் கதையுமுண்டு; அதாவது:— முன்னொருகாலத்தில் அடியார்பக்தி சிவபக்தி மிகுந்துள்ள தனிகரொருவர், தனது பங்களாவில் ஒரு பெரியாரை வருந்தியழைத்துக்கொண்டுவந்து அமர்த்தி அப்பெரியாருக்கு அவர், தாமே நாடோறும் நியதமாய் காலையில் வெந்நீர் வைத்து நீராடச்செய்து இனிய வுணவையும் தாமே சமைத்து அப் பெரியாருக்குப் பலவகை யுபசாரத்துடன் படைத்து அன்போடு உணவருத்தி முடிந்தவுடன் வணங்கி அப்பெரியாரை நோக்கி, ஐய! குரு சீடர்களின் இயற்கை யாது? என வினவுவர்.

அதற்கு அப் பெரியார் பின்னர்ச் சொல்கின்றேன் என மறு மொழி கூறுவர். இவ்வாறே பலநாள் கழிந்தது. ஒருநாளிரவில் அவ்வூரில் கள்ளர் பலவிடங்களில் மிகுந்த திரவியத்தைத் திருடிக்கொண்டு பலர் கூட்டமாய் வந்து அப் பெரியார் இருக்குந் தோட்டத்தில் பங்கிட்டுக் கொண்டனர். அப் பெரியார் ஒன்றும் பேசாது பார்த்துக்கொண்டு தமது சிந்தையில் இருந்தனர். பின்னர், அக் கள்வர்கள் யாரோ ஒரு பரதேசி நல்லவனா யிருக்கின்றான் இவனுக்கு எல்லாருங்கூடி ஒரு நகை கொடுத்தல் வேண்டுமென்று கருதி ஒரு பொன்னணியை அப்பெரியார் கழுத்தி லணிந்துவிட்டுப் போய்விட்டனர். இஃ திங்ஙனமிருக்க, ஊருக்குள் கள்வர்வந்தது தெரிந்து, பலர் திரண்டு சுற்றிப்பார்த்துக் கள்வர்கள் சென்ற அடிகளைக் கண்டுபிடித்து இப் பெரியார் இருக்குந் தோட்டத்தைக் கண்டு பார்க்க ஒரு திருட்டு நகையை கழுத்திலணிந்து கொண்டிருந்த அப்பெரியாரை இவனே திருடன் என உதைத்தும் அடித்தும் உடம்பில் மலம் முதலியவைகளைப் பூசியும் மற்றும் பலவகையாய்த் துன்புறுத்தி விட்டும் போய் விட்டனர். பின்னர் எப்போதும் போல் அவ் வன்பர் வந்து பார்த்து மனதில் அணுத்துணையேனும் மாறுதலின்றி அன்று மிகுதியாய் வெந்நீர்வைத்து அப்பெரியாருக்கு நன்கு ஸ்நானஞ் செய்து வைத்து இன்னடிசில் சமைத்து அவரை உண்ணும்படிச் செய்து முன்போற் பணிந்து, குரு சீடர்களின் தன்மையாது? என முன்போல் வினவினர். அப்போது அப் பெரியார், அன்ப, இதுவே குரு சீடர்களின் தன்மை யென்றருளினர். அதாவது, என்னைப்போ லிருக்கின்றவனே ஆசிரியன். நின்னை யொத்தவனே மாணவன் என்று தெரிவித்தவாறும். ஈண்டுச் சிவப்பிரகாசத் திடஞானச் செல்வரும், அன்புமுதிர்ந்த வன்றொண்டருள் ஒருவராகிய தாண்டவராய

முதலியாரையும் மேற்கூட்டிய நிலையிலிருக்கின்றவர்களெனக் கருதுவதற்கு இடமுண்டென்பது காண்க.

பின்னர், பேசாதிருக்கவே என்கடன்பணி செய்துகிடப்பதே எனக்கருதி பௌர்ணமித்தின மிரவில், சுவாமிகட்கு பலவித அபிடேகம் ஆராதனை நைவேத்திய முதலிய சோடசோபசார பூசைகளையும் நன்கு செய்து, தட்சிணாமூர்த்தியட்டகம் ரிபுகீதை முதலிய பாராயணங்களும் மற்றும் பல பசனைகளும் நடத்தி அன்பர்களுக்கு அன்னமு மளித்தனர். அவ்வாறே ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் செய்து வந்ததுடன் சித்திரைத்திங்கள் பௌர்ணமியில் அதை ஒரு பெரும் விழாவாகக் கொண்டாடி வந்தனர். இவ்வாறே தாண்டவராய முதலியார் சுவாமிகள் விதேக கைவல்ய காலம்வரை செய்து வந்தனர். மற்றும் சில அன்பர்களும் அவ்வாறே பௌர்ணமிபூசை நடத்தி வந்தனர். அப்பூசை இதுகாறும் சில அன்பர்களால் நடந்தேறி வருகின்றது. இத் தாண்டவராய முதலியாரே சுவாமிகட்குப் பலவகையானும் பொருள் வகையானும் அடிமை வகையானும் உலக நன்மையின் பொருட்டு சுவாமிகள் கொண்டமனக் கொள்கையைப் பெரும்பாலும் முடித்து வைத்தவராவர். இதுபோன்றே சீனிவாச நாயகரும் முன்னின்று முடித்து வைத்தவராவர்.

## இளையனூர் வேலூரில் சுவாமிகள் அபிடேகம்.

பின்னர் சுவாமிகளின் நண்பரும் அன்பர்களுள் கௌதமர் போன்ற தார்க்கிக நூற் பயின்றவருமாகிய இளையனூர் வேலூரிலுள்ள முருகேச முதலியார் தமது ஊருக்குச் சுவாமிகளை யழைத்துக் கொண்டுபோய் மூன்று தினம் சுவாமிகட்கு அபிடேக ஆராதனைகள் செய்ததுடன் பல வடியார்களுக்கு அன்னமு மளித்து,

திருக்குறள்.

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப்படும்"

என்றருளியபடி மூன்றுநாள் பல அறிஞர்களைக் கொண்டு உபந்நியாசமும் நடைபெறுமாறு செய்தனர்.

ஸ்ரீநிவாச நாயகர் அவர்மனைவி தாயாரம்மாள் என்பவர்கள் சுவாமிகளுக்கு அண்மைத் தொண்டர்கள். இவர்கள் சுவாமிகளின் அனுக்கிரகத்தால் அநேகநலம் பெற்றவர்கள். இவ்வாறே சோமசுந்தரம் பிள்ளையும் கஜராச முதலியாரும் சுவாமிகளின் அநுக்கிரகம் பெற்றவர்களாவர்.

இவ்வாறு சிவப்பிரகாசப் பெருமானுர் அன்பர்கள் பல வகை ஆடல்பாடல்களையுந் திருத்தொண்டுகளையுஞ் செய்து வந்ததிற்சிறிது மனமசையாது முன்போலவே தமது மனோலய நிலைமையிலிருந்து வந்தனர். நிட்டையிலிருந்து மனம் வெளிப்பட்டபோது சில வேதாந்த நூல்களை காலை மாலை நியமமாகப் பிரசங்கஞ் செய்துவந்தனர். அதைக்கேட்க வந்த எண்ணிறந்த அன்பர்களும் வேதாந்தநிலை கைவந்தவர் போன்று அப்போது பிரமானந்தத்தில் மூழ்கிவிடுவார்கள். சின்னைய நாயகர் என்பவர் சுவாமிகளின் ஆசிரியரிடத்தில் அநுக்கிரகம் பெற்ற தமிழ்க்கவி யாவர். இவர் சுவாமிகளின் மீது பல தோத்திரம் பாடியிருக்கின்றனர்.

## சுவாமிகளின் சீடர் கணங்கள்.

அரும்பாக்கம் சுவாமிகள் முத்துக்குமார சுவாமி, மூர்த்தி சுவாமிகள், திருவொற்றியூர் பாலசுந்தர சுவாமிகள், நாராயண தாசர் இவருக்கு சுவாமிகளிடத்தில் பேரன்புண்டு. பரமசிவம், ஈசுரய்யா, செங்கல்வராயர், அண்ணாமலைசுவாமி,

இராமானந்தம், வைராக்கிய சுவாமி, நடராஜர், சாந்தானந்தம், குமரவேல் சுவாமி, பெரியசாமி முதலியார் முதலான பலர்களும் சுவாமிகளைச் சரணடைந்து அனுக்கிரகம் பெற்று அறிவொழுக்கம் அடக்கம் முதலியவைகளிற் சிறந்த மாணவர் குழாங்கள்.

## அரும்பாக்கம் சுவாமிகள் சரணடைதல்.

இவருள் அரும்பாக்கம் சுவாமிகள் என்னும் முநியப்ப சுவாமிகள் நெடுநாள் சுவாமிகளை வழிபட்டுக்கொண்டு சுவாமிகளின் பூரண அனுக்கிரகத்தைப் பெற்றுத் தத்துவஞானங் கைவந்த பிரமஞானியாவர். சுவாமிகளைப் போன்றே அறிவடக்கம் ஒழுக்கம், இன்சொற் கூறன் முதலிய நற்குணங்களால் அணியுற்று விளங்குகின்ற பெரியார். இவர்கள் இப்போதுஞ் சுவாமிகளிடத்திருந்த அருள் தயை முதலியவைகள் போல் அடியார்களிடத்தும் அன்பர்களிடத்தும் மற்றும் எல்லா வுயிர்களிடத்தும் தயை மிகுந்தவராவர். இவர்கள் சுவாமிகளின் திருமடாலய முதலியவைகளைப் பாதுகாத்துக் கொண்டு ஆசிரியர் திருப்பணியையே மேற்கொண்டுள்ளார்கள். இதுவே சற்சீடரியல்பு.

## மூர்த்தி சுவாமிகள் சரணடைதல்.

மூர்த்திச் சுவாமிகளும் சிவப்பிரகாசப் பெருமானுரைச் சரணடைந்து வழிபட்டு அனுக்கிரகம் பெற்றுக்கொண்டு அவர் அகமிக மகிழுமாறு தொண்டாற்றி வந்ததுடன் ஆன்மபுராணம் முதலிய நூல்கள் பதிப்பித்ததற்கு பேருதவியாயிருந்தவர். இன்னும் ஆசிரியரின் திருக்கோயிலியற்றல் திருமடாலயம் புதுப்பித்தன் முதலிய பெரும்பணி செய்துகொண்டு உலகோபகாரமாய் உழைத்து வருகின்றனர்.

குருசுவாமி என்பவர் சுவாமிகளின் அருள் பெற்றுக் கொண்டு சில வேதாந்த நூல்களையுங் கற்றுணர்ந்து அறிவு மிக்குடையரா யிருந்துவந்தனர்.

## முத்துக்குமாரசாமி சரணடைதல்.

முத்துக்குமார சுவாமி என்னும் இல்லற ஞானியார் தாயம்மாள் என்னுந் தமது மனைவியாருடன் கூடி இல்லறம் வழாது நடத்திக்கொண்டு திருவள்ளுவர் போன்று சிவபக்தி அடியார் பத்தியிற் சிறந்த மெய்த்தொண்டர். இப்பெரியார் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகவும், தத்துவ ஞானிகளுள் ஒருவராகவும், இல்லறத்தாரிற் சிறந்தவராகவும் விளங்கி வருகின்றனர். சிறப்புடைய எல்லா வகையாருள் ளும் இவரை ஒருவராகச் சொல்லுவதற்கு ஒரு சிறிதும் ஐயமே யில்லை. இவர் சுவாமிகள் துறவு தொடங்கிய நாள் தொட்டு பெரும்பணி செய்துவந்த பேரன்பர்.

### திருக்குறள்.

“ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து”

எனத் திருவள்ளுவதேவனா ரருளியது இத்தகைய இல்லற ஞானியைக் கொண்டே யென்பதற்கும்,

“இல்லறமதனி லுறைந்துளோ ரிடத்தில் இருப்பினும்,
ஞானங் கீழிரும்பில் புல்லியமா ரத்தினமென விளங்கும்”

என மகாராசா கூறியது இத்தகைய பெரியா ரல்லாதார்க் கென்பதற்கும், இத் தத்துவ ஞானியாரே ஒரு எடுத்துக்காட் டாவர். இவருடைய அறிவொழுக்க அடக்க முதலிய குணங் களை நோக்கில் இல்லறத்திலேனும் துறவறத்திலேனும் ஒப் பானவர் யாரு மிலரென்பதே தோன்றுகின்றது. நமது கரபாத்திர சிவப்பிரகாசப் பெருமானுர்க்கு எல்லாரினும் மிகுந்த பேரன்புடையவரா யிருந்தவர் இந்த ஞானியாரே

யாவர். தொடக்கத்தி லிருந்து சுவாமிகள் செய்துவந்த உல கோபகாரத்திற்குப் பேருதவியா யிருந்து முடிவுறச் செய்த வரும், பின்னரும் சுவாமிகளின் ஆசிரம முதலியவற்றை நன் னிலைமையி லிருக்குமாறு செய்கின்றவரும் மேற் செய்பவரு மிவரேயாவர். தாமரையிலைத் தண்ணீர்போற் சகத்தொடுங் கூடி வாழ்வர், என்றும், ஓடும் புளியம்பழமும் போல் ஒட் டார் காண் என்றதும் இவரிடத்தில் பொருந்தி யிருக்கின் றது. இத் தன்மையுடையார் துறவறத்துள்ளும் ஒருவர் கிடைப்பது மரிது. அதுபற்றியே, சிவப்பிரகாசப் பெருந் தகையார் தமது விதேக கைவல்ய தசையிலும் இப் பெரி யாரை நோக்கி, எல்லாவற்றையும் இது பார்த்துக் கொள் ளட்டும் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

## பாலசுந்தர சுவாமிகள் சரணடைதல்.

திருவொற்றியூரான் திருத்தொண்டராகிய பாலசுந்தர சுவாமிகள் சுவாமிகளைவந்து அடைந்து சின்ன சுவாமிக ளென்று வழங்குமாறு உடைகோவணத்தரா யிருந்து வேதாந்த முணர்ந்து,

சிவப்பிரகாசம்.

“ வேதாந்த தெளிவாஞ் சைவசித்தாந்தத்
திறனிங்கு தெரிக்கலுற்றும் ”

என்னும் உமாபதி சிவத்தின் திருவாக்கிற்கிசைய வேதாந்தத் தின் தெளிவாகிய சைவ சித்தாந்தம் கைவரப் பெற்ற பெரி யோராய் விளங்குகின்றனர்.

## சுவாமிகளின் அந்தண அன்பர்கள்.

மற்றும் சுவாமிகளிடத்தில் மருவூர் கணேச சாஸ்திரியார், அருணசல சாஸ்திரியார் முதலிய அந்தண அறிஞர்களும்

பேரன்பு கொண்டவர்களாவர். குடகு அப்பைய டாக்டர் அவர்களும் சுவாமிகளிடத்தில் பேரன்புடையரா யிருந்தனர்.

மற்றும், வெங்கடாசல சாஸ்திரியா ரென்னும் அந்தணச் சிரேட்டர் மிகுந்த நோயுற்று சுவாமிகளை வந்தடுத்து பலவாறு பிரார்த்திக்க, சுவாமிகள் மனமிரங்கி, அப்படியே செய்யிது அப்படியே செய்யிது இங்கேயே இருக்கட்டும் சாதுக்களுக்கு வேதாந்தபாடம் போதித்துக் கொண்டிருக்கட்டும் என்று ஆசீர்வதித்து, ஒரு பச்சிலையைத் தமது திருக்கரத்தால் எடுத்துப் பிழிந்து தரையில் விட்டு அம் மண்ணில் ஒரு மிளகளவு எடுத்துக் கொடுத்து இதைச் சாப்பிடட்டும் சும்மா சாப்பிடட்டும் ஒன்றுமில்லை. என்றருளினர் அப்படியே அம்மண்ணுருண்டையை இவர் அருந்தியவுடன் சுரம் முதலிய நோய்கள் அடியோ டொழிந்து இன்புற்று சுவாமிகள் அநுக்கிரகித்தபடி சென்னையிலிருந்து வருகின்றனர்.

## சுவாமிகளிடத்தில் சிவாசாரியர் அநுக்கிரகம் பெறல்.

மற்றும் அல்லிக்குழி வைத்தியநாத சிவாசாரியர் என்பவர் சுவாமிகளைத் தரிசித்து பொன்னம்பல சுவாமிகள் உரையோடு கூடிய கைவல்ய நவநீதத்தைச் சுவாமிகளிடம் பெற்றுக்கொண்டனர். சுவாமிகள் சிவாச்சாரியாரை நோக்கி, இதை நன்ருகப் படிக்கட்டும் எனத் திருவாய்மலர்ந்தருள, சுவாமிகளின் வாக்கு விசேடத்தால் சிவாச்சாரியார் பல கணிதநூல்கள், இலக்கண இலக்கிய நூல்கள் வேதாந்த தருக்க நூல்கள் முதலியவைகளைக் கற்றுத் தெளிந்து சிவோகம்பாவனையில் இருந்து வருகின்றனர்.

## சுவாமிகளின் மாணவிக் குழாங்கள்.

அம்மாக் கண்ணம்மாள், இரத்தினம்மாள், கரையான் கோட்டை வீதி காமாட்சியம்மாள், மாணிக்கம்மாள், உலகம்

மாள், காமம்மாள், ஆண்டாளம்மாள், காமாட்சியம்மாள், மங்கையர்க்கரசி யம்மாள், திருவேணியம்மாள், சிவகங்கையம்மாள், வடிவாம்பாள், சீதாராமம்மாள், முத்தம்மாள் இரத்தினம்மாள் முதலிய அநேகம் பெண்மணிகள் சுவாமிகளைச் சரணடைந்து அனுக்கிரகம் பெற்று அறிவொழுக்கம் அடக்கம் முதலியவைகளிற் சிறந்த மாணவிக் குழாங்களாவார்கள்.

இவர்களில், கரையான் கோட்டை தெருவு காமாட்சியம்மையார் சுவாமிகள் ஆசிரமத்திற்கு வடக்கிலுள்ள சிங்காரக் கிருகத்திலிருந்த இவரது சுற்றத்தார்களுள் ஒரு அம்மையார் சுவாமிகளிருக்கு மிடத்தில் ஒரு சோதி தோன்றுகின்றதென்று கண்டுசொல்ல அதுகாரணமாய்ச் சுவாமிகளிடத்தில் வந்து சரணடைந்து ஞானநூற் பயின்று நல்லுணர்வு பெற்று சுவாமிகளின் திருவாக்கால் யாத்திரை செல்லுதல் முதலிய அநேக நன்மைகளை யடைந்தவராவர்.

மற்றும் மாணிக்கம்மாள் என்பவரும் சுவாமிகள் இடத்தில் அநேக ஞானநூல்கள் ஐயந்திரிபற பயின்று உண்மையறிவு பெற்று மைத்திரேயி, கார்க்கி முதலியோர்கள் போன்று துறவறத்தையும் அடைந்து பல்லோர்களுக்குத் தத்துவஞானத்தைப் போதித்து வருகின்ற ஆசிரியையாவர்.

உலகம்மாள் என்பவர்களும் முறையாக சசிவன்னபோதம் முதலிய ஞானநூல்களைப் பயின்று தத்துவ ஞானியாய் அறிவொழுக்க அடக்கங்களிற் சிறந்தவராய் இல்லற ஞானியாய் விளங்கிவருகின்றார்.

## அந்தணமாது அநுக்கிரகம் பெறல்.

இஃதன்றியும் திருவேணி யம்மாள், சிவகங்கை யம்மாள் என்னும் அந்தணமாதர்கள் சுவாமிகளைச் சரணடைந்து உடல்பொருள் ஆவி மூன்றையுஞ் சுவாமிகளுக்கே அருப்

பணம் செய்து ஆயுள் பரியந்தம் தொண்டர்களா யிருந்தனர். தாயும் மகளுமாகிய இம் மாதர்களி ரிருவரும் சுவாமிகளை நோக்கி, சுவாமின், எங்கட்கு முத்தி வேண்டும் என்றனர். அதற்கு சுவாமிகள் அவ்வம்மையா ரிருவரையும் நோக்கி, அம்மையாரே, "இச்சையாம் விறகுமாண்டால் எண்ணமாம் வன்னி மாளும்" என்று வசிஷ்டமுனிவரும்,

திருக்குறள்.

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

என்று திருவள்ளுவ தேவரும் அருளிய வாங்கு, அம்மா, ஆசை விட்ட விடமே முத்தி; ஆசையே பந்தமாகுமம்மா, ஆசை நீக்கமே முத்தி. இதனுற்றான் ஔவைப் பிராட்டியாரும் அறம் பொரு ளின்பம் என்னும்,

"இம் மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என்றார். முத்தியெனினும் வீடெனினும் ஒன்றுதானம்மா என அநுக்கிரகித்தருளினர். சுவாமிகளின் உபதேசத்தையே உறுதியாய்க்கொண்டு இன்புற்றவர்கள் இவ்வந்தண மாதுக்களிருவர்க ளாவார்கள்.

## செங்கல்வராயசாமி சரணடைதல்.

சுவாமிகளின் மாணவராகிய அல்லிக்குழி செங்கல்வராய சுவாமி என்பவர் சுவாமிகளைச் சரணடைந்து அனுக்கிரகம் பெற்றுத் தொண்டு பண்ணிக் கொண்டிருக்குங்கால் ஒருநாள் சுவாமிகளுடைய ஆக்ஞையில்லாமலே காசிக்குப்போய் விட்டனர். போய் சிலநாள் கழித்துவந்தனர். வந்து சுவாமிகளைப் பணிந்து போற்றிநிற்க, அங்குள்ள சில அடியார்கள், சுவாமிகளை நோக்கி, சுவாமின், இவர் சொல்லாது போய்விட்டதால் இவரை யிங்கு சேர்க்கக்கூடாது என்றனர். அதைக் கேட்டு

சுவாமிகளும் அப்படியே சுவாமி அப்படியே செய்யிதுசாமி என்று உடன்பட்டுக் கொண்டனர். பின்னர், அறியாக் குழந்தைகள் துட்டர்களேயன்றி அன்னையாரும் துட்டராவரோ, என்ற மூதுரைப்படி பின்புறம்போய் இவரைக்கண்டு இங்கேயே இருக்கட்டும் இங்கேயே இருக்கட்டும் என்று சொல்லியதுடன் அவர்மீது அன்பு பாராட்டி அன்னமும் அளித்து வந்தனர். அவ்வடியவர், கருணைப்பெருக் கோருருவாகிய இப் பெரியாரிடத்தில் யாம் அறியாது அவரை விலக்க வேண்டு மென்றது பழிப்பன்றேவென வெட்கினர், வெறுப்புடையவரிடத்தில், எல்லையற்ற அன்பு பாராட்டலும், வைராக்கிய மடைவிக்க வேண்டில் மிகுந்தவுணவு முதலியவைகளை அருத்துதலும், மாணவர்களைத் தண்டிக்க வேண்டில் மிகப் போற்றுதலும் சுவாமிகள் தந்திரயுக்தி யென்பது அணுகிப்பழகிய அறிவுடையார் காண்பர்.

சச்சிதானந்தம் என்பவரும் சுவாமிகளின் அநுக்கிரகத்தால் தமது திருப்பெயருக்கியைந்த வாறே சாந்தநிலையிலிருந்து வருகின்றனர்.

அண்ணாமலை சுவாமியும் சுவாமிகளின் திருவருளால் பலர்களுக்கு ஞானோபதேசஞ் செய்து கொண்டிருந்தனர்.

அக்கால் சுவாமிகளிருந்த விடத்தில் எந்நேரத்திலும் சுவாமிகளைச் சூழ்ந்து எண்ணிறந்த ஆண்பாலார்களும் பெண்பாலார்களும் கண்மூடி மௌனமா யிருப்பார்கள். எவ்வளவு மனோசஞ்சல முடையவர்களும், துஷ்டர்களும், சுவாமிகளின் கடைக்கண் பார்வைபட்ட மாத்திரத்திலேயே மனந்தூயராய் மனது ஒருமைப்பட்டவர்களாய்க் கடவுளைச் சிந்திக்க மிக விருப்புடையராய் தியானம் செப முதலியவைகளை யநுட்டிப்பர்.

## இராசுப் பிள்ளை சரணடைதல்.

சித்திரம் வரையும் இராசுப்பிள்ளை யென்பவ ரொருவர் சுவாமிகளையடைந்து அநுக்கிரகம் பெற்றுக்கொண்டு பல ஞான நூல்களையும் பயின்று காக்கூரில் ஒரு ஆசிரமமைத்து சுவாமிகளின் திருவுருவப் படத்தை அதிலமர்த்தி குருபூசை நடத்தி வருவதுடன் பல்லோர்களுக்கும் ஞானோபதேசஞ் செய்து வருகின்றனர். இவர் தமது மனைவி கமலம்மாளுடன் இல்லறத்தையும் வழுவாது நடத்திக்கொண்டு திருவள்ளுவர் போன்று இல்லறஞானியாய் விளங்கி வருகின்றார்.

## ஆனந்தபோதினி பத்திராதிபர் அநுக்கிரகம் பெறல்.

மற்றும் நாகவேடு. முனிசாமி முதலியார் என்னும் ஆனந்தபோதினி பத்திராதிபர் செங்கல்வராயர் தோட்டத்தில் சுவாமிகள் ஞானமணங் கமழ்ந்து மோனமன மகிழ்ந்து தானமன மிகுந்து தீனர்கட்கு அநுக்கிரகம் பண்ணிக்கொண்டிருக்குங்கால் வந்து சுவாமிகளைத் தரிசித்து ஆசீர்வாதம் பெற்று தமது பத்திரிகைக்கு ஆனந்தபோதினி என்னும் நாமம் புனைவதற்கு ஆணை பெற்றுக் கொண்டு பத்திரிகை தொடங்கி சுவாமிகளின் அநுக்கிரகத்தால் நாளது வரையிலும் தமிழ்நாட்டிற்கு ஆனந்தத்தைத் தமது பத்திரிகை வாயிலாகப் போதித்துக் கொண்டு பத்திரிகையும் தானும் தழைத்தோங்கி வருகின்றனர். பெரியாரின் அநுக்கிரகத்தாற் பெறுதது மொன்றுண்டோ?

மற்றும், ஆண்பாலார் பெண்பாலாராகவும் எண்ணிறந்த சீடர்களும் முள்ளார்கள்.

## சகசானந்தர் சரணடைதல்.

இவ்வாறு இச் சிவப்பிரகாசப் பெருமானார் செங்கல்வ ராயர் தோட்டத்தில் பல்லாயிரம் அடியவர்களுக்கும் எண் ணிறந்த அன்பர்களுக்கும் முத்தி நெறியை யனுக்கிரகித்துக் கொண்டு துறவி வேந்தராய்,

"அண்ணல்தன் வீதி யரசிருப்பாகும் அணிபடையோர்
நண்ணென்பதாம்"

என்ற வாங்கு தத்துவச் சேனைகளுடன் சுவராச்சியத்தை யாண்டு வருங்கால், ஒருதினம் தமிழ்ப் பழங்குடியிற் பிறந்த ஒரு வள்ளுவச் சிறுவர் கீலக வருடத்திற் சுவாமிகளை வந்து தரிசித்து எட்டங்கங்களும் தரையிற்பட மட்டில்லா அன் புடன் பணிந்து திருவடியிற் சரணடைந்து நின்றனர்.

அச்சிறுவர், பழங்குடியர், உழவர், முதுதமிழ்மக்கள், வள்ளுவர், என்பது முதலிய பல பெயர்களால் வழங்கப்பட்டு வருகின்ற பழந்தமிழர் குலத்திற் சிறந்தவரும், ஆரணி நகரத் திற் கடுத்த புதுப்பாக்கம் என்னுஞ் சிற்றூரை யுறைவிட மாகக் கொண்டவருமாகிய அண்ணமலை அவர்களுக்கும் அவர் மனைவி அலர்மேலம்மாளுக்குந் தவப் புதல்வராகத் தோன் றியவர்.

இவர் இளமை தொட்டே, "ஆன்மாவில் இரமிக்கின்ற முனிவர்களும், தமக்கு ஒரு தொழிற் செய்வதில் கருத்தர் களாந் தன்மையில்லாதவர்களு மாகிய ஞானிகளும் விஷ்ணு வின் அழகு மலிந்த திருவுருவத்தில் ஒன்றுபட்ட பேரன் பைச் செலுத்துகின்றார்கள், இத்தன்மையன விஷ்ணுவின் குணங்கள் என்னும் பாகவத புராண மொழிப்படியே தனக்கோர் செயலுமற்ற தத்துவஞானிகள் முதல் உழவரீறு கப் பேரன்பு செலுத்தி வழிபட்டுவரும் விஷ்ணுவின் பசனை யென்னும் அமிருதத்தை யுண்டு தேக்கினவர்.

திருத்துருத்தி இந்திரபீடம் சச்சிதானந்த சுவாமிகளின் ஆதீனத்து நீலமேக சுவாமிகளை யடைந்து சிறிது வேதாந்தமும் பயின்றவர்.

பின்னர் நரசிங்கபுரம் தக்கண்ண சுவாமிகளை யடைந்து சின்னாள் வேதாந்த நூல்களைக் கேட்டுவருங்கால் அவருடைய ஆணைபெற்று சென்னைக்குவந்து பேராசிரியர் கோ - வடிவேலு செட்டியாரவர்களின் வேதாந்தப் பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்து அங்குள்ள திருவள்ளுவர் குலத்தாரின் அத்துவித சங்கத்தாரால் ஆதரிக்கப்பட்டு, அங்குள்ள குழந்தை வேல்சுவாமிகளால் இச் சிவப்பிரகாச வள்ளலாரின் குணப் பெருமையைத் தெரிந்துகொண்டு சுவாமிகளிடத்தில் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியரிடத்தில் பெற்றான் சாம்பான் பேதமறத்தீட்சை பெற்றுக் கொண்டதுபோல் ஞானதீட்சை பெற்றுக்கொள்ள வேணவாவுடையராய் வந்த பக்குவரிற் சிறந்தவராவர்.

சுவாமிகள் இவ்வாறு தம்மை வந்து பணிந்து சரணடைந்த இச்சிறுவரை தன்னகங்கருதி நோக்கித் தடவிச் சந்நிதி யிருத்தி மௌனவிரத மேற்கொண்டிருந்ததால் தட்சிணாமூர்த்தி பேன்று, எல்லாமா யல்லவுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிப் பேரருள்புரிந்து தமது மாணாக்கராக்கிக் கொண்டு தம்பா லிருக்குமாறு கைக்குறிகொண் டறிவுறுத்தியருளினர். அவ்வாறே சிறிதும் வழுவாது நால்வகைப் பணியையும் இச் சிறுவர் சுவாமிகளுக்கு அன்போடியற்றி அருள் பெற்றனர். அதைநோக்கி சுவாமிகள் இச்சிறுவருக்குத் துறவையளித்து மறுபிறப்பற்ற நிலையை யடையச் செய்து சகசானந்தம் எனக் காரணப்பெய ரிட்டனர்.

பின்னர், சுவாமிகள், இச்சிறுவரைக் கடைத்தேறவைக்கில், நமது தமிழ் நாட்டுப் பழந் தமிழர்களும் கடைத்தேறு

வார்களென திருவருளா லுணர்ந்து, தம்முடனே ஆசிரியரை யடைந்தவரும், தருக்கநூலிற் கௌதமர் போன்ற நுண்ணறிவுடையவரும், இச்சிறுவர்பால் ஒருவகையில் துவேஷங் கொண்டவருமாகிய முருகேச முதலியாரையே கொண்டு இச் சிறுவருக்குத் தருக்கநூல் முதலியவைகளைப் போதித்து மேம்பா டடையுமாறு செய்வித்தருளினர்.

"தருக்கத்திற்கு நிலைத்தற் றன்மை யின்மையால்" என வியாசமுனிவர் கூறியிருக்கினும் வேதாந்த ஆராய்ச்சிக்கு தருக்கநூற் பயிற்சி வேண்டுமென்பதை சுருதியும் ஒதுக்கவில்லையாதலி னென்க.

இவ்வாறு சுவாமிகளின் திருவுளப் பாங்கின்படி முருகேச முதலியாரும் இச் சிறுவனுக்குப் போதித்துச் சிறப்படையுமாறு செய்யின் நமது நாடே சிறப்படையும் என எண்ணி மகிழ்ந்து இச் சிறுவருக்கு தருக்கநூல்களை நன்கு போதித்து வந்தனர். இச் சிறுவருடைய மதிநுட்பங்களைக் கண்டு அத் தருக்க ஆசிரியருக்கு உற்சாகம் மேன்மேலும் உண்டாகி நாமும் உலகமும் அறியாமையிற் சிக்கி சாதிபேதங் கொண்டு உண்மையை யிழந்தோம். அம்ம! அம்ம! தாழ்ந்த குல மொன்றுண்டோ? அறிவு குறைந்ததே தாழ்மையாம். அதுபற்றியே,

நுண்ணறிவிலார் சூத்திரரென நிகண்டும் கூறுகின்றது என்று கருதிக்கொண்டு மாபெரும் வருத்தமுற்றுக் கற்ற கல்வியை யாவருக்குப் போதிப்போம் எனக் கவலை கொண்டிருந்தது அகன்று இச் சிறுவனால் நாம் கற்றகல்வி இன்று பயனடைந்தது என மகிழ்ச்சியுற்றிருந்தனர்.

மற்றும், இவ்வாறே சிவப்பிரகாச தேவனார் இச் சிறுவருக்குத் தமிழ்க் கல்வியில் வல்லுநராகிய சின்னைய நாயகனரைக்

கொண்டு தமிழ்க் காவியங்களையும் நன்கு ஓதுவித்தருளினர். இச் சிறுவரிடத்து சுவாமிகளின் அன்பர்களில் சிலர் துவேட முடையவர்களா யிருப்பதையும் உணர்ந்த சுவாமிகள் அவர்கள் அகமும் கிலேச மடையாமலும் இந்த ஆதித்திராவிடச் சிறுவர் முன்னேற்ற மடையுமாறும் தந்திரவுத்திகள் அநேகஞ் செய்து வந்தனர். அவைகளிற் சிலவருமாறு :—

இதற்கிடையில், சுவாமிகளிடத்திற்கு வருகின்ற சில அன்பர்கள் இச்சிறுவரை நோக்கி இவன் யாவன்? கருநிற முடையவனு யிருத்தலின் பறையனே? என்பர் சிலர். அதற்கு சுவாமிகள் புன்னகைகொண்டு "என்ன இப்படிச் சொல்லுதே இது மிகுந்த புத்திசாலி, இது பெருந்தன்மை யுடையது நிறத்தாலென்ன? மிகுந்த செந்நிற முடையார் நல்ல அந்தணராவரேல் மேல்நாட்டார் நமது நாட்டு இரு பிறப்பாளரிலும் மேம்பட்டவராகாரோ? சகசானந்தம் வரட்டும் இவர்கள் எல்லாரிடத்தும் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளட்டும் என்று இன்சொல்லா லருள்செய்வர். உள்ளத்திலோ பறையர் என்பது சிறந்த பொருளுடைய தென்றறியாமலும் தாம் மற்றொருவர்க ளிடத்து தாழ்ந்திருக்கின்றோ மென்பதை யுணராமலும் வாளா வுரையாடுகின்றனரே என நினைத்துக் கொள்ளுவர். மற்றொரு அன்பர் ஒருதினம் சுவாமிகளை நோக்கி, சுவாமிகாள், தங்களிடத்தில் ஒரு பறையன் சீடனு யிருக்கின்றானுமே, நன்றாகப் படித்துங்கூட இருக்கின்றானுமே, அது உண்மைதானு? என்றார். அதற்குச் சுவாமிகள், ஆமாம் அப்படியே யிருக்குது. அப்படியேதா னிருக்குது என்றருளிச் செய்தனர். மற்றொருவர், சுவாமி, தாழ்ந்த குலத்தார்க்குக் கல்வி வராதென்று சொல்லுகின்றார்களே அஃதுண்மையோ? என்றனர். அதற்குச் சுவாமிகள், அப்படியா நினைக்குது. அப்படியானல், திருவள்ளுவர் தமிழ்மறை

மொழிந்தது எவ்வாறும்? நந்தனர், திருப்பாணாழ்வார் முதலியோர் பேரருள் பெற்று பெருங்கல்வி யுடையரா யிருந்தனரென்பது எவ்வாறு பொருந்தும்? அந்த சகசானந் தம் இதோ இருக்குது பார்க்கட்டும் என்று சொல்லிவிட்டு சகசானந்தத்தை நோக்கி, அப்பா இங்கேவரட்டும். இவர் களுக்கு ஒரு செய்யுள் சொல்லிப் பொருள் கூறட்டும் என் றருளுவர். அவ்வாறே இச் சகசானந்தச் சிறுவர் ஒரு செய்யுள் கூறிப் பல பொருளுரைக்கக் கேட்டு மகிழ்வுற்று ஆமா சாதி நீதி யெல்லாம் பொய்க் கட்டுப்பாடுசாமி. தாங்கள் இன்னு நன்ருய்ப் படிக்குமாறு செய்தருள்வீராக என்பார்.

இவ்வாறு, சுவாமிகள் இச் சகசானந்தருக்குப் பலவகை யானும் அநுக்கிரகித்துக் கொண்டு பொருளுதவி முதலிய வைகளுஞ் செய்து தமது மாணவர்களுள் நேத்திரம்போற் பாவித்து மேம்பாடாக்குவித்து வருங்கால் ஒருதினம் சுவாமி களின் அன்பராகிய நடேசநாயகர் சுவாமிகளுடன் அளவளா விக் கொண்டிருக்கும்போது, இச் சகசானந்தர் நீர் வேட்கை கொண்டு அங்குள்ள பாத்திரத்திலிருந்த நீரைவார்த்து அருந்தினர். அதைக்கண்ட அந் நாயகர் மிக வெகுண்டு பல வாறு கூற, அதைக்கேட்ட சுவாமிகள், அப்படியா செய்தது; சகசானந்தம் அப்படியா செய்தது; இனிமேல் செய்யாது. தாகமிகில் மோகம்வரும், வேகம்வரும், சோகமெழும், யூகங் குறையும் என்று வாக்குமாத்திரத்தாற் சமாதானம் பண்ணி விட்டு, இவர்கள் தொட்ட நீரையும் தொடல்கூடா தென்றும் இவர்கள் விலங்குகளை யொப்பா ரென்றும் அந்தணர்கள் இவர்களை நீக்கிவைத்திருந்தும் இவர்கள் இவ்வாறு சொல்வது பேரறியாமையென உள்ளத்தி லெண்ணிக் கொண்டனர்.

பின்னர், அந்நடேச நாயகர் சுவாமிகளுக்கு ஒரு கடிதம் எழுதி யனுப்பித்தனர். அதாவது:— சுவாமிகாள், தாங்கள்

சகசானந்தம் என்னும் பறைப்பையனை நீக்கிவிடல் வேண்டும். இன்றேல், தங்களை விஷங் கொடுத்துக் கொல்வேன் என்றதாம்.

இக் கடிதத்தைப் பார்த்த குணக்கடலாராகிய சிவப்பிரகாச தேவர், பின்னர், நடேச நாயகரிடத்து முன்னிருந்ததிலும் பேரன்பு கொண்டிருந்தனர். ஆனாலும், இந்த வுடம்போடிருப்பதருவருப்பே, என்ற திருவாக்கின்படி அருவருக்கத் தக்கதைப் போக்குபவர் பேருதவி செய்தவரே யாவர் என்பது கருத்துப்போலும். அல்லது,

திருக் குறள்.

“பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினும் நன்று”

என்னுந் தமிழ் வேதவாக்கின் பொருள் இயற்கையாகவே சுவாமிகளிடத்துப் பிறப்புத் தொட்டே இருத்தலினாலோ அறியேம். இப் பெருமானார் சினத்தை யறியாத செல்வர் என்பதை யீண்டு மூகிக்க.

மற்றும்,

“சினமென்னும் பாம்பிறந்தாற் றுண்டவக் கோனேயாவுஞ்
சித்தியென் றேநினையேடா தாண்டவக் கோனே”

என்ற சித்தரின் திருவாக்கிற்கு இலக்கு சுவாமிகள் என்பதுங் காண்க.

பின்னர், அந்த நடேச நாயகர் வரும்போதெல்லாம் அவரை சுவாமிகள் எதிர்கொண் டழைத்து, வரட்டும் வரட்டும் என்று வரைவிலா துபசரித்து இன்சொற் கூறி வந்ததுடன் சகசானந்தத்தையும் அந் நாயகரை வணங்குமாறு பணித்தனர். அவரும் அவ்வாறே செய்தனர். அறியாமை

யுடைய துஷ்டருக்கு ஒருதலையாக முன்னர் வணங்கல் வேண்டு மென்பதும் அறிவுடையோரை வணங்காவிடினும் குற்றமின்றென்னும் நீதிநூல் வழக்குஞ் சுவாமிகளிடத்தில் தேகம் நீங்கும் வரையி லிருந்து வந்தது.

இவ்வாறு, பல இடையூறுகளையும் போக்கிக்கொண்டு பலவகையானும் இச் சகசானந்தரைப் பரிபாலித்து வருங் கால் சிலர் வந்து பணிந்து சுவாமிகளை நோக்கி, சுவாமின், சாதி யென்பது ஒன்று உண்டா? இல்லையா? எனக் கோபத் துடன் வினவினர். அதைக் கேட்ட சுவாமிகள், சாதியுண்டு அது எப்படி யில்லாமற் போகும்? உட்காரட்டும் உட்காரட் டும் என்று கூறிவிட்டு, அப்பா சகசானந்தம், இதற்கு வணங் கட்டும் வணங்கட்டும் என்று முன்னர் அவர்கள் மனத்தின் வெப்பத்தைத் தணித்துக்கொண்டு அவர்களை நோக்கி, அன் பர்காள்! சாதி வருண முதலிய பேதங்கள் வியவகார காலத் தில் தூலப் பார்வையி லுண்டு; அவசியம் உண்டு; ஆனால் உற்று நோக்கில்,

"அரிவையரையே மூலமாகக்கொண்ட குலத்தில்
எந்த சாதியைக் கற்பித்தற்காம்?"

என அருஷ மிசிரர் கூறியவாறே சாதியை ஆராயப் புகின் எவ்வகையானும் அமையாததாம். அதுபற்றியே, வச்சிர சூசிகை யுபநிடதமு மவ்வாறுரைக்கின்றது. மற்றும், சாதி யில்லை; வருணமில்லை; ஆசாரமில்லை என்றற் றொடக்கத்து நிருவாண தசகத்தில் சங்கர பகவத்பாதரும் வெளிப்படை யாய் இதைத் திருவாய்மலர்ந்தருளி யுள்ளார். அவ்வாறே, மநீடா பஞ்சகத்திலும் கூறி யுள்ளார். மற்றும், வியாச முனி வரும் அறிவு குறைந்தவராகிய சூத்திர ரென்பவர்க்கு வேதாந்த சிரவணங் கூடாதென்று பிரம சூத்திரத்தின்கண் கூறியுள்ளார். மற்றும்,

"தீநடையுடையார்கள் இழிந்த பிறப்படைகின்றனர்"

என்று சாமவேதம் கூறுகின்றது. சண்டாள னென்பது ஒரு சாதி யன்று; மற்றோ பாதகஞ் செய்வோரே சண்டாள ராவர். அத் தன்மையார் யாண்டும் எல்லா மக்களுள்ளும் உள்ளார் என்று திருவாய்மலர்ந்தருளி அவர்கள் மனதை யிளகுமாறு செய்தருளினர்.

மற்றுஞ் சில அன்பர்கள் சிவப்பிரகாசப் பெருமானை நோக்கி, ஐய! தாங்கள் புலால் தின்னும் பறையர் குலப் பையனைச் சேர்த்து வைத்துக்கொண் டிருக்கின்றீர்களாமே. தங்கட்கு ஒத்ததா மாயினும் எங்களைப்போன்ற உலகரை நோக்க அது தகுதியாமோ? என வினவினர். அதற்குச் சுவாமிகள், அப்படித்தா னிருக்கு; ஆமாம், ஆமாம்; அதைப் போகச் சொல்ல வேண்டும்; இது போகச் சொல்லி விடுது; இப்போதே போச் சொல்லி விடுது என வினவின ருள்ளங் குளிருமாறு கூறிவிட்டுப் பின்னர், மெல்ல, புலால் தின்போ ரனைவரும் சண்டாளரோ? அங்ஙனமாயின் முள்ளம் பன்றி, சல்லிய மிருகம், உடும்பு, காண்டா மிருகம், முயல் என்னும் ஐந்து நகங்கள் உள்ளவைகளை அந்தணரும் அருந்தலாம் என மநு ஸ்மிருதியும், வால்மீகி இராமாயணமுங் கூறுகின்றது.

மற்றும்,

"கள்ளி யகிலுங் கருங்காக்கைச் சொல்லும்போல்
எள்ளற்க யார்வாயின் நல்லுரையைத்—தெள்ளிதின்
ஆர்க்கும் அருவி மலைநாட நாய்கொண்டாற்
பார்ப்பாருந் தின்ப ருடும்பு"

என்னும் மூதுரையும் இதை வற்புறுத்துகின்றது.

இதையே,

திருக் குறள்.

" அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர் செகுத் துண்ணாமை நன்று "

என்று திருவள்ளுவ தேவருந் திருவாய் மலர்ந்தருளினர். இதுகொண்டே எல்லா நூல்களும் புலாலுண்பாரை புலையர் என்றே கூறுகின்றன வென்று மிகநயமா யின்சொலியம்பி மனங் குழையச் செய்வர்.

மற்றுஞ், சிலர் சிவப்பிரகாசப் பெருமானாரை நோக்கி சுவாமின், நமது தமிழ்நாட்டு மக்கள் எல்லையற்றோரிருக்க, எங்கேயோ கிடந்த தாழ்ந்த குலத்துப் பையனை தாங்கள் சேர்த்து வைத்துக் கொண்டிருத்தல் தகுமா? என வினவினர். அவர்களை நோக்கிச் சுவாமிகள், உண்மைதானது; உண்மைதானது; எங்கேயோ யிருந்துவந் திருக்கிறது; வந்துதானிருக்கு; அது கூடாதுதான். என அவர்கள் மனம் கரையுமாறு முன்னர்க் கூறிவிட்டுப் பின்னர் அன்பர்காள், சிருட்டி தொடங்கி மநுச்சக்கரவர்த்தி காலம்வரை ஒரு பரமான்மாவின் புத்திரர்களான மக்கள் பேதமின்றி சிலர் தவமுடைய பிரமஞானிகளாகவும், சிலர் புய வலியுடையவர்களாய் அரசு செய்துகொண்டும், சிலர் பயிர்த்தொழில் வர்த்தகம் செய்பவர்களாகவும், சிலர் தொண்டர்களாகவு மிருந்து வந்தனர். மநுவின் காலத்தில் உலக மக்களனைவருந் தவஞ் செய்து பிரமஞானிகளாய் விட்டனர். ஏனைய அரசு, வாணிகம், தொண்டு என்பன முழுதுங்குன்றி விட்டதால் மநுவானவர் தமது அரசாட்சியிலுள்ள மக்களை நான்குவகையான தொழில் செய்யுமாறு ஆணை செய்தனர். அதையே பின்னோர்கள் சாதியென்று வழங்கி வந்தனரன்றி இறைவன் படைப்பில் எள்ளளவும் பேதமில்லை.

மற்றும், நமது தமிழ் நாட்டிலும் மாடாயர், மீன்புல்லர், குன்றவர், நாடர், மறவர் என நிலவகைபற்றி மக்களேயும், கோடாகரன், வருணன், குகன், இந்திரன், துர்க்கை யெனத் தெய்வங்களேயும் வகுத்து உலக வழக்கானும், செய்யுள் வழக்கானும், வழங்கிவரினும் உய்த்து நோக்கில், உழவர், பறையர், வள்ளுவர் முதலிய பெயர்களால் வழங்கப்பட்ட ஆதி திராவிடர்களே பண்டைக்காலத்தவ ராவர்.

இதை,

“ துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான்கல்லது குடியு மில்லே”

என பழமையினும் பழமையாகிய, புறநானூறும்,

“ முரசு கடிப்பிடூ உழுதுக் குடிப்பிறந்தோன்” என,

தமிழ்க் காவியங்கட் கெல்லாம் அணியாகிய மணிமேகலேயும் மற்றும் பல பழந்தமிழ் நூல்களும் நன்கு கூறியிருக்கின்றன.

மற்றும் பறையர் என்னுஞ் சொல் பறை, முரசு முதலிய பறைகளே - வாத்தியங்களே அறைவோர் என்பது பொருளாதலின் வள்ளுவர் என்னுந் திரிபுச் சொல்லும் இதையே யுணர்த்துகின்றது. அற்றுகலினன்றே, சீவக சிந்தாமணி யுரையில் வள்ளுவர் என்னுஞ் சொல் பெயர்த்திரி சொல் லென்ருர் நச்சினுர்க்கினியரும்,

இவ்வாறே,

“ கறைவிடுமின் அயில்வேலான் வள்ளுவனேக்
கூய்முரசங் கறங்கச் சாற்றி”

எனத் திருவிளேயாடற் புராணமும்,

“ யானேயின் வள்ளுவன் முரசம் எற்றினன்”

என கம்பராமாயணமும்,

"மணித்தடக்கை வள்ளுவனை வியவரினுற் றூண்டி"
என தணிகைப் புராணமும்,

"வள்ளுவார் முரச மூதூ ரறைகென வருளி ஞனே"
என சீவக சிந்தாமணியுங் கூறுகின்றன.

இஃதொழிந்த, ஏனைய மாறுபொருள் கொள்ளல் சாதித் துவேஷத்தினுலாம் என்று பல நயத்துடன் கூறியருளினர்.

மற்ருெருவர் சுவாமிகளை நோக்கி சுவாமின், ஆதித் திராவிடர்களை மிலேச்சர் என்று வழங்குகின்றூர்களே அது உண்மை யாமோ? என்று பணிந்து வினவினர். சுவாமிகள் அதற்கு, அப்படித்தான் சொல்கின்றூர்கள் என்று கூறி அவர்கள் மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டு, பின்னர், ஐய, "மிலேச்சராரியர்" என்றது திவாகர சூத்திர மாதலின், மிலேச்ச ரென்பவர் யாவரென்று சொல்ல முடியும்? எல்லா வகையானுந் தீத்தொழி லுடையாரே மிலேச்சர் என்று புன்னகையுடன் பேசுவர். இவ்வாறு, புலையர், சண்டாளர், கடையர் முதலிய சொற்கள் தீய தொழிலுடையாரையே குறிக்கின்றதென்றும் பலவகையாக அறிவுறுத்தி வந்தனர். இச் சகசானந்தம் மேன்மையடைவனேல் தமிழ்நாட்டு ஆதித் திராவிடர்களனைவரும் மேம்பா டடைந்தவர்களாய் நமது நாடே சிறப்புடையதாகும் என்னும் பெருநோக்கம் சுவாமிகட்கு அக் காலத்திலேயே நிறைந்து கிடந்தமை யறியத்தக்கது.

இவ்வாறு சுவாமிகள் சகசானந்தரிடத்து பேரருள் கொண்டு பலவகையானும் மேன்மைபடுத்தி யருளினர். இதற் கிடையில் அன்பர் யாரேனு மொருவர், சகசானந்தத்திற்குச் செலவிற்கு இல்லையாமென்ருல், அதுக்கென்ன குறை? அது பணக்காரன் என்று அடிக்கடி கூறி யருளுவர்.

அது மேல் வரும் பணப் பெருக்கைக் காட்டிற்று. எண்ணிறந்த மாணவர் குழாங்களிருக்க தமது ஆசிரியரிடத்தி லிருந்த கிடைத்த ரிபுகீதையை சுவாமிகள் இவர்பாலளித்த மாத்திரத்தானே சுவாமிகட்கு இவரிடத்துள்ள அன்பின் பெருக்கைக் கண்டு கொள்ளலாம்.

மற்றும் யாரும், சகசானந்தர் பேசாது உள்ளிலேயே யிருக்கின்றார் என்றால், அதற்கென்ன சாமி? சில தினத்தில் சங்கராசாரியர் போலாகும் என்றருளுவர்.

அன்றியும் சகசானந்தத்தை வெளியிற் பழகிவருமாறு செய்தல் வேண்டும் என்பரேல், அதற்கென்ன இன்னும் எவ்வளவோ கனதனப் பெரியார்களின் பழக்கமாகும் என்றருளுவர்.

இவ்வாறு சகசானந்தம் கல்விபயின்று அவைக்கண் கூசாது பேசுமாற்றல் பெற்று இருக்குங்கால், சுவாமிகள் சாது சங்கந் தொடங்கியபோது, பல அறிஞர் கூட்டத்தில், நான் யாரென்றறிதல் எந்தப் பிரமாணத்தால்? என்னும் விஷயமாய்ப் பேசுமாறு சகசானந்தத்திற்கு சுவாமிகள் ஆணை கொடுக்க அவ்வாணையின்படி சுவாமிகள் அநுக்கிரகத்தால் முன்னர் பேசிய பேரறிஞர்களினும் பின்னர் பேசும் நாவலரினும் மிக மேம்பாடாய் கேட்பார்க்கும் உணர்வார்க்கும் மிகப் பிரியமாகுமாறு வெகுநயமாய்ப் பேசியதைக்கண்ட சில அறிஞரும் துவேஷமுற்று மனம் புழுங்கிக் கொண்டிருந்தனர். இவர்கள்,

தேவாரம்.

“ ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி
லவர்கண்டீர் யாம் வணங்குங் கடவு ளாரே ” என்றும்,

"எவரேனுந் தாமாக" என்றும் தமிழ் மறைகளும் கூறுகின்றன.

"சண்டாளனுகுக இருபிறப்பாளனுகுக
அத்துவித சைதன்யத்தை யறிந்து அதில்
நிலைத்தவன் எனக்குக் குருவாவன்"

என்று சங்கர பகவத்பாதரின் வாக்கையும் உணர்ந்தாரே யன்றி நடந்தாரிலர்; வாய்ப்பறை யடித்தற்குக் குணிலும் வேண்டுமோ?

இவ்வாறு சகசானந்தர் அறிவொழுக்கங்களிற் சிறந்தவராயிருந்து வருங்கால் சிதம்பரத்தில் நந்தனர் மடத்தை விருத்திசெய்யில் உலகத்திற்கே நலமென்று ஒரு அன்பர் ஞாபகமூட்ட, அவ்வாறே அங்குச் சென்று சாதிப்பேய் பிடித்த சிலர்களால் அவ்விஷயத்தில் இடையூறுண்டாக அதற்கு முக்கியமா யிருந்த சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகள் மடத்தின் மடாதிபதியாகிய பரஞ்சோதி சுவாமிகள் நமது சிவப்பிரகாசப் பெருமானரிடத்தில் பேரன்புடையாராதலின் அவர்கட்குப் பலவகையாய்ச் சமாதானஞ் சொல்லி மற்றும் சில அரசாங்கப் பணியாளர்களுக்கும் இனிது கூறி சிதம்பரத்தில் நந்தனர் மடம் முடியுமாறு அருள் செய்தனர்.

இச் சகசானந்தரவர்கள் நந்தனர் மடாலயம், நந்தனர் கல்விச்சாலை, நந்தனர் சங்கம் முதலிய பலவகை நன்னெறிகளை அரசாங்கத்தாரின் உதவியாலும், மற்றுஞ் சில கனதனவான்களின் உதவியாலுஞ் செய்து கொண்டு தமிழ் நாட்டிற் கோர் சூரியனுய் ஆங்கிலேய அரசாங்கத்தாரால் மதிக்கப் பெற்று தாமும் ஒரு போதகாசிரியராய் விளங்கி வருகின்றார். சுவாமிகளின் ஆசீர்வாதத்தால் மேன்மேலும் விருத்தியாமென்பது திருவருட் சம்மதம்.

## சுவாமிகள் மாணவர்களை யுற்சாகப் படுத்தல்.

இவ்வாறு சுவாமிகளுடைய சந்நிதானத்திற்கு வந்தவர்களனைவரும்,

"ஆர் பெரிய ரார் சிறிய ராருறவ ராய்பகைவர்
சீர் பெரியரானந்தச் சிற்சொருபர், பேர்பெரியர்
எங்கெங்குந் தாமா யிருந்து சட சித்தனைத்தும்
அங்கங் கியற்றுவ தானல்"

என்ற உண்மைத் திருவாக்கிற்கியைய பாலர், விருத்தர், தருணர் பெரியவர் சிறியவர் யாவரும் கதிர்காமத்தில் முருகக் கடவுளின் சந்நிதியிலிருப்பது போன்று பேதபாவனை யற்றவர்களாய் ஆன்ம சிந்தனை யுடையவர்களாகவே யிருப்பார்கள்.

சுவாமிகளின் சீடர்களுள் யாரேனும் ஒருவர் பாவனை வசத்தால் தமது அனுபவத்திற் றோன்றியதைக் கண்டு சுவாமிகளிடம் வந்து பணிந்து, சுவாமின், நேற்றையதினம் இரவில் தங்களுடைய திருவடிக் கமலங்களை நினைத்துக் கொண்டு யான் ஆன்மாநு சந்தானத்தில் இருக்குங்கால் புருவநடுவில் ஒரு ஒளி தோன்றிற்று. அஃதென்னை? திருவாய்மலர்ந்தருளல் வேண்டும் என வினவுவார்கள். அதற்கு சுவாமிகள் அம்மா, அதுவே யுண்மை யநுபவம்; அதுதான் அம்மா சுயம்பிரகாரம்; அதை விடவேண்டாம்; அம்மா விடவேண்டாம் என தாயினுமினியதண்ணளியுடன் வற்புறுத்தித் திருவாய்மலர்ந் தருளுவர். பக்குவ நோக்கிப் பக்குவரின் மனதை மறித்தும் மறித்தும் அதிற் செலுத்துமாறு செய்வதே சுருதிப் பொருளுணர்ந்த பிரம நிட்டராகிய ஞான தேசிகரின் மரபாம். பக்குவந் தெரியாது மனதை மயங்கவைப்பர் ஏனையோர். அத்தன்மைத்தாய பாவனை முதிர்ச்சியாலே ஆராய்ச்சி தோன்றி தத்துவஞான முண்டாகு மென்பதே பெரியார்

கொள்கையாம். மற்றொருவர் வந்து பணிந்து, சுவாமின், யான் தியானஞ் செய்து கொண்டிருக்கும்போது ஒன்றுமே தெரியாமல் வெட்ட வெளியாய்த் தோன்றிற்று. அஃதென்னை? திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று வினவு மிடத்து, அதுதான் சிதம்பர வொளி; விடாமல் செய்யட்டும்; அதுதான் சிதாகாயம்; அதுவே உண்மை; விடாது செய்யட்டும் விடாது செய்யட்டும் என்று மனவுற்சாகத்தோடு மீண்டும் அந்தத் தியானத்தில் நன்கு முயலுமாறு அன்புமிக் குண்டாகி தன்னன்பர்கள் நன்னிலையை நண்ணவேண்டு மென்று கேட்போர் மனம் உவக்குமாறு இன்சொற் கூறியருளுவர்.

## சுவாமிகளின் சந்நிதி விசேடம்.

மற்றும், தமது சீடர்களுள் யார் யார் எவ்வாறு எவ்வாறு பாவனை செய்கின்றார்களோ அவ் வாறவ்வாறு பக்குவம் நோக்கி உற்சாகப்படுத்தி மேல் நிலையை யடையுமாறு செய்தருளுவர்.

"வாழைக்காகா வேதிமட்கலத்திற் காகாவாறு"

என்றதும் சுவாமிகள்பால் பிறழ்ச்சி யடைந்தது.

விரிப்பதிலென் அன்புக்கோர் கடலாயும், காருண்யத்திற்கோர் குன்றாயும், இன்சொல் எழுவதற்கோர் பூமியாயும், மைத்திரி கருணை முதிதை உபேட்சை முதலிய குணங்களுக்கோர் ஆலயமாயும் சீவர்களிடத்தில் அருள் சிவபத்தி திருந்திய துறவு மெய்ஞ்ஞானமே ஒரு திருமேனியாயுமுள்ள நமது சிவப்பிரகாசப் பெருந்தகையார் பால் ஒரு நாளேனும் ஒருவர் வந்து பணிந்து சுவாமிகளது கிருபை நோக்கத்திற்குப் பாத்திர ராவரேல் அவர்கள் அடக்கம், சாந்தம், திருப்தி, இன்சொல், மக்களிடத்திற் சமபாவனை, முதலிய பெருங் குணங்களை யுடைய சாதுக்களே யாவார்கள் என்பது உலகறியும்.

இவ்வாறு சுவாமிகளின் ஆசிரமத்திற்கு எவ் வன்பர்கள் வந்தாலும் முன்னர் சுவாமிகளைப் போற்றிக்கொண்டு அங்கங்கு தனித்தோரிடத்தில் இருந்து கண்மூடி வாய் பேசாது பத்மாசனத்தி லமர்ந்து புருவத்தை நோக்கிக் கொண்டு தியானப் பழக்கஞ் செய்வார்கள். அக்கால் சுவாமிகள் வெளிப்பட்டு வரின் சந்தடிகேட்டு எருந்திருப்பார்களேல் அப்போது சுவாமிகள் அம்மா, அப்படியே யிருக்கட்டும்; அம்மா அப்படித்தானம்மா செய்யவேண்டும்; அப்படியே யிருக்கட்டும் அப்படியே யிருக்கட்டும் என்று பலதரம் இன்சொற் கூறி யருளுவர். சுவாமிகள் எல்லா விஷயமுந் தெரிந்திருக்கினும் வன்சொற் பேசத் தெரியாதவரே யாவர் என்பது திண்ணம்.

இவ்வாறு பாவனாதீத ஞான சமாதியிலிருந்து வருங்கால் சிலர் வந்து பணிந்து, சுவாமிகாள், தாங்கள் பெரியோரென்று சொல்கின்றார்களே, தாங்கள் எவ்வித ஆசாரநியமமுமின்றியவர்களாதலின் அது எவ்வாறாம்? என்று வினவினர். அதற்கு சுவாமிகள், ஆமாம் சாமி அப்படித்தான் இது; இது அப்படித்தான் சாமி இருக்கு என்று கூறியருளி அவரை மகிழ்வித்து, எப்போதும் சுவாமிகள் தம்மைநான் என்று சுட்டாது இதுஇது எனக் குறிப்பிடுதல் வழக்கம். பிறரையும் இது அது என்றே வழங்குவது இயற்கையாம்.

பின்னர், அவர்கட்கு மறுமொழி கூறக்கருதி, கூறிய முறை :— அறிஞர்காள்,

"பண்ணே னுனக்கானபூசை யொரு வடிவிலே
பாவித்திறைஞ்ச வாங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருக்கி லப்
பனிமல ரெடுக்க மனமும்

நண்ணேன் அலாம விருகைதான் குவிக்கவெனில்
நாணு மென்னுளம் நிற்றில் நீ
நான் கும்பிடும் போதரைக் கும்பிடாகையால்
நான் பூசை செய்யன் முறையோ"

என்று கூறிய தாயுமானரும்,

"கண்ணுவா ரேனும்நினைக் கைகுவியா ராயினந்த
மண்ணுவார் நட்பை மதியேன்"

என்று திருவாய்மலர்ந் தருளியுள்ளார்.

ஆதலின், ஈசுரவழிபாடின்றி உண்மைஞான மடைத லருமையா மென்பது கொண்டு பூசை வணக்கம் முதலியன, ஒருதலையாக செய்யற்பாலதே. ஆனல் அப்பூசைகளில் மெய்ஞ்ஞானப் பூசையே மேலானதாமென நினைத்து ஞானிகள் செய்து வருகின்றார்கள். இதையே கண்ணபிரானும் சிறப்பித் தருளியுள்ளார்.

அதுபற்றியே,

"எப் பொருள் களுந்தா ஞகி யிலங்கிடு மறிவா மீசன்
அப்படி விளங்கு கின்ற தறிதலே யவன்ற னுக்கு
மெய்ப்படு பூசை வேறோர் செயலினு லன்று மெய்யே
இப்படி ஞானந் தன்னு லிறைஞ்சிடப் படுவா னீசன்"

என்று வீராகமம் கூறுகின்றது.

அத்தகைய தாயுமானரும்,

"ஒருகால மன்றிது சதாகால பூசையாய்
ஒப்புவித்தேன் கருணைகூர்"

என இப்பொருளையே வற்புறுத்தினர்.

சிவானந்த லகரி.

"என்து ஆன்மாவே பரமேசுவரனாகிய நீ, எனது மதியே பார்வதிதேவி, பிராணன்கள் கூடச் செல்லும் பிரமத கணங்கள், தேகமே ஆலயம், உண்பது நைவேத்தியமாம், நடத்தல் வலம் வரல், துயிலல் நிட்டை. மற்றும், யாது யாது யான் செய்கின்றேனே அது அனைத்தும் சம்புவே! உனது ஆராதனையாம்,"

என்றருளிச் செய்துள்ளார். வைதிக சைவமத மேற்கொண்டு இடையறாது பூசை புரிந்துவந்த செகத்குரு சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகளும்,

இதுபோன்றே முற்றத்துறந்து பற்றெலாம் விடுத்த பட்டினத்தடிகளும்,

"எட்டுத் திசையும்" என்று தொடங்கி,

"பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகர்" என முடித்த செய்யுளால், வெளிப் பூசையை சிறிது தாழ்த்தி,

"முட்டற்ற பூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே"

என்று பாவனாதீதப் பரம்பொருட் பூசையைக் கூறியுள்ளார். ஆசார மென்பதும் பலவகையா யனுட்டித்து வருதல் ஆசாரமாயினும், எல்லா ஆசாரத்தையும் விடுதலும் பெரும் ஆசாரமென்றும் பெரும்பத்தி யென்றும் நூல்கள் கூறுகின்றன.

இதனையே,

"சமயா சாரசங்கற்ப விகற்பமும்
அமையா தாங்குல வாசார மானதும்
இமையா தாரும் விடாதவில் வாழ்க்கையும்
அமையார் தோளாய் விடுதலா சாரமே"

என்று தேவிகா லோத்திரம் கூறுகின்றது.

இவ்வாறே, "நாரதனே ஆசார மனைத்தையும் ஒழித்த வனாய் அவ்விறைவனை மறந்தவிடத்து பெருந் துன்புறல் பத்தியென்கின்றேன்" என கூறியுள்ளார்.

"கண்களிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே" என்று தமிழ் மறையும் கூறுகின்றது.

என அன்போடு திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்ட அவர்கள், அம்ம! இத்துணைப் பெரியாரென்பதை அறியாது வினவினோம். மன்னிக்கவும். மன்னிக்கவும்.

"பரதத்துவ முணர்ந்தவரா யிருந்தும் மூடன்போல்
உலகில் திரிக" என்று, மநு கூறியவாறு,

இப்போது இருக்கமாட்டார்களென்று எண்ணினோம். இன்று நாங்கள் எய்தவேண்டிய பலன்களெல்லா மெய்திவிட்டோம். தங்களுடைய தரிசனப்பேறும் பெற்றோம். எனப் பலவாறாக வாழ்த்திக்கொண்டும், பார்த்தா லுலகத்தவர்போல் இருப்பர் மனம் பற்றற்றவரே என்று எண்ணிக் கொண்டும் சென்றனர்.

மற்றும், சுவாமிகள் அன்பர்கள் யாரேனும் தம்மைப் பணிந்தால் கண்மூடித் தியானித்துத் தன்னிலையிலிருந்து விடுவர். இதுவே பெரியாரின் பெருங்குணம். என்னை? வணக்கத்தை யேற்றுக்கொள்ளுவோனும் வணங்குவோனும், வணக்கமும், ஒரு பொருளே யன்றி வேறல்ல. உபாதியால் பலவகைப்பட் டிருக்கின்றது. மற்றும் உண்மையாய் நோக்கில் வணக்கத்தை யேற்றுக் கொள்வோன் இறைவனே யாவன்; ஏனையோராகார். அதுபற்றியே, அரத்தத்த சிவாசாரியாரும்,

"வணக்கத்திற்கு முடிந்த பூமியாகிய பரமேசுரனைத் தவிர்த்துப் பிறதேவர்கட்கும் வணக்கங் கூறல் மறைகளிலும்

மற்று மெங்குங் காணப்படுகின்றது. ஆயினும், அவ்வணக்கங்களை யேற்றுக்கொள்ள மற்றைய தேவர்கள் வல்லுநராகார். அரசன் முடியைத் திருடிக்கொள்ளினும் அணிந்து கொள்ள முடியாதது போன்று"

என உவமை முகத்தாற் கூறியுள்ளார். ஆதலின், வணக்கமனைத்தும் இறைவன்பாற் சேர்க என்பது சுவாமிகளின் உட்கிடை.

மற்றுஞ், சுவாமிகள் தம்பால்வந்த, தனிகர், வறிஞர், அறிஞர், மூடர், நல்லார், பொல்லார், மெய்யன்பர், பொய்யன்பர், குழந்தை, கூலிக்காரர், தாழ்ந்தோர், யாவரிடத்தும் சமபாவனையே செய்துவந்தன ரன்றி எட்டுணையும் பேதம் வைத்திலர். மற்றும் உலகவுபகாரத்தின் பொருட்டுச் சிறிது விவகாரத்தை மேற்கொண்ட போதும் அவ்வாறே சமபாவனையிலிருந்து வந்தனர். மடம்கட்டி மடமை பெருக்கி, வாய் ஞானம் பேசி, பொருளிரந்து பெருமைதேடி ஞானக்கண் மூடி பிறர்குற்றம் நாடி வாணளை வீணளாகப் போக்குகின்ற போலித் துறவோர்களான புல்லறிவாளர்களிடத்தி லிருக்கின்ற சிறிய தன்மைகளை அறவொழித்து உலக நன்மையின் பொருட்டே அவதாரமாகிய சுவாமிகளிடத்தில் மறந்தேனும் பேதபாவனை வருமோ? வாரா.

இவ்வாறு, கௌதம முனிவர்போன்று ஞானவளம், மாணவர் வளம், அன்புவளம், இடவளம், பொருள்வளம், ஏவல்வளம் முதலிய எல்லா வளங்களும் தவவலியால் தாமே வந்தடையப்பெற்று சிவப் பிரகாசத்தால் விளங்கிக்கொண்டிருந்த இப் பெரியாரின் மகிமையைக் கேள்வியுற்று, கோவிலூராதீனம் வீர சேகர ஞான தேசிகரின் பாதசேகர ராகியவரும், வேதாந்த பாஸ்கரரும், நியாய சந்திரரும், மகாமண்ட

லேஸ்வரருமாகிய வீர சுப்பைய சுவாமிகள் தாம் பாடிய சிவ மகிம்நத் தோத்திரத்தை அச்சிடு நிமித்தமாக வந்து சுவாமி களைத் தரிசித்தனர். இவர்மாத்திரமே யல்லாமல், மற்றும் சிதம்பரம் பொன்னம்பல சுவாமிக ளாதீனத்திற்கு மடாதி பதியாயிருந்த பரஞ்சோதி சுவாமிகளும் மற்றும் கோவி லூரைச் சேர்ந்த பல அடியார்களும் வந்து சுவாமிகளைத் தரி சித்தனர். அவர்களும் சுவாமியின் நிலைமையைக் கண்ணாரக் கண்டு மனமார ஆனந்தித்து சுவாமிகளிடத்தில் அன்பு பாராட்டி இருந்தனர். சுவாமிகளும் அவ்வடியார்களிடத்தில் கனிந்த பேரன்பு பாராட்டி வந்தனர். புத்த பகவான்போல எல்லா வுயிர்களிடத்தும் அன்பு பாராட்டிவந்த சுவாமிகளுக்கு அடியவர்பால் அன்பினை யமர்த்துதலுமோர் அதிசயமாமோ?

## சிவஞான தீபம்.

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகு
மிலகுமுயி ருடலனைத்து மீசன் கோயில்"

என்பதை அகமகிழ்ந்துணர்ந்து தன்னைப் போன்று எல்லா வற்றையும் யாரையும் யாண்டும் சமமாய் பார்க்கின்ற ஞானக் கண்ணுடையா ராதலின், இச் சுவாமிகளுக்கு, மடங்கட்டி, அடம்நட்டு, கடன்பட்டும், இடம் பெருக்கும் போலி வேதாந் திகளுடைய விஷமப் பார்வை தோன்றுவதுமுண்டோ? மற் றும் சம்பிரதாயம் பற்றியேனும், மரபு பற்றியேனும், மற் றும் பலமதம் பற்றியேனும் மறந்தேனும் எட்டுணையும் பேத நோக்கம் சுவாமிகளிடம் இன்று. இவ்வாறு பலதேசத்தி லிருந்து பலவித சம்பிரதாயத்திலிருந்து பல மதத்திலிருந்து பலவகை அடியார்கள் சுவாமிகளிடத்தில் எப்போதும் இருந்துகொண்டே யிருப்பார்கள். அவர்க ளனைவரையும் சம மாய்ப் பார்த்து ஆதரித்து அன்பு பாராட்டுவர்.

## சுவாமிகள், இந்நூலாசிரியராகிய காசிவாசி சிவானந்த யதீந்திர சுவாமிகளுக்கு ஆசீர்வாத மளித்தல்.

மற்றும், இச் சரித்திர மியற்றுவதற்கு எமக்கு நுண்ணியமதி வருமாறு அருவாயிருந்து அருள்செய்த கரபாத்திர சிவப்பிரகாசப் பெருமானுர் ஒரு சமயம் யாம் வேனிற்காலத்தில் குளிர்ச்சியை முன்னிட்டு நீலகிரிக்குப்போய் வருமாறு உதவி புரிந்ததுடன் யான் காசிக்கு வடமொழி பயின்றுவரச் செல்லுங்கால் சுவாமிகளை வணங்கி, ஆசீர்வதிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, சுவாமிகள் கண்மூடி மனத்தை உள்ளொளிப்பிழம்பி லமைத்துக்கொண்டு மனமார ஆசீர்வதித்து அருள்புரிந்தனர். மற்றும் பல சமயத்திலும் எம்மிடத்தில் பேரன்புடையராய் இருந்தனர் அவ்வருளுக்கு யான் பாத்திரரானதால், சுவாமிகள்பால் இவ்வொழுக்கங்களைக் கண்டுங் கேட்டும் இச் சரித்திரத்தை எழுதலானேன்.

சுவாமிகள் எல்லாவுயிர்களிடத்தும் ஒரே தன்மையாயிருந்து பிறருக்குள்ள பசியை தமது பசியென்றும், பிறருடைய நோயைத் தமது நோய்போன்றும் போற்றும் அரிய பெரியார். இதுவே பெரியார் சீலம்.

அதுபற்றியே,

திருக்குறள்.

“ அறிவினு னாகுவ துண்டோ பிறிதுநோய்
தந் நோய்போற் போற்றாக் கடை”

என்றார் பொய்யாமொழிப் புலவர்,

இவ்வாறே,

அருட் பிரகாசம்.

"உயிர்நித்த மென்றறிந்தாலு நல்லோர் பல்லுயிர துற்ற
துயருக்கிரங்கல் புதுமை கொல்லோ வருட்டோன்ற லந்நாள்
செயிருற்ற தேவர் முறைகேட்டிரங்கித் திருவுளத்து
டயர்வுற்று குத்தகண் ணீரக்கமாடிணி யாயிடினே"

என்று கூறுகின்றது,

அகாலத்தில் யார் வரினும் முன்னர் அவர்கள், பசியுடையாரெனத் தெரியில் தாமே அடுப்பு மூட்டி அன்னம் சமைத்து தாயினு மினிய இன்சொல்லுடன் அவர்களுக்குப் படைத்துத் திருப்திசெய் தருளுவர் இத்தன்மைய பெரியோரே எல்லா முணர்ந்த தத்துவ ஞானியாவர் இவரே யாவராலும் தொழற்பாலர்.

அதுபற்றியே,

"எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந் தம்முயிர்போல்
எண்ணியாங்கே ஒத்துரிமை யுடையவரா யுழைக்கின்றார்"

என்பது முதலிய செய்யுளால் தமது உண்மைக் கருத்தை சிதம்பரம் அருட்பிரகாச வள்ளலாரும் வெளியிட்டருளினர்.

மற்றும், "அனைத்துயி ரொன்றென் றெண்ணி யரும் பசி யெவர்க்கு மாற்றி" என்றற் றொடக்கத்துப் பெரியாருரையும் இதையே வலியுறுத்து கின்றது.

இஃதன்றியும்,

"ஈசனுக் கன்பில்லா ரடியவர்க் கன்பில்லார்
எவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கு மன்பில்லார்"

என்னுந் திருவிருத்தத்தால் உயிர்கண்மாட்டு அன்பிலாரைப்

பலவகையானும் வெறுத்துக் கூறுகின்றது சிவஞான சித்தியார் என்னும் நூலும்,

இவ்வாறே, எல்லா வுயிர்களும் யானென்றும், யானே எல்லா உயிர்களென்றும், தன்னைப்போன்று பிற வுயிர்களையும் காண்பவனே உண்மைநோக் குடையவன் எனக் கண்ணபிரானும் கூறியுள்ளார். விரிப்பதிலென்? சுகம்பிரமம்போல் எல்லா வடிவாயு மிருக்கின்ற பிரம சொரூபமே யன்றி இப் பெரியார் வேறலர்.

"பிரமத்தை யுணர்ந்தோன் பிரமமே யாவன்"

என்று முழங்குகின்றது மறையும்.

சுவாமிகளிடம் வருமன்பர்கள் சுவாமிகட்குப் பலவகைக் கனிகளும், பலவகைச் சிற்றுண்டிகளும், பலவகை சித்திரான்னமும், மற்றும் பலவகைத் தின்பண்டங்களும் அளவின்றி தினந்தோறும் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டே யிருப்பார்கள். இறைவனருள் பெறில் இல்லாத தொன்றுண்டோ, அஃதின்றேல் உள்ள தொன்றுண்டோ, தின்பண்டங்களும் பல பண்டங்களும் கனிகளும் சுவாமிகளின் இருப்பிடத்தில் எப்போதும் இருந்துகொண்டே யிருக்கும். அங்கு வருகின்ற அடியவர்களும் அன்பர்களும் ஞானிகள் பிரமானந்தத்தை யுண்டு தேக்கல்போல் அவைகளை உண்டு தேக்குவார்கள்.

மற்றும், சுவாமிகள் அவ் வன்ன முதலியவைகளை வந்த அடியார்களுக்கும் அன்பர்களுக்கும் தாமே யெடுத்துப் பரிமாறி சாமி நன்றாய்ச் சாப்பிடட்டும்; நன்றாயிருக்குஞ் சாமி; இன்னுங் கொஞ்சம் சாப்பிடட்டும்; சும்மா சாப்பிடட்டும் என்று இன்சொல் இயம்பி உண்ணுமாறு செய்வார்கள். இப் பெரியாரின் அன்பும் தயையும் அருளு மீகையும் மற்று யாரி

டத்திலும் கிடைப்ப தரிது. அன்னம் போதும் என்று யாரே னும் ஒருவர் சொன்னால், சாமி என்ன இப்படி சொல்லுகிறது; அதுதானே கூடாது; நன்றாய்ச் சாப்பிடட்டும் என்று பல வாறு வார்த்தை சொல்லி உண்ணவைப்பார்கள். சில போலி வேதாந்திகள் போன்று எவராயினும் ஏதேனும் ஒரு பொரு ளைக் கொண்டுவந்து கொடுத்தால் மடியிலெடுத்து மறைத்து வைத்தல், பெட்டியிலெடுத்து நிறைத்துவைத்தல், சட்டியி லெடுத்து உறைத்து வைத்தல், பரிமாறுங்கால் பந்திவஞ்ச கம், தந்திரச் சாடைகாட்டல், மந்திரம்போல் இரகசியம் பேசி பட்சபாதமாய் பரிமாறல் முதலிய அற்ப குணங்கள் சுவாமிகளுக்குப் பிறப்புத்தொட்டே யில்லை. ஆகலின் இப் போது மாத்திரம் வருவதற்கும் இடமுமுண்டோ? சாமி கட்கு வண்டினஞ் சிறிது சிறிதெனப் பூக்களில் தேனெடுத் துண்ணுமாறு மதுகரி பிட்சையெடுத் துண்ணுதலே மிகப் பிரியம்.

பொன்னேரியி லிருந்த ஒரு முதலியார் தனது புத்தி ரியை பல வருடங்களாகப் பேய்பிடித்து எவ்வித மந்திரங்க ளாலும் நீங்காதது கண்டு அம் முதலியார் தமது புதல்வி யைச் சுவாமிகளின் சந்நிதானத்திற்குக் கொண்டு வந்தனர்; சுவாமிகள் அப்பெண்பாலை நோக்கி, பெண்பாவாய், நீயே யொருபேய்; நினக்குமொரு பேயுண்டோ? என்று ஐந்து கணநேரம் கண்மூடி மௌனியாயிருந்து விழித்து அப் பெண்பாலை நோக்கி, அம்மா, போய்வரட்டும்; ஒன்றுமில்லை; சுகமாய் போய்விடுமம்மா; போய்வரட்டும் என்று அருளிச் செய்தனர். உடனே அவ் வம்மையாருக்குச் சகல பீடைக ளும் நீங்கிச் சுகமுண்டாயிற்று. மதப்பேய் சாதிப்பேய் முத லிய பெரும்பேய்களைத் தமது திருநோக்கு மாத்திரத்தானே

போக்குகின்ற இப் பெருமானுர்க்கு பொய்ப்பேயை மாற்று தனுமோர் புதுமையாமோ?

மற்றும் ஒரு அன்பராகிய தாருவாடி அம்மையார் என்பவர் சுவாமிகளைப் பணிந்து, சுவாமின், யான் இராமேசுரம் யாத்திரை போய்வரல் வேண்டும்; ஆதலின், ஆணை யளித்தருளல் வேண்டுமென்று வேண்ட, அதற்குச் சுவாமிகள், அம்மா, இப்போது வேண்டாமம்மா; இப்போது வேண்டாமம்மா என்று திருவாய் மலர்ந்தருளினர். அதற்கு அவ் வம்மையார், சுவாமின், தங்களுடைய ஆக்ஞை அடியாள் தலைமேலிருக்கின்றது; ஆனுல், இப்போது அநுகூல மிருத்தலால், போய் வரவேண்டு மென்று நினைக்கின்றேன் என்றனர். அதற்கு சுவாமிகள், அம்மா, அப்படியா? அப்படியே? போய்வரட்டும்; அம்மா போய்வரட்டும்; நன்மையுந் தீமையும் அனுபவிக்கத்தானே வேண்டும்; அம்மா, போட்டும், போட்டும் என்றருளினர். அதைக் கேட்டுக்கொண்டு உடனே இராமேஸ்வர யாத்திரை போயினர். போய் அங்கேயே விஷபேதியில் இறந்து விட்டனர்.

குருடுவாடி ஒரு தபாற்சாலைத் தலைவர் ஞானுசிரியர் வேண்டுமெனப் பண்டரிநாதனைப் பலகால் வழிபட்டு வந்தனர். அவ் வழிபாட்டின் பயனுக,

"தொண்டரைத் தாமே தூய கதியினிற் சேர்ப்பன்"

என்ற திருவாக்கின்படி ஒருநாள் இரவு அவருடைய கனவில் பண்டரிநாதர் தோன்றி, அன்ப, உனக்கு சென்னைமாநகரில், பட்டினத்தடிகள் போன்ற துறவுடையவரும், தட்சிணுமூர்த்தி போன்று வாக்கிறந்த பூரணமாய் மனக்கப்பாலாய் எல்லாமா யல்லவுமா யிருந்தனை யிருந்தபடி யிருந்துகாட்டத் தக்கவரும், தாயினு மினிய தண்ணிய குணக்குன்றுனவரும்,

ஞான சமாதியில் நிலைத்தவரும், சுரோத்திரியரும் (நூல்களை யுணர்ந்தவரும்) பிரம நிட்டருமாகிய மகான் ஒருவர் இருக்கின்றார்; அங்குச் செல்வாயென திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே அவர் தாயினிடஞ் செல்லுஞ் சேயைப்போலவும், ஆவினிடஞ் செல்லுங் கன்றைப்போலவும் பேராவலுடன் அக்கணமே வந்து சுவாமிகளைத் தரிசித்தனர். அவரைச் சுவாமிகள் சோதிக்கக்கருதி பலதினங்களாக நன்கு நோக்காமலும் ஒன்றும் பேசாமலும் இருந்துவந்தனர். அவரும் விடாமலே ஒரே வைராக்கியமாக சுவாமிகளையே சரணடைய வேண்டுமெனக் கருதி இரண்டு மூன்று ஆண்டு மௌனவிரதத்துடன் இருந்து வந்தனர். சுவாமிகள் பின்னர் கிருபைகூர்ந்து மறை முடியின் மாவாக்கியப் பொருளை உபதேசித்தனர். அவ் வுபதேசத்தைக் கடைப்பிடியாக் கொண்டு பெரும்பதவி யடைந்தனர். ஆதலின் சுவாமிகள் அவருக்கு வைராக்கிய சுவாமியென்று பெயரிட்டனர். அவ்வாறே அவரும் பெரும்பதம் பெற்றனர்.

மற்றொருதினம், வியாசர் பாடியில் சித்திராபௌர்ணமி அபிடேகத்தன்று சுவாமிகளுடன் பல அடியார்களு மிருக்கும்போது, அறியாமையாற் பரீட்சிக்க நினைத்த ஒரு மூடன் தூபம்போடும் கலசத்தில் தசாங்கப் பொடிக்குப் பதிலாக மிளகாய்த்தூளைக் கொட்டி விட்டனன். அப்புகை நெடியேற ஏனைய அடியார்கள் பொறுக்கமுடியாமல் ஓடி விட்டார்கள். சுவாமிகள் மனதை நிறுத்திக்கொண்டு யோகநிட்டையிலிருந்து விட்டனர். யோகவுளவைத் தெரிந்த சுவாமிகட்கு போகமிளகாய்ப்புகை யாது செய்யும்? இவ்வாறு செய்த அவனையும் மிக அன்புபாராட்டி யாண்டனர். சுவாமிகளின் அன்புதான் என்னே! குணமகிமைதான் என்னே! சுவாமிகளின் குணமகிமைகளை நேரிற் கண்டிருப்பரேல் திருவள்ளுவ தேவ

ஞரும், "குணமென்னும்" என்றற் றொடக்கத்து குறளை "வெகுளிகணமேயுங் காண்ப தரிது" என்றருளுவார்.

மற்றும், சுவாமிகள், யார் யார் எவ்வெப்பொருளைத் தமக்குக் கொடுக்கினும், அது பெரிதினும் பெரிதாயிருந்த போதிலும் அரிதினு மரிதா யிருந்தபோதிலும் உடனே பக்கத்திலிருக்கும் அடியார்களுக்குக் கொடுத்து விடுவர். சுவாமிகள் கையைத் தலையணையாகவும் தரையைப் படுக்கையாகவுமே உபயோகித்து வந்தனர்.

இதையே,

"பூவணை யாகி வானம் பொருந்துமேற் கட்டி யாகி"

என்றற் றொடக்கத்துச் செய்யுளால் மகாராசா துறவுங் கூறுகின்றது. இதுவே வேண்டாமைச் செல்வமாம்.

மற்றும்,

"தறையிற் கிடப்பும் இரந்துண்ணு மோடும் சகமறிய
குறைவற்ற செல்வமென் றே கோல மாமறை கூப்பிடுமே"

எனக் கூறியுள்ள செல்வத்தை நிறைய வுடையவர் சுவாமிகள்,

பட்டினத்தடிகளுக்கு தலைக்கொரு கல்லை வைத்துக் கொண்டு சயனித்திருந்தனர் என்பது முதலிய சரிதையாவது உண்டு அதுவும் சுவாமிகள்பாற் கேட்டிலேம்.

கல்லின்மேலமர்ந்து, தன்னிலையில் மனதைக் கல்லாக்கி, பிறர் மனக்கல்லைக் கரைத்து, கல்லார்க்குங் கண்ணளித்து, கருணையே ஒரு வடிவமாக வந்த இச் சிவப்பிரகாசப் பெருமானுர் தமது அநுபவ நிலையை உலகமுமடைந்து உய்யுமாறு கருதி, ஞானநூல்கள் பல இருப்பினும் ஞானத்திற்குச் சகாயமாகிய நூல் ஒன்று ஒருதலையாக வேண்டுமென்று கருதியும், முன்னர், தாம் இல்லறத்திலிருந்து துறக்க விருப்

புடையரா யிருக்கும்போது தமது தமையனாராகிய சிவ ஞானப் பத்தர் தமது பெயரை மாருக்கி சுவாமிகளின் ஞான நூல்களை யெடுத்து கிணற்றிற் போட்டுவிட்டார், அதுவும் அப்போது நமக்கு துறவடைய ஒரு துணைக்காரணமா யிருந் ததால் நாம் இப்போது முதலில் ஞான நூல்கள் செய்து வெளி யிடல் வேண்டுமென்று நினைத்தும், "ஞானசகாய விளக்கம்" என்றோர் சிறிய நூலைச் செய்து தமது அன்பர் பலர்க்கும் போதித்து வந்தனர். இந்நூலை நோக்கில், சுவாமிகளின் அநு பவநிலை நன்கு விளங்கும். பின்னர், சிறிய மனன சிந்தா மணி யென்றொரு நூலையும் திரட்டி யருளினர். மற்றும், பெரிய மனன சிந்தாமணி யென்றொரு நூலுந் திரட்டி யரு ளினர். இந் நூல்கள் அறிவுடையார்களுக்கு பவக்கடலைக் கடக்க ஒரு தெப்பமாகும்.

இவ்வாறு சுவாமிகள், மனத்தாலும், வாக்காலும், திரு மேனியாலும், மற்றும் பல அருட்டிறத்தாலும் பல்லோர் களுக்கும் அநுக்கிரகித்துக் கொண்டிருக்குங்கால், ஆசிரியர். கோ-வடிவேலு செட்டியார், சீனிவாச நாயகர், சண்முக முத லியார், முத்தியாலுப் பேட்டைக் கல்விச்சாலை உயர்தர தலை மை யுபாத்தியாயராகிய திருவாளர் மாணிக்கஞ் செட்டியார், நஞ்சுண்டராவ் அவர்கள், முத்துக்குமாரசாமி என்னும் இல் லற ஞானியார் முதலியோர் சிவப்பிரகாசப் பெருமானரிடம் அளவளாவிக் கொண்டிருக்குங் காலத்தில், சுவாமின், தங்க ளுடைய சங்கமொன்றே ஞானம் வேண்டாமலே முத்தி கொடுத்தற்குரியதா மாயினும் தங்களுடைய சித்திரா பௌர் ணமி விழாவில் பல அறிஞர்களையும், கற்றுணர்ந்த சாதுக் களையும் கூட்டி சாதுசங்க மொன்று நடத்தில் பொன்மலர் நற்றமுடையது போன்று தங்களுடைய அருள் மணம், ஞான மணம், பொறைமணம் முதலிய நறுமணங்கள் உலக மெங்கும் பரவி உலகமுய்யும் என்று நினைப் பூட்டினர்கள்.

“சாதுக்களின் விபூதிகள் பரோபகாரத்தின் பொருட்டே” என்ற வரிக்கும்,

“நல்லவனே கேளுலகுபகாரம் ஞானிகள் விவகாரம்” எனக் கைவல்யநூல் கூறுவது போன்றும்,

“நடுத்தயா விலார்தமை நலியத் துன்பநோ
யடுத்தயா வருந்திரு வடைய யாக்கையை
கொடுத்தயா வரும்புகழ் கொள்வ னேயெனின்
எடுத்தயாக் கையின் பய னிதனின் யாவதே”

என்ற திருவிளையாடற் புராணத் திருவாக்கின்படியும், பரோபகாரத் தொண்டையே உலக நன்மையின் பொருட்டு ஒரு பெரு விரதமாய்க்கொண்ட நமது கரபாத்திரக் கடுந்துறவுடையாருக்கு பிறர்களும் நினைப்பூட்டல் வேண்டுமோ? இவ்வாறே எண்ணிறந்த உலகநன்மை செய்ய வேண்டுமென்னு நினைவுகள் இவர் திருவுளத்தி லுறைந்துள்ளனவாமாதலின்; அங்ஙனமாயினும் இஃதொரு நிமித்தமெனக் கொண்டு சுவாமிகளும் சாதுசங்கம் ஒன்று நடத்தவேண்டுமென்று சங்கற்பித்தனர். இச்சங்கற்பத்தை முடிக்கவேண்டுவது இறைவனது கடனுமன்றோ? என்னை? இறைவன் சங்கற்பமும் தத்துவ ஞானியின் சங்கற்பமும் ஒன்றுமாதலின்.

அதுபற்றியே,

சிவஞான சித்தியார்

“சிவனுமிவன் செய்தியெலா மென்செய்தி யென்றும்
செய்தது எனக்கு இவனுக்குச் செய்ததென்றும்”

என பத்தாஞ் சூத்திரம் கூறுகின்றது.

சுவாமிகள், திருமடங் கட்டல், திருக்கோயி லமைத்தல் முதலிய ஏனைய பலவித தருமங்களிருப்பினும் உலக நன்

மைக்கும், முத்தி நெறிக்கும், பத்திவழிக்கும், சித்திவகைக்கும், புத்திபெறற்கும், மற்றும் உள்ள எல்லா நலங்களுக்கும் சாது சங்கமே சிறந்த காரணமாமெனக் கொண்டனர். அறிவைத் திருத்துவது சாதுசங்கமே யன்றி ஏனையவைகளல்ல. இதையே,

திருக்குறள்.

" மனத்து ளதுபோல காட்டி யொருவர்க்
கினத்துள தாகு மறிவு "

என்று முதற்பாவலர் கூறியுள்ளார்.

மற்றும்,

" சாது சங்கமென வீட்டில் வாயில் காக்கும்
சதுட்டயரு முறவாகிற் றடைவேறுண்டோ" என்றும்,
" அறக்குறைவை நிறைவாக்குஞ் சம்பத் தாக்கு
மாபத்தைச் சுபமாக்கு மசுபந் தன்னைச்
சிறக்குமுயர்ந் தவர்கூட்ட மென்னுங் கங்கைச்
சீதநீ ராடினர்க்குச் செந்தீ வேள்வி
இறக்கரிய தவந்தானந் தீர்த்தம் வேண்டா " என்றும்,

" சத் சங்கத்வே நிச்சங்கத்துவம்" என்றும் வாசிட்ட முதலிய பல நூல்களுங் கூறுகின்றன,

மற்றும் இதற்குப் பிரமாணம்,

அருட்பிரகாசம்.

" உயிருணிறைந்தமலைச், சிலையாதியும் எளிதொன்றுவன் எங்குந் திகழ்ந்தி ரண்டற்று அலையாதிருக்கும் பெருரியோர் தங்கூட்ட [மடைந்தவர்க்கே"

திருவாசகம்.

" அடியேன் உன்னடியார் நடுவுளிருக்கு மருளைப் புரியாய் "

இவ்வாறு சாதுசங்கங் கூட்டிவைக்க உறுதி பண்ணிக் கொண்டு தமது நண்பரும் அன்பருமாகிய ஆசிரியர் கோ-வடிவேலு செட்டியாரைக் கொண்டு அநேக அரிய பெரிய அறிஞர்களை வரவழைத்து பங்குனி மாதம் மூன்று அல்லது ஐந்து நாள் வரு மடியார்களுக்கும் அன்பர்களுக்கும் பலவித உபசாரத்துடன் அன்னமளித்து, காலை மாலை பலவகையான பசனைகளுடன் மறைமுடிக் கொத்ததும் உலக நன்மைக்கு முதற் காரணமானது மான பலவகைச்சமயங்களைத் தழுவிப் பிரசங்க மழை பெய்யுமாறு செய்வித்தனர். அம்மழையால் சென்னைமா நகரிலுள்ள மக்களனைவரும் பெருநல மடைந்து வந்தனர்.

பின்னர், வீர சுப்பைய சுவாமிகள் வடமொழி தென் மொழிகளில் வல்லுநரெனத் தெரிந்து அவர்களுக்கு வேண்டிய நலஞ் செய்துவைத்து ஆன்ம புராணம் என்னும் ஒரு அரிய பெரிய வேதாந்தநூலை தமிழில் மொழிபெயர்க்கச் செய்து, சுவாமிகள்பல அன்பர்களைக் கொண்டு அதை அச்சிட்டு வெளிப்படுத்தினர். மற்றும் ஷை சுவாமிகளைப் பலவாறு உபசரித்து சாது சங்கம் நடைபெறுங்கால் பிரசங்கமும் செய்யுமாறு செய்து அதற்குச் சங்கமூர்த்தியாயமர்த்தி அன்புபாராட்டி வந்தனர்.

பின்னர், தம்முடன் இளமையிலிருந்து மிக்க நண்பரும், தமது ஆசிரியரிடத்தில் ஒரே காலத்தில் வேதாந்த சிரவணம் பண்ணியவரும், வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் முதலிய பல பாஷைகளைக் கற்றுணர்ந்தவரும், பல அடியவர்களுக்கும் அறிஞர் களுக்கும் வேதாந்தநூல் தருக்கநூல்களைப் போதிப்பவருமாகிய அரங்கநாதம் பிள்ளை யவர்களைக் கொண்டு தத்துவாநு சந்தானம் என்னும் அத்துவித நூலைத் தமிழில் மொழி பெயர்க்கச் செய்து தாமே அச்சிடுவித்து வெளியிட்டனர்.

இவ்வாறு, சில ஆண்டுகள் நடாத்திவந்த பின்னர், சுவாமிகள் தமது ஆசிரியராகிய இரத்தின தேசிகர் அவர்களிடத்து சில அன்பர்கள் முன்னர் தாம் வேதாந்த சிரவணம் பண்ணி வந்தபோது வியாசர்பாடியில் சாதுக்களுக்கோர் ஆசிரமம் அமைக்கில் நலமென வேண்டிக் கொண்டனர். இதைக்கருதியே மகான். சை - இரத்தினசெட்டியாரவர்களின் விதேக முத்திப் பாமாலையில், ஒரு அன்பர்,

"சென்னைவியா சர்பாடி க்ஷேத்திரத்திற் சாலையொன்றே
யின்னலின்றிக் கைகூடி லென்னேசா—பன்னரிய
சாதுக்களைச் சேர்த்துச் சற்சங்கங் கூட்டுவித்துத்
துற்சங்கம் நீத்துய்வேன் றேய்ந்து"

என ஒரு வெண்பா பாடியுள்ளார். அந்த ஞாபகம் சுவாமிகளின் திருவுள்ளத்திற் றோன்றியது கொண்டும் தமது ஆசிரியருக்கு, வியாசர்பாடியில் சாதுக்களுக்கு ஆசிரமமொன்று ஏற்படுத்த வேண்டும் என்னும் கருத்திருந்தமை பற்றியும், அடியார்கள் பலரிருந்து ஏகாந்தமாய்ச் சிரவணம் முதலியவை செய்துகொண்டு மனோலயம் பழகிவருமாறு செய்து வைக்க வேண்டு மென்னும் அன்பாலும், தமக்கும் தனித்திருப்பதற்கோரிடம் வேண்டுமென்னும் எண்ண மிருந்ததாலும், அடியவர்களுக்கு, வடமொழி தென்மொழி பயின்று வருமாறு வேதாந்த குருகுலம் ஒன்று ஏற்படுத்த வேட்கையிருந்தமையாலும், ஒரு ஆனந்தாசிரமம் வேண்டு மென்று சுவாமிகளின் திருவுளத்தில் ஒரு தலையாக நினைக்குங்கால்,

"ஞாலமுண்டவன் தலைமிசை சுமப்பன்
மெய்ஞ்ஞானி வேண்டுவ வெல்லாம்"

என்னும் பிரமகீதையின் திருவாக்கின்படியே, இறைவன் செலுத்த, சுவாமிகளின் தொண்டராகிய அம்பலவாண செட்

டியார் என்னும் ஒரு உண்மையன்பர், விஷ்ணு ஆயிரங் கமல மலர்களை அரனுக் கருச்சித்தது போன்று ஆயிரம் ரூபாய்கள் கொண்டுவந்து சுவாமிகளின் திருவடியில் அருச்சித்தனர்.

பின்னர், அநேக அன்பர்களின் பொருளுதவியும் பெற்று வியாசர்பாடி நாகர் கோவில் தடாகம் முதலாகவுள்ள தோட்டத்தைக் கிரயத்திற்கு வாங்கினர்.

வைராக்கிய சதகம்.

"காணியீ தெமதிட மீது என மணக்கருதி
மண்ணுகின்ருய்" என்றும்,

பாகவதம்.

"மண்ணினுந் தனத்தினும் மனைக்கு வாய்த்தநற்
பெண்ணினும் மகவினும் பெரிய பேரினும்
துண்ணென விழைவினைத் துறந்த தூயரே
விண்ணினு மின்புடன் விளங்கி மேவுவார்" என்றும்,

"பற்றிலை யாயின் அவையினின் விருப்பேன்" என்றும்,

தாயுமானுர்.

"இடம்பொரு ளேவலைக் குறித்து மடம்புகு நாயென்ன" என்றும், பெரியார்களும் பலநூல்களும் மண்ணுசையைப் பழித்திருப்பினும் தாமரையிலைமேல் தண்ணீர்போல் சகத்தொடுங் கூடிவாழ்வார் என்றதனுலும் பல அன்பர்களின் வேண்டுகோட்கிணங்கிப் பரோபகாரத்தையே மேற்கொண்டு ஒழுகுபவராதலானும், உடல் நலம், பெருமை, புகழ்முதலியவைகளைச் சிறிதும் வேண்டாது பாமரரெனக் காண்பித்து பண்டிதத் திறமை காட்டாதவராதலானும் பாரகாரிய மானுனும் பரர்க்குபகாரமாகவே செய்வர் தீர்ந்த நிலைவிடார் சீவன் முத்தராதலின், மேற்காட்டியவைகளின் கருத்து துறவை மாத்திரம் மேற்கொண்டதா மென்றுணர்க.

இவ்வாறே, பெண்பாலார் சுவாமிகளைச் சரணடைந்து வருதலும் சுவாமிகளின் மனதைச் சிறிதளவேனும் சலிக்காத படி செய்துவந்தது.

## வேதாந்த சூடாமணி.

"பிராரத்தவினை வாசனையால் உண்ணற்குரிய பல பொருள்களைக் கவர்ந்து கொண்டும், மௌனமுற்றும், பல திறங்கள் மொழிந்தும், உபதேச நெறிபுரிந்தும், பரதவித்தும், மகிழ்ந்தும், மிகுவேடங்கள் புனைந்தும், கலை துறந்தும், உடையுடுத்தும், கல்விபல பயின்றும், கல்லாது மாதர் முயக்கிடை யுற்றும் இவ்வாறு அலகிறந்த நடையுறினும் அருள்விளையாட்டென்றே அச்சீவன் முத்தர்களை நம்புக; ஐயமொரு சிறிது முறுமல். என்று கூறுஞ் சுருதி வாக்கியத்தைக் கைக்கொண்டொழுகுக. அறியாமையாற் குற்றம் நோக்கில் பிரம விஷ்ணு முதலியோர்வரை குற்ற முடையர்களாகத் தோற்றப்பட்டு நாத்திகர்களினுங் கீழாய்ப் பெரு நரகடைதல் பயனுமென்றுங் கொள்க.

இவ்வாறு அநேக அன்பர்களின் வேண்டுகோட் கிணங்கி வியாசர்பாடியில் வாங்கிய இடத்தில் சாதுக்களின் ஆசிரமத்தின் பொருட்டு சீனிவாச நாயகர் முதலிய அன்பர்கள் ஒரு ஆசிரமம் அமைக்க வேண்டுமென்று சுவாமிகளை வேண்ட அதற்கு சுவாமிகள் அது தானே நடக்கும் என்று திருவாய் மலர்ந்தருளினர். அச்சங்கற்ப வலியால் பொருள் கொடுத்தனர். சிலர், பெரும்பணி யியற்றினர். சிலர், கட்டிடத்திற்கு உருவெழுதி யமைத்தனர். சிலர், வேண்டிய மரங்கள் கொடுத்தனர். சிலர், வேண்டிய சுண்ணம் கொடுத்தனர். சிலர், வேண்டிய இரும்புச் சாமான்கள் கொடுத்தனர். இவ்வாறே எல்லாப் பணியாளர்களும், அவ் வவ்வர்களே, சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்றும், சில சமயத்தும் இரவும்

பகலும் விடாமுயற்சி யுடையவர்களாயிருந்து ஒரு ஆசிர மத்தைச் சுவாமிகட்கு முடித்து வைத்தனர். சுவாமிகள் அப் பணியாளர்களை அப்பா, அம்மா? என்றே யழைத்து அன்பு பாராட்டுவர். இங்ஙனமன்றி ஏனைய போலி வேதாந்திகள் போல் பணத்தையே பரப்பிரம மென் றும், குலத்தையே குருவென்றும், இடம்பத்தையே அலங் காரமாய்க் கொண்டுந் தெருவுகடோறும், வீடுகடோறும் சென்று, இல்லமே முத்தி யென்றும், மனையே ஞானமென் றும், போகமே முத்தி யின்பமென்றும் உடலை நித்திய மென்றும் குடும்ப வலையுட் சிக்கி கட்டுண்டு பசுப்போற் கிடக் கின்றவர்களையும், கண் மூடப்பட்டும், வாய்பேச முடியாத தாகியும், காது செவிடுபோலாகியும் வாழ்ந்து கொண்டிருக் கின்ற திரவியச் செருக்குற்ற தனமுடையார்களையும், பல வகையாகப் போற்றி அடிமைபோல் பழகி பல்லைக்காட்டி சொல்லை நீட்டி, வெட்கம், நாணம் முதலியவைகளை யோட்டி பிறர்போல் ஒரு சிறிது பொருளையு மிரக்காமலே தவவலியால் வேண்டாமலே சுவாமிகட்கு வந்து குவிந்ததென்று காண்க. மற்றும், இவர் திரவியத்தைத் தமது திருக்கரத்தாற் றொடாத விரதமுடையா ரென்பதும் உலக மறியும்.

இவ்வாறு, சுவாமிகளின் மகிமை நாற்றிசையும் பரவிக் கொண்டிருந்தபோது, இந்தியாவிலுள்ள பெரியார்களைக் கண்டு தத்துவங்களின் உண்மை யறிந்தொழுக வேண்டு மென்று எண்ணி புறப்பட்ட அமெரிக்கன் சார்ட்டரிஸ் என் னும் ஒரு மேனாட்டுப் பெரியார் பல இடஞ்சென்று தேடிப் பார்த்துங் கிடைக்காது சென்னைமா நகருக்கு வந்து சுவா மிகளின் குணாதிசயங்களைக் கேள்விப்பட்டு சுவாமிகளிருக் கின்ற செங்கல்வராயர் தோட்டத்திலுள்ள மகிழமரத்தடி யாசிரமத்திற்கு வந்தனர். வந்து சுவாமிகளைப் பன்முறை

பணிந்து தத்துவ விஷயமான அநேக உண்மைகளைக் கேட்டனர். அதற்குச் சுவாமிகள் மனதின் விரிவையும் மனதின் ஒடுக்கத்தையும் பலவகைப் பிரமாணங்களாலும் யுக்தியாலும் அநுபவத்தாலும் எடுத்துக் கூறியருளினர். அதைக்கேட்ட அம் மேனுட்டுப் பெரியார் சுவாமிகள்பால் பேரன்புடையவராய்ச் சுவாமிகளையே குருவாகக் கொண்டு சுவாமிகளுடன் சின்னுள் வசித்திருந்து இரவில் மனேலயத்திற்கு வேண்டிய வழிகளை நன்ருய்த் தெரிந்துகொண்டு மனேலய சமாதியைப் பழகிவந்தனர். இவ்வாறு இவர் அரும்பாக்கம் சுவாமிகளுடன் சுவாமிகளின் ஆணையால் சிலநாள் லக்கூர். கிருஷ்ணப்ப செட்டியாரின் பங்களாவில் இருந்து வந்தனர். அங்கு முறையாய் ஒருநாள் அரைநாழிகை நேரம், மற்ருெருநாள் ஒருநாழிகை நேரம், மற்ருெரு நாள் இரண்டு நாழிகை நேரம் இவ்வாறு படிப்படியாய் பலநாழிகை நிருவிகற்ப சமாதியை யடைந்துவரும் வலியைப் பெற்றவராயினர். ஆனல் இத்துரையவர்கள் இந்தியாவிற்கு வந்து அரிய பெரிய ஞானமுறைகளைத் தெரிந்துகொண்டு அமெரிக்காவிற்குப் போய் அங்குள்ளாருக்கு அதைத் தெரிவிக்க விருப்ப மிருந்தது. ஆனல் ஞானசமாதி கைவரப் பெற்று விட்டோம் ஆதலின் இப்போது நமது நாட்டிற்குப் போகவேண்டுமென்னும் இச்சையேயில்லா தொழிந்தது. ஆயினும் இதுவே நமக்குப் பெரும்பேறெனப் பெற்றுச் சின்னுளிருந்துவிட்டு மீண்டும் அமெரிக்காவிற்குப் போய்விட்டனர். மேனுட்டுப் பெரியாருக்குப் பேச்சாடுகின்ற பெருந்துணையாயிருந்தவர் டாக்டர், இராசா பகதூர் என்பவர். இவ்வாறு சங்கற்ப மாத்திரத்தால் வியாசர்பாடியில் ஆசிரமமமைத்து, அதற்கருகில் இன்னுஞ் சில சமாதி நிலயங்களையு மமைத்துக் கொண்டு வியாசர் பீடத்தில் வியாசர் இருந்தது போன்று

வியாசர் பாடியில் வியாசரின் வேதாந்தமரபு படிப்பையே மேற்கொண்டொழுகி இடையறாது சாதுக்கள் போஜனமும் அன்பர்களுக்கு அமுதளித்தலும் சித்திரா பௌர்ணமியில் அநேக அன்பர்களால் நடத்தப்பட்ட சுவாமிகளின் அபிடேக ஆராதனை முதலிய திருவிழாவின் வைபவங்களை வியாசரே வகுத்துக் கூறுவதற்கு வல்லுநரன்றி, மற்றெவராலும் வகுத்துரைத்தற்காமோ? இராமனிருந்த இடம் அயோத்தி யென்பதுபோல் ஈசனும் ஞானியிருந்துள விடத்தே யிருப்பது முத்திதான் என்பதற்கு மாறுபடுதலு முண்டோ?

பின்னர், சுவாமிகள் தாம் நாலைந்து ஆண்டுகளாக நடாத்திவந்த சாதுசங்கத்தை எப்போதும் நிலையாய் நடத்திவர வேண்டுமெனக் கருதி முன்னர் சாது சங்கம் நடத்த முன்னின்றவர்களைக் கொண்டே சூளை வேதவிநாயகர் வீதியிலுள்ள சாதுசங்கத் தோட்டத்தை, சங்கம் நடத்துவதற்கு பல அன்பர்களின் பொருளுதவியால் விலைக்கு வாங்கி அதில் அச் சங்கத்தை நடத்திவருமாறு சில அன்பர்களை அதற்குத் தலைவர்களாக்கி உரிமை கொடுத்துத் தமக்கு மிக்க பிரியமான வரும் ஆன்மபுராணம் மொழி பெயர்த்தவருமாகிய வீர-சுப்பைய சுவாமிகளை சங்கமூர்த்தியாக அமைத்து நடத்திவருமாறு செய்தருளினர். அவ்வாறே இரண்டு ஆண்டு தாமுஞ் சென்று பங்குனி மாதங்களில் செங்கல்வராயர் தோட்டத்தில் நடத்திவந்தபடி அச் சாது சங்கத் தோட்டத்தில் எண்ணிறந்த அடியார்களையும் அறிஞர்களையும் வரவழைத்து ஐந்துதினம் பலவகையான உபந்நியாசங்கள் நடைபெறுமாறு செய்து எண்ணிறந்தவர்களுக்கு அன்னமளித்து வருவதுடன் அடியார்களின் விழாவும் நடக்குமாறு செய்தருளினர். அவ்வாறே அத்துவித மதத்திற்கு ஆதி குருவாகிய உலககுரு வென்னும் சங்கரபகவத் பாதரின் ஜயந்தியும் நடத்தி வருவதுடன் அன்றிர

வும் சங்கரபகவத்பாதர் திருவுருவ வீதியுலா மகோற்சவமும் செய்து வந்தனர். சுவாமிகளுக்கு திருவொற்றி யூரிலிருந்த கிருஷ்ணனந்த யதீந்திர சுவாமிகள் பரமாசாரியராவர். அச் சுவாமிகளோ செகத்குரு பீடத்தைச் சார்ந்த அந்தணத்துற வியார் எனத் தெரிகின்றது.

இவ்வாறு, சுவாமிகள் பரோபகாரத்தை முன்னிட்டு மெய்வருத்தம் பாரார் என்றவாறு முயற்சித்து சாதுசங்கத் தையும் நிலை நிறுத்திவிட்டு வியாசர்பாடி ஆசிரமத்தை மேலும் மேலும் விருத்திசெய்ய விருப்புடையராய் தாம் முன்வசித்து வந்த செங்கல்வராயர் தோட்டத்திலுள்ள மகிழ மரத்தடி யாசிரமத்திற்கு வருவதும் வியாசர்பாடி ஆசிரமத் திற்குப் போவதுமாக சிலநாள் இருந்துவந்தனர்.

அக்கால் ஒருநாள் இரவில் வெளிக்குச் சென்றிருந்த சமயம் வழியில் ஒரு விரியன்கத்திரிப்பாம்பு கடித்துவிட்டது. "உன்னை விரியன்கத்திரி கடிக்க என்பது உலகவசை" விதிமுடி வில் விரியன் கடிக்கு மென்பதும் உலக வழக்காம். அங்ஙன மாயினும்,

"ஊழையுமுப் பக்கங்காண்ப ருலைவின்றித் தாழாது ஞற்றுபவர்," என்னுந் தமிழ்வேத வாக்கிற்கியைய இடை யறாது ஊழ் வினையையு மாற்ற பெருந்தவ மாற்றிக் கொண்டு அஞ்ஞான விஷத்தைப் போக்கத் தத்துவஞான மென்னும் பெருமருந்தையுண்ட இப்பெருமானுர்க்கு எனைய விஷங்களும் இடையூ றுண்டாக்க ஆற்ற லுடையனவாமோ? பின்னர் சுவாமிகள் ஒருவரிடத்தும் ஒன்றுங் கூறாது தண் ணீரி லுட்கார்ந்து ஆன்மாவைச் சிந்தித்துக் கொண்டிருந்த னர். அவ் வாசிரமத்திலிருந்த அடியார்கள் உணவருந்துஞ் சமயமானதால் சுவாமிகளைப்பார்க்க சுவாமிகள் அங்கில்லை.

பின்னர் யாவருந் தேடிச் செல்லுங்கால் பரஞ்சோதி சுவாமி யானவர் இச்சிவப்பிரகாசப் பெருந்தகையார் தண்ணீருக்குள்ளிருப்பதைக் கண்டு, சுவாமிகாள், திருமேனிக்கு யாது நேர்ந்தது? என்று பிரார்த்தித்து வினவ, சாமீ, ஒன்றுமில்லை; ஒன்று மில்லை சாமி என அன்போடு மறுமொழி கூறியருளினர். அப்போது சுவாமிகட்கு அருகிலிருந்த அடியாரொருவர் நடந்தவற்றைச் சொல்ல எல்லா அடியவரும் பெருந்துன்புற்று, மாந்திரிகனைத் தேடினரொருவர், பாம்பு பிடிப்பவனைக் கூப்பிட ஓடினர் அநேகர். பச்சிலை பறிக்கச் சென்றார் சிலர். இவ்வாறு எல்லாரும் பரிதபிப்பதை நோக்கி, சும்மா இருக்கட்டும்; ஒன்று மில்லை; சுகமாயிருக்கிறது; ஒன்று மில்லையப்பா; ஒன்று மில்லையப்பா; இதுக்கு ஒரு துன்பு மில்லையே என்று சொல்லிக் கொண்டு எழுந்துவந்து யாவர்களுடனும் உணவருந்தி யின்புற்றிருந்தனர். இவ்வாறு சுவாமிகளிடத்தில் பலவகையான அரும்பெருஞ் செய்கைகள் உண்டு.

அவ்வியாசர் பாடியில் சுவாமிகள் வந்து தங்கும் அடியவர்களுக்கும் தியான முதலியன செய்ய அநுகூலமா மாறு பலவகை சமாதியறைகள் அமைத்து வைத்துள்ளார்.

மற்றும், பாடி யென்னும் ஒரு சிறிய கிராமத்தில் உள்ள ரெட்டியார்கள் சுவாமிகளிடத்தில் மிக்க அன்பு பூண்டவர்களாகி சுவாமிகள் திருநாமத்தால் சிறிய ஆசிரமம் ஒன்று அமைத்து சுவாமிகளை யழைத்துக் கொண்டுபோய் அபிடேக ஆராதனைகள்செய்து மாகேசுர பூசையும் நடத்தி வைத்ததுடன் அவ்வாறே சுவாமிகள் திருநாமத்தால் அடியார்களுக்கு அன்னதானம் என்றும் நடக்குமாறு அக்கிராமத்தார் செய்து வருகின்றனர்.

மற்றும், பலர் ஆங்காங்கு சுவாமிகளின் திருவுருவத்தை வைத்துப் பலவகையாய் வழிபட்டு வேண்டிய பல்னகளையு மடைந்து நலம் பெற்று வருகின்றனர்.

இவ்வாறு, சுவாமிகள் தமது சிவப்பிரகாசத்தால் உலகத்திலுள்ள அன்பர்களின் அஞ்ஞான விருளைத் தொலைத்து, ஞான சூரியன் உதிக்குமாறு செய்துவிட்டு துலக்கமான கண்ணுடியை யடிக்கடி துலக்கினுற் பழுதன்றே என்றவாங்கு பின்னும் எண்ணிறந்த அன்பர்களுக்கு ஞானுேபதேசஞ் செய்து கொண்டு சீவன் முத்திச் சுகத்தை யனுபவித்துக்கொண்டிருக்குங்கால், சங்கரபகவத்பாதர் முதலியோர்கள் தமது தூல தேகத்தை மறைத்துக்கொண்டு சுயஞ் சோதியாய் விளங்குதல் போன்று சிவப்பிரகாசம் உபாதிகளற்றதாய் சுயமாய் விளங்கிக் கொண்டிருக்க விழைந்து,

"கொல்லும் வெங்கொடுங் கூற்றையார் குலைவுறுர் குறுகின்
நல்விருந்து எனவுவந்து எதிர்கொள்வான் ஞானி"

என்னுந் திருவாக்குப்போன்று, கூற்றுடன் நட்புக் கொள்ளக் கருதி, அரிய மெய்ஞ்ஞானத் தீயினுல் அவித்தையா முடலை (காரணவுடலை) நீறுக்கிவிட்டு, பெரிய தூலமுங் காலத்தாற் பிணமாகிவிழு மந்நேரம் நெருங்கியபோது சிறிது திருமேனிக்கு யாறுபாடு தோன்றியது. அக்கால்,

"நீங்கருந் துயர்செய் வளிமுதன் மூன்ற னிலையுளேன்"

என்றவாறே வெளியில் நோக்குவார்க்குச் சிறிது சுவாமிகளின் திருமேனி நோயுற்றது போன்றது எண்ணிறந்த அடியவர்களும், அன்பர்களும், தொண்டர்களும் இடைவிடாது வந்து சுவாமிகளைத் தரிசனஞ் செய்து கொண்டிருந்தனர்.

சுவாமிகளுக்கு உடல் விழுங்காலம் சிலநாளுக்கு முன்னரேயே சிவப்பிரகாசந் தோற்றச் செய்தது. எவ்வா

றெனின்? முன்னர் அடியவர்களுக்கு அமுது சமைக்குந் திருமடாலயத் திருப்பணி நடந்து வருங்கால் உச்சிப்போதில் வாசற்படி யெடுத்து வைத்தபோதே சுவாமிகள், இவ்வேலை இது இருக்கும்போது முடியுமோ என்பது சந்தேகம்; கட்டிடம் வேலை நடக்கினும் இதனுடைய தேகம் நிற்குமென்பது தோன்றவில்லை யென்று பலர்க்கும் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

மற்றும், அம் மடாலயத் திருப்பணிக்காகவந்த சிமிண்டை யெடுத்து வேலை நடத்துமாறு சுவாமிகளிடம் ஆக்ஞை கேட்க, சுவாமிகளதற்கு அச் சிமிண்டை யிப்போது எடுக்க வேண்டாம். அதற்குச் சமீபத்திலேயே மற்றுமொரு வேலை யிருக்கின்றது என்றருளிச் செய்தனர். அவ்வாறே அச்சிமிண்டு மிருந்தது.

இவ்வாறு, சுவாமிகளின் திருமேனி நீங்கிவிடுமென்று தெரிந்து கணக்கிறந்த சனங்கள்வந்து சூழ்ந்து சுவாமிகளின் குண மகிமைகளை ஆங்காங்கு போற்றிக்கொண்டு இரவும் பகலு மிடைவிடா திருந்தனர்.

அப்போது சுவாமிகள், ஆனாலும் இந்த உடம்போடிருப்ப தருவருப்பு என்று எண்ணிக்கொண்டு உடல் விழும் மூன்று தினங்களுக்குமுன், அன்பு மிக்குள்ள இராசா பகதூர் டாக்டர் அவர்கள் முதலிய பல சீடர்களுக்கும் தத்துவவுண்மையைப் போதித்துவிட்டு, சம்போ, சம்போ என்னும் சிவநாமத்தை மிகுந்த ஓசையுடன் அகோராத்திரம் சொல்லிக்கொண்டிருந்தனர்.

சிவப்பிரகாச வள்ளலார், சிவனுக்குப் பல்லாயிர நாமங்களிருப்பினும், சம்பு எனக் கூறியதோ, அநுபவிக்கப் படுகின்ற சுகங்களனைத்தும் ஆன்மாவின் பிரதிபலனமா மாதலா

லும், சுவர்க்கம் சுழுத்தி, உபேட்சை, நிட்டை முதலிய அவத்தைகளிற் றோன்றுஞ்சுகம் வேறுசுகம் வருவதற்கு வழியில்லாமையின் தனது ஆன்ம சுகமேயாதலானும், தமது சொரூபம் சுகாலயமாகிய சம்புஎனப் படுவதாகும், என்னுங் குறிப்பென்க.

இவ்வாறு, சுவாமிகள் பீஷ்மர் உத்தராயண காலத்தை நோக்கிக் கொண்டிருந்ததுபோல் மூன்றுநாளும் சிவ நாமம் பண்ணிக்கொண்டே பிராரத்துவ கருமத்தை நோக்கிக் கொண்டிருந்து பிங்கள ஆண்டு பங்குனித் திங்கள் குருவாரத்தில் தமது தூலதேகத்தை சர்ப்பம் சட்டை யுரிப்பதுபோல விட்டுவிட்டு, குடமென்னும் உபாதிபோனல் குடாகாயமும் மகாகாயமும் ஒன்றே யாவதுபோல் உடம்பு என்னும் உபாதி போனவுடன் அடிநடு முடியின்றி அகம்புற மின்றிய விதேக கைவல்யத்தை யடைந்தனர்.

நித்திய, முத்தராயிருக்கின்ற சீவன் முத்தர்களுக்கு முத்திப் பேறடைதல் பிறர் நோக்காலாம். அது பற்றியே உடம்புடனிருக்கும்போதே ஆகாத மானம் விட்டு அரிய முத்தியை யடைந்த பட்டினத்தடிகளும்,

> " போனாலும் போறு இருந்தாலும் பேறிது
> பொய்யன்றுகாண் "

என்று திருவாய் மலர்ந்தருளினர். உடல் நழுவியதன் பின்னரே முத்தியென்பது வேதாந்த மரபன்று.

---

உ

ஓம் மஹா கணபதயே நம:

சிவமயம்.

ஸ்ரீ கோயிலூர் வீர. சுப்பைய சுவாமிகளியற்றிய

## ஸ்ரீ சிவப்பிரகாச ஞான தேசிகர் விதேக முக்தி

# இரங்கற்பா.

---

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஓமெனும் பொருளை யுலகருக் கருள
வுண்மையின் பிறைவனே வந்தா
னாமென வெவரும் வழுத்திட வொளிர்ந்த
வண்ணலே! யெண்ணரு மடியார்
தாமெனச் சிவத்தை யறிந்திட வறையுந்
தண்மொழி கேட்குநா ளென்றோ?
சேமமெய் வியாசர் பாடியி லிலங்குஞ்
சிவப்பிர காசதே சிகனே. (1)

தவத்தனிப் பெயரை நின்றனுக் களித்த
தந்தையுந் தாயரு மென்னே!
பவத்தினி னோற்ற நோன்புகொல்? லறியேம்
பண்டைமா மறைப்பொரு ளிலக்கித்
திவத்தினைத் திருண மெனநினை தரவே
திவ்விய திருட்டியைத் தருவோய்!
சிவத்திரு வியாசர் பாடியி லிலங்குஞ்
சிவப்பிர காசதே சிகனே. (2)

உடலிரண் டுயிரொன் றுண்டென வுலக
ருரைப்பதைக் கேட்டவா கண்டே
விடலரும் நேய மிகுத்தவர் தமையும்
விட்டுநீ நீங்கிய தென்னே!
கடலருங் கருணைக் கண்ணுடை வள்ளால்!
கனவினும் நினைமறந் திடவோ?
திடமுள வியாசர் பாடியி லொளிருஞ்
சிவப்பிர காசதே சிகனே. (3)

அருங்கனி பலவு மருந்திடு முணவு
மையநின் கரமளித் ததுபோ
லிருங்கனி வுடைய தாயரு மீயா
ரென்றிடி லெழிற்பெருந் தயையை
யொருங்குண ராதி சேடனு முரைத்தற்
கொண்ணுமோ? கண்ணுதன்மறவாச்
சிருங்கையென் வியாசர் பாடியிற் கதிர்த்த
சிவப்பிர காசதே சிகனே. (4)

நின்பெயர் போல நின்னுடை யுருவை
நிகிலரு முணர்ந்திட வுணர்த்தி
யன்பினை யளித்த வருமையை நினைந்திங்
கன்பர்கள் யாவருங் குழுமி
யென்பெலா முருக வெங்குநீ மறைந்தா
யிறைவனே! மறைவலா யுரையாய்
தென்புரி வியாசர் பாடியி னிலவுஞ்
சிவப்பிர காசதே சிகனே. (5)

* ஒத்தமெய்ம் மூன்று மொழித்திடு காறு
முத்தமச் சம்புவின் பெயரை
யெத்துணை யிடரை யடையினும் மறவே
லென்றுநீ யுணர்த்திய மவுன
வித்தக வுபதே சத்தினை மறந்து
வீணினட் கழித்திட றகுமோ?
சித்துரு வியாசர் பாடியிற் றிகழுஞ்
சிவப்பிர காசதே சிகனே. (6)

இறைவனை யொளிக்குந் தன்மையே கொண்டோ?
விறைவன தொளியெனக் கொண்டோ?
இறைவன தொளியிவ் வுலகினை யிலக்கு
மியைபினை யியைபெனக் கொண்டோ?
மறைமுடிப் பெயரை நின்றனுக் களித்தார்?
மலர்த்திரு வாய்மலர்ந் தருள்வாய்!
செறிமறை விரியும் வியாசர்பா டியில்வாழ்
சிவப்பிர காசதே சிகனே. (7)

நின்றனைப் புகழ வென்றனா லியையா
நீணிலத் தெம்மனோர் போலக்
கன்றிமெய் வருந்திக் கற்றிடா தரிய
கருணைமுன் குணங்களை யியல்பா
யொன்றின யுனக்கென் வருத்தம துரையா
யொண்பொறி வென்றவீ ரியனே!
சென்றடை வியாசர் பாடியிற் செறியும்
சிவப்பிர காசதே சிகனே. (8)

பரசிவ மெவர்க்கு மவரவ ராகப்
பாவனை யாவதே போல
வரச!நீ யுணர்த்தி யவ்வகை யிருந்த
வருமையை யறைவதே யலது
கரசிவ வொளியென் பெயருடை யிறைவ!
கையுறை யொன்றையுங் காணேம்
சிரசுலாம் வியாசர் பாடியிற் றிகழும்
சிவப்பிர காசதே சிகனே. (9)

மறைமுடி மறையா திருந்திடச் சாது
மானுடர் சங்கமே வகுத்தோய்!
இறைமுடி யிவருங் கங்கையே யெனவு
மிபமுகன் மதமதே யெனவும்
உறைதருங் கருணை காட்டிய வரவோ
யுன்றனிப் பதமலர் போற்றி
சிறையறும் வியாசர் பாடியிற் சிவனுஞ்
சிவப்பிர காசதே சிகனே. (10)

சிற்குணம் நிறைந்த சென்னைவா ழடியர்
சிறப்புடன் மறப்பற வாழ்க
சற்குண வியாசர் பாடிவாழ் முனிவர்
சந்ததந் தவத்துடன் வாழ்க
பொற்குணச் சாது சங்கமே வளர்க்கும்
புண்ணியர் திண்ணமாய் வாழ்க
நற்குண வடிவாஞ் சிவப்பிர காச
நாத!நீ வாழ்கநீ டூழி.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

* இக்கவி: ஸ்ரீ சிவப்பிரகாச ஞான தேசிகர் தேக நீங்குதற்கு முன் மூன்றுதினந் தொடங்கி அந்திய பரியந்தம் உரத்த தொனியால் "சம்பு" சப்தங்கூறி யுணர்த்தியதை யுணர்த்தும்.

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஸ்ரீ கௌர்யை நம:

# சிதம்பரம் பரஞ்ஜோதிசுவாமிக ளியற்றியது.

---

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அருங்கலை முனிவ ரரம்பையர் வழுத்த
வளவினற் போகமே யருந்தும்
பெருந்தவ முடைய விந்திர பதமும்
பிரமனற் பதமு நாடுவனோ?
கருங்கடல் கிடந்த விடமெனுங் காமக்
கள்வனை யொறுத்தவ! நினது
திருந்திய வதன வமுதருந் தினனுஞ்
சிவப்பிர காசவெந் தேனே! (1)

கன்னலுங் கனியுங் கலந்தமு தனைய
கவின்பொழி மதுரவா சகமும்
இன்னலே யொழிய வடியவர்க் குதவு
மெழில்பொழி கமலலோ சனமும்
பன்னரு மறையின் பொருளினை யெளிதிற்
பண்பினர்க் குதவுவல் லபமும்
சின்னமில் வடிவுங் காண்குநா ளென்றோ?
சிவப்பிர காசவென் மணியே. (2)

அன்றய னரியு மமரரும் பலரு
மருங்கடல் கடைந்தநல் லமுதும்
மன்றல்செய் மேக வண்ணனுக் கசோதை
மாதருத் தியவெணை யதுவும்

நின்றன தளிசெய் குளிர்முக வாக்கி
னிகர்த்திடு சுகமதோ ? வுரையாய்
என்றன தாவி தன்னினு மினிய
வெழில்சிவ வொளியெனு மிறையே. (3)

கருணையிற் பெரிய ருலகினிற் சிறந்த
கருதருஞ் சடபர தனுநல்
லொருமைசெய் யுயர்சீ மூதவா கனனென்
னுள்ளிய னென்றுமே யுரைப்பர்
அருணையிற் பெரிய கருணையிற் சிறந்த
ஆரிய ! நின்புக ழறியார்
பொருணணி யுழலும் புந்திய ரன்றோ?
புண்ணிய ருரைப்பாரோ புகல்வாய். (4)

மண்ணினர் புரிந்த வறுமையோ ? வலது
மாகலி செய்தமா தவமோ ?
கண்ணினுள் ளொளிபோற் கலந்துறை யுனது
கவின்பொழி திருவுருக் கரந்தாய்
எண்ணினின் மக்க ளாகிய நாங்க
ளேங்கியே யுடறரித் திருப்ப
நண்ணிநின் னுருவிற் சுகித்திருந் திடநீ
நாடினை யென்சிவ நலமே. (5)

பண்ணிய வினையிற் புண்ணியந் தெரியும்
படிமிசை யென்னுமூ துரையாற்
கண்ணிய வுனது கவினுருக் கரந்த
காட்சியை யெண்ணியே யாங்கள்
விண்ணுறும் கதிரிற் புழுவென மனமும்
விளிவுறப் பார்த்தனீ வியப்பே
திண்ணிய கருணை வள்ளலே யெங்கள்
சிவப்பிர காசமெய்த் தேவே. (6)

தாமரைப் பொகுட்டின் மேலுறை யயனுந்
  தருமனும் வாதரா யணனும்
வாமதே வாதி முனிவரும் வெருவும்
  மதனையுன் மலர்ப்பதத் துணையிற்
சாமரை வீசுந் தவனுமே வெருட்டத்
  தக்கவ னுவனு லதனுற்
போமரைக் கணத்தி னின்றனை யணுகிற்
  போதலும் வருதலும் புதிதோ? (7)

அன்னையி லினிய வருங்கலை யுணர்த்து
  மண்ணலே! கண்ணுதன் மறவாத்
துன்னிய வடிய ரகத்திரு டொலைக்குந்
  தூய! நற் சிவப்பிர காச!
மன்னிய மணியே! மதியுறை யமுதே!
  மக்களிர்! நீங்களும் மரண
மென்னினற் சம்பு நாமமெண் ணுதிரென்
  றெங்களுக் களித்தவெம் மிறையே! (8)

முன்னவ னேமுன் னின்றெது செயினும்
  முட்டின்றி முடிதனல் லியல்பா
மென்னலால் நீயெம் பவமருந் தாகி
  யெங்களுக் கிருந்தனை யினிமேல்
மன்னவ னில்லா வரசியல் போல
  மக்களு மனைவரும் வருந்த
நின்னவ வுடல்விட் டெய்தினை யறிவி
  னின்றிரு வருட்கிது தகுமோ. (9)

வேதனு மறியா முடிபொரு ளுணர்த்தும்
வித்தக வதனமு மெங்கே?
காதலொ டடியார்க் கபயம தீயுங்
கரகம லங்களு மெங்கே?
சாதலொ டிறத்த றடிந்தறி வளிக்குந்
தண்விழிப் பார்வையு மெங்கே?
போதென விரிந்த பாதமு மெங்கே
புண்ணிய! கண்ணினுண் மணியே. (10)

விண்ணினர் விழையுந் திருவினை யடியர்
வீணென வெறுத்திட வுயர்ந்த
கண்ணினை யளித்த கற்பகத் தருவே!
காமனைக் கடிந்தவெம் மிறையே!
மண்ணினி னினது மேனியை மறைத்து
மறையினும் மறப்பனோ வடியேன்
தண்ணளி மகவுந் தாயினை மறக்குந்
தகையதோ? வெமக்குநீ சாற்றாய்! (11)

கருணையிற் பொறையி னினியநன் மொழியிற்
கருதரு குணத்தினிற் சிறந்த
தெருணனி யளிக்குந் திறத்தினி லடியர்
சிந்தைகள் கொள்ளைகொள் குவதில்
அருணையை நிகர்த்தோய்! நின்றன தருளா
லரியநன் மைந்தரா மியாங்கள்
தெருணனி யடைய விருந்துகாத் திடுதி
சிவப்பிர காசவெந் தேவே. (12)

சுபம்! சுபம்!! சுபம்!!!

## பலர்களிரங்கல்.

எங்களைப் பாதுகாக்கவந்த இறையே. யாங்கள், தமது திருமேனியே குறியேது மிலாத சிவமெனக் கொண்டிருந்தோமே, தமது திருநாமத்தையே தாரகமந்திரமெனக் கொண்டிருந்தோமே, தமது திருவடிச் சலமே சகல தீர்த்தமென் றிருந்தோமே, தமது திருவாக்கே மறுபிப்பெனவரும் மயற்பிணி மருந்தென் றிருந்தோமே, தம்மை உள்ளத்திலிருந்தும் ஒளித்துக் கொண்ட பரனுடைய கள்ளத்தைத் தவிர்த்துக் காட்டிய கருணைக்கடலென் றிருந்தோமே, யாங்கள் குருவலாற் றெய்வத்தை மதித்தல் செய்யாத மக்களன்றோ? தாம் எங்கட்கு வாய்த்த தந்தையன்றோ? எங்களையிங்கு தவிக்கச்செய்து அருட்டிருமேனியை மறைத்துக் கொண்டது தமது பெருங்கருணைக்குத் தகுமோ? தகுமோ? தம்மைப்போன்ற குணக்கடலாகிய குரவர்களுண்டென்பது நூல்களிலுங் காணோமே! உருவா யிருந்தருளில் உலகம் பொறுக்காதென்று அருவுருவா யிருந்தருளத் திருவுளங் கொண்டீரோ? அருவேயாகி எங்களுடைய அந்தக் கரணத்தில் இருக்கவிழைந்தீரோ? அந்தோ! எங்களுடைய துர்ப்பாக்கியம் என்னே! என்னே! என்று பலவாறு கூறி மாணவர் கூட்டத்தாராகிய ஒரு சாரார் ஆடிப்பாடிப் பதைபதைத்தலறினர்.

அம்மாவரட்டும்; அம்மாவரட்டும்; உட்காரட்டும்; உட்காரட்டும் என அன்னையினும் மன்னிய தண்ணளியுடன் அழைத்த அண்ணல், பேதமையை ஒரு அணிகலனாகவுடைய எங்களை யினிமேல் யாவர் முத்திநெறிகாட்டி பத்திமுறை பூட்டி அஞ்ஞான விருளோட்டி தத்துவஞானத்தையூட்டி மனோலயத்தை மூட்டி ஆட்கொள்பவர், தம்மைச் சூழ்ந்து யாங்கள் நிட்டையில் நிலைக்கும் நேரத்தில், அம்மா,

அப்படியே செய்யட்டும்; அம்மா, அப்படித்தானம்மா செய்யவேண்டும் எனப் பன்முறை பரிவுடன் திருவாய்மலர்ந் தருளும் திருமுக மெங்கே? கருணை மலிந்து அருள் ததும்பி இருளிரியப் பார்க்கின்ற அருட்பார்வை யெங்கே? அநுபவத் தில் ஐயப்பாடடையுங் காலத்தில் எங்கள் இதயத்திற் கியைந்தவாறும், எங்கள் பாவனைப் பெருக்கின் பயனாகவும் அதுதானம்மா உண்மை; அப்படித்தானம்மா தோன்றும்; அதை விடக்கூடாதம்மா என்று அதில் மறித்து மறித்தும் ஆதரவுண்டாமாறு அன்போடு திருவாய் மலர்ந்தருளும் வாக் கியத்தை கேட்கப் பெற்றிலேமே; அவ் வாக்கை இன்னும் ஒருகால் காதாரக் கேட்டு மனமார ஆனந்திப்ப தென்றோ? எவ்வளவு படித்த பெரியாரிடத்திற் போனபோதிலும் அவர வர்கள் மனதிற்குத் தோற்றியவாறு சொல்லுகின்றார்களே யன்றி எங்களுடைய மனோபக்குவ முணர்ந்து சொல்லுவார் யாரையும் காணோமே என, சுவாமிகளின் மாணவிக் கூட்டத் தாராகிய ஒருசாரார் பலவாறு அழுதனர்.

எங்களுடைய குடும்பத்தில் உள்ளத் தெழுகின்ற முத்தாபத்தால் வெந்து சிந்தாகுல முடையவர்களாய் மனம் வருத்தமுற்றபோது தங்களுடைய அன்பினா லெழும் இன்சொற்கள் இழுத்துவர தங்களை வந்து தரிசிக் கில் உடனே அம் மனத்துயரனைத்து மாறிவிடுமே எங்களை யாண்டவா, அருவனாயினும் அன்பர்க்குருவனாய் வருவ னென்று மாமறை கூறிவாறு எங்களுடைய புண்ணி யப் பெருக்கால் அவதரித்த அருட்பெருந் தகையே, எங்க ளைக் காண்பதற்கு முன்னரே எழுந்து எதிர் கொண் டழைத்து வரட்டும் வரட்டும் என்று வாய்குளிர மனங்குளி ரச் சொல்லி தாய் மகனை யழைப்பதினும், ஆ கன்றைக் குறித்து வருந்துவதினும் பெருங்கருணையுடன் அழைக்

கின்ற திருவாக்கு எங்கே? திருமேனியாலும், திருவேடத்தாலும், திருவாக்காலும், மனத்தாலும் உடம்பெல்லாம் பொங்குங் களிப்பைத் தங்கும்படி செய்கின்ற ஆனந்தவடிவோய், அன்பின்றியும் அடியேம் அளிக்கின்ற சிற்றுண்டியை பேரன்புடன் பெற்றுக்கொண்டு தாமும் உண்டு அருகிலுள்ள அடியவர்களுக்கும் அன்பர்களுக்கும் ஊட்டுவிக்கும் அருட்பெருங்கடலே, பிறர் துன்பத்தைத் தமது துன்பம்போற் கொண்டு மனங்கரையும் கிருபாநிதியே, எங்கொளித்தாயோ? அல்லது எங்குமாய் நின்றாயோ? எங்கள் மனத்தின்கண் தான் ஒளித்தனையோ? என்று பலவாறு கரைந்து கரைந்து நினைந்து நினைந்து திருவுருவைக் கண்டு கண்டு அன்பர்களிலொரு சாரார் மனம் பதைபதைத்தனர்.

யாங்கள் எப்போது பார்க்கினும் ஒரு கல்லின்மேல் கோவண மொன்று மாத்திரம் உடுத்திக்கொண்டு உட்கார்ந்திருப்பர். படுக்கும்போது ஒரு கையையே தலையணையாக வைத்துக்கொண்டு படுப்பர். அசையாமல் கண்மூடிக் கொண்டிருப்பர். பலர் பழிக்கினும், வைபினும், வாழ்த்தினும் புன்னகை கொள்வர்.

திருக்குறள்.

"இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவதேவர் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றாரேயன்றி அவ்வியல் புடையார் யாரையுங் கண்டிலோம். இவர் அத்தன்மையர்தான்; இதிற் சந்தேகமில்லை. இவர் இன்னுஞ் சிலகாலம் இருந்திருப்பரேல் நலமா யிருக்கும் என்று ஒருவகையான அன்பர் கூட்டத்தார் பலவகையாகக் கூறிக்கொண்டு தழுதழுத்த வாக்குடன் கண்ணீருகுப்பர்.

இவ்வாறு, அன்று, பெரியோர், அறிஞர், அடியவர், அன்பர் முதலிய பல்வகைப்பட்ட பல்லாயிரம்பேர் கடலொலியினும் பெருவொலி யெழுமாறு ஓலமிட் டலறினர். தம்முடைய நலங் கெட்டதற்கும், வருவாய் நீங்கியதற்கும், பிறர் மெச்சுமாறும், மற்றும் பல நிமித்தத்தானும் பொய்யழுகை கொண்ட உலகத்தார் அன்று காண்பரேல் அவர் மனம்யாது கருதுமோ? அறிகிலேம்,

அதுபற்றியே,

திருக் குறள்.

"அன்பிற்கு முண்டோ வடைக்குந் தாழ்வலர்
புன்கணீர் பூச றரும்"

என்று திருவாய் மலர்ந்தருளினர். அறிவுடையோர்களுக்குப் பெரியோர் துணையேயன்றி பிறிதோர் பெரும் பொருளுண்டோ? உயிரினும் மேம்பட்ட பெரியாரை யிழந்தார்களுக்கு உற்றதுன்ப மியை புடைத்தேயாம்.

## ஸ்ரீகர-சிவப்பிரகாசப் பெருமானாரின் சமாதி நிலயச் சிறப்பு.

உயிர் நீங்கிய உடல், பஸ்மாந்தம், ரசாந்தம், விஷ்டாந்தம், அதாவது; கொளுத்திவிடல், புதைத்துவிடல், பறவை முதலிய வைகளுக்கு இரையாக்கல், என மூவகைத்தாமாயினும் தத்துவ ஞானியின் திருமேனி திருவாலய வடிவமாம். அதுபற்றியே,

"ஊனுடம் போராலயமாம்" என்று பெரியாரும் கூறினர்.

"சரீரம் கிருகம் ........" என்று சங்கரபகவத் பாதரும் கூறியுள்ளார்.

வீரசைவமும் அங்கலிங்கத்தைப்பற்றி விதந்தோதுகின்றது.

இனி தத்துவ ஞானிகள் சரீரத்துட னிருக்கினும், சரீரத்துடன் கூடாதிருக்கினும் சச்சிதானந்த பரப்பிரம சொரூபமே யாவர்.

இதையே,

கைவல்ய நவநீதம்.

"நாசச் சரீரத் திருக்குஞ் சரீரிதனை நால்வேத மாவாக்கியம்
நீ சச்சிதானந்த மென்றிடினும்"

என வலியுறுத்துகின்றது. அங்ஙனமாயினும், உலக நோக்கிற்கு தேகமுள்ளது சீவன் முத்தி யென்றும், தேகம் நீங்கியது விதேக முத்தியென்றும் பாகுபாடு புலப்படுகின்றது.

மற்றும் தத்துவ ஞானிகளின் தேகம் பிரமஞான மாகின்ற தீயாற் சுடப்பட்டதா மாதலின் பின்னரும் அதை பூதாக்கினியால் சுடல்கூடா தென்பது நூல்களின் கருத்தாம். இதுபற்றியே,

பகவத் கீதை.

"ஞானத்தீயால் பொடியாக்கப்பட்டது அருச்சுனா," என்று கண்ணபிரானும் திருவாய் மலர்ந்தருளினர்.

மற்றும்,

திருமந்திரம்

"அந்தமில் ஞானிதன் னாகந் தீயினில்
வெந்திடின் நாடெலாம் வெப்புத் தீயினில்
நொந்தது நாய்நரி நுகரி னுண்செரு
வந்துநாய் நரிக்குண வாகும் வையமே" என பெரியார்

திருமேனியைச் சுடல்கூடா தென மறுத்தலானும்,

திருமந்திரம்.

"அந்தமில் ஞானி யருளை யடைந்தக்கால்
அந்த வுடல்தான் குகைசெய் திருந்திடில்

சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரும்
அந்தமி லின்ப அருள் பெறுவாரே"

என அத் திருமேனியை வைத்து வழிபடல் வேண்டுமென்று அறிவுறுத்தலானும்,

தத்துவ ஞானியின் திருமேனியை, ஆருதார வடிவமாய் மண்ணைக் கெல்லி மந்திர பூர்வகமாய் சமாதி முறைப்படி அதிலிருத்தி, அதன்மேல், வில்வமரமேனும், சிவலிங்கமேனும், அரசமரமேனும் வைத்து வளர்த்துப் பூசித்தல் வேண்டுமென, திருமூலர் திருவாய் மலர்ந்திருத்தலானும்,

சிவப்பிரகாச தேவனாரின் திருமேனியை நூன்முறைப்படி குகைசெய் திருத்தி, அதன்மேல் சிவலிங்க வடிவாய் சுவாமிகளை யெழுந்தருளச் செய்து திருக்கோயிலமைத்து, இறுதிக்காலத்தில் சுவாமிகளின் ஆணையைப் பெற்ற அவ்வியாசர்பாடி மடாலயத்தின் தலைவர்களான அரும்பாக்கம் சுவாமிகள், மூர்த்தி சுவாமிகள், முத்துக்குமார சுவாமிகள் ஆகிய மூவரும் சிவாலயம்போல் இரண்டு காலம் நைவேத்திய சோடசோபசார ஆராதனைகளும் நடத்தி வருகின்றார்கள்.

சிவப்பிரகாசப் பெருமானாரும் முன் உருவாயிருந்து உலகிற்கு அருள்செய்து வந்ததுபோல் அருவுருவமாகிய சிவலிங்க வடிவராயிருந்து தம்மை வழிபடுவோருக்கு வேண்டிய பலன்களை யளித்து அருள்புரிந் தாண்டு வருகின்றனர்,

இப் புண்ணிய சரிதத்தை நியமத்துடன் பாராயணஞ் செய்வோர் மனந்தூயராய் இகலோக பரலோக எல்லா நலங்களையு மடைவர்.

கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள்
சரித்திரம் முற்று.

# திருநாம சங்கீர்த்தனம்.

## குறள் வெண்பா.

செய்ய கர பாத்ர சிவப்பிரகா சையனது
துய்யபதந் தானே துணை.

### எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

புகலொளியாய்த் துரியமுமாய்ப் புரணமுமாய்ப் புனிதமுமாய்
போக்குவர வற்றவருட்பொருளேநின் பாதநம [ப்
வகிலமெலாமாகி யவை யலதாகி யிலகுமொரு
வமலாநற் சிற்சொரூப வதிபா நின் பாதநம
சகமுழுதுந் துருவினு நின்றனை நிகர்வாரொருவரிலை
சாந்தசம நோக்குறு மோர்தலைவா நின் பாதநம
திகழு புருடார்த்தமதையே தெளிவாய் நவிலவல
சிவப்பிரகா சாயநம சிவப்பிரகா சாயநம. (1)

ஓடுடனே திரவியமு முறவுடனே பகைஞரையு
மொன்றாக நோக்குமொரு வுத்தமநின் பாத நம
வாடுமிக வறியரையு மன்னுபெருந் தனிகரையு
மனதில் சம மாக்கருது மகிபா நின்பாதநம
வோடியுல கெங்கணுமா ராய்ந்தாலு நின்போல் வார்
ரொருவருள ரோவெமக்கிங் கோதாய்நின் பாத நம
தேடுமடி யார்க்கருளுஞ் செழுமணியே கற்பகமே
சிவப்பிரகா சாயநம சிவப்பிரகா சாயநம. (2)

உன்செயலு முன்குணமு முன்னுகினுங் கேட்பினுமெ
னுடலுருகி யுயிருருகி யுள்ளமெலாந் தானுருகிப்
பின்செய்செய லின்னதென வறிகிலன்யான் பேருலகிற்
பித்தேற்றி விட்டனையே பெரியோய்நின் பாதநம

வன்செய்கை செய்குனரு முன்றனது மாசமுகம்
வந்தாலோ நன்னெறியின் மன்னுவர்நின் பாதநம
தென்பயிலும் பங்கஜவி லோசனமார் திவ்யமுக
சிவப்பிரகா சாயநம சிவப்பிரகா சாயநம. (3)

அல்விமலர்ப் பண்ணவனு மச்சுதனு மற்றுமுள
வமரர்களும் புகழுமிக வற்புதநின் பாதநம
தொல்லைவினை யெதுவரினும் வாடாமன் முககமலஞ்
சுரியாம லுறையுமொரு சுகுணநின் பாதநம
வெல்லையிலாப் பேரின்ப வெள்ளமதின் மூழ்கியுல
கெல்லாமு மூழ்கும்வண மெண்ணுமொரு தூயநம
செல்லல்களைந் தியாவருமே யின்பமுறச் செய்யவல
சிவப்பிரகா சாயநம சிவப்பிரகா சாயநம. (4)

உண்டோநின் போலொருவ ருண்மைநிலை யினினின்றே
யோதுமிக பரவுபகா ரங்களெலாம் புரிவையுனைக்
கண்டோர்க ளநுதினமுங் கண்டிடவே வாஞ்சைகொளுங்
கற்கண்டே தேனேமுக் கனியேநின் பாதநம
பண்டேவந் துறுவினையா வும்பாற வருளும்ரசப்
பழமே நற்சுவையே சிற்பரமேநின் பாதநம
திண்டாடு முலகர் வினைதீர்த்தருள விப்புவிசேர்
சிவப்பிரகா சாயநம சிவப்பிரகா சாயநம. (5)

பயந்திடுமோ ரன்னையினுங் கடையேன் மேற்
பரிவுடையாய்ப் புகழ்மருவும் பண்ணவநின் பாதநம
நயந்தருநல் வசனமலா னவையுறுமோர் வசனமதை
நவிலவுணர்ந்தில மெமது நம்பாநின் பாதநம

கயந்தலை நின்றுந்தாகந் தணியார்போற் கண்ணெதிரே
கண்டுமுன் றுயர்வை யெவர் காண்பார்நின் பாதநம
செயந்தரு நல்லத்துவிதந் தெளிவாகச் செப்புமொரு
சிவப்பிரகா சாயநம சிவப்பிரகா சாயநம. (6)

மன்னிய நற் பலகலைபு மனம்வாய்மெய் யிவைகளுடன்
மறைநான்குந் தேடரிய மகிபாநின் பாதநம
துன்னுமொளிக் கொளியாகிச் சுயவொளியா யெங்குநிறை
சுடரே மெய்வரமருளுஞ் சொரூபாநின் பாதநம
வன்னியமொன் றிலதாகித் தானேதா னாகியம
ரற்புதனே மெய்ப்பொருளே யனகாவிங் கழகார்ந்த
சென்னியென மன்னிமிகத் தேங்குபுகழோங்கு மெழிற்
சிவப்பிரகா சாயநம சிவப்பிரகா சாயநம. (7)

உலகிலுள மன்பதையு னுண்மைதனை யொருநாளு
மொருவருமே யறியார்க ளுசிதாநின் பாதநம
வலகில்பல கலையாய்ந்து மறவோர் தம் முண்மையினை
யறியார் கண்ணுள ரறிவா ரையாநின் பாதநம
கலகமிடுஞ் சமயர்களுங் கண்டபடி கூறுமவர்
கலகமற வோதுமொரு காரணநின் பாதநம
திலதமென வீங்குமிகத் திவ்வியதே சோங்கியமர்
சிவப்பிரகா சாயநம சிவப்பிரகா சாயநம (8)

ஓதுபுராணப் பொருளு முபநிடத மெய்ப்பொருளு
மொன்றெனவே யோது முய ருத்தமநின் பாதநம
நீதமுட னித்தரையி லுற்றிடுவோ ரியாவர்களு
நித்யசுக மெய்தநினை நேயாநின் பாதநம

வாதி நடு வந்தமிலா தப்பாலுக் கப்பாலா
யத்துவித மாயமரு மத்தாநின் பாதநம
தீதென்ப தேயிலதாய்த் தெய்வீக மாத்திகழுஞ்
சிவப்பிரகா சாயநம சிவப்பிரகா சாயநம. (9)

குருவே நின்பாத நம குன்றே நின்பாத நம
கோனே யுன்பாத நம வானே யுன்பாத நம
மருவே நின்பாத நம மணியே யுன்பாத நம
மலரே நின்பாத நம வடிவே யுன்பாத நம
வருவே யுன்பாத நம வரசே யுன்பாத நம
வனகா நின்பாத நம வருளே நின்பாத நம
தெருளே நின்பாத நம தெளிவே நின்பாத நம
சிவப்பிரகா சாயநம சிவப்பிரகா சாயநம. (10)

## வாழ்த்து.

வாழ்க மெய்த்தவர் வாழ்கத் திருவருள்
மூழ்க வன்பினில் மூதற வோங்குக
எழ்மை யற்றுவிவ் விந்தியர் வாழ்கமை
மே[illegible]ழ்சி வப்பிர காசம் புவியிலே.

எங்கும் மங்கலம் பொங்கிவாழ்க.